O/L 89
பழைய பாடத்திட்டம்
மீட்டல் வினாவிடை
விஞ்ஞானம் - இராசெல்வ-வடிவேல்
கணிதம் - இந்திரன்
சமூகவியல் - வேலா
தமிழ் - பண்டிதர்
ஆங்கிலம் - மகாலிங்கம்
வர்த்தகம் - நவம்
Niru Tuition Centre
KONDAVIL

வார முரசொலி
VARAMURASOLI

O/L 89
புதிய பாடத்திட்டம்
ஆண்டு - 5 முதல்
ஆண்டு - 11
சகல பாடங்களும்
நடைபெறுகின்றன
NIRU TUITION CENTRE
KONDAVIL

முரசு 3 ஒலி 47 ஞாயிற்றுக்கிழமை 15-01-1989 (தை 2) ஜ. ஆகிர் 06 விலை ரூபா நான்கு

★ முன்னர் அறிவிக்கப்பட்டதுபோல ஜூலை 5-ல் நடைபெறுது

# சர்வஜன வாக்கெடுப்பு திகதி காலவரையின்றி ஒத்திவைப்பு

## உடனடியாக நடைபெறும் சாத்தியமில்லை

வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பு தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் ஜூலை மாதம் ஐந்தாம் திகதி நடத்தப்படவிருந்த சர்வஜன வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கொழும்பிலிருந்து கிடைத்த மற்றொரு தகவலின்படி இந்த சர்வஜன வாக்கெடுப்பு இப்போதைக்கு நடைபெறுது என்றும், காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் சர்வஜன வாக்கெடுப்புக்கான திகதி ஸ்ரீலங்கா அரசினால் அறிவிக்கப்பட்டதையடுத்து பல தரப்பிலிருந்தும் இதற்குப் பலமான எதிர்ப்புக் கிளம்பியது.

தூதுவர் டிக்ஷித் கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்த சமயம் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் இதுபற்றி ஆலோசனை நடத்தியிருந்தார்.

ஆகக்குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அமைதிப்படையினரில் இருவர் பண்டத்தரிப்பு சம்பவத்தில் பலி

பண்டத்தரிப்பில் அமைதிப்படைக் காவலில் இருந்த சில இளைஞர்கள் தப்பிச் செல்ல முயல்கையில் ஏற்பட்ட துப்பாக்கிச்சமரில் இரு அமைதிப் படையினர் கொல்லப்பட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது.

இன்னுமொரு சம்பவத்தில் வவுனியாவில் போராளி ஒருவரும் அவரின் மெய்ப்பாதுகாவலரும் அமைதிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக இந்திய வானொலிமேலும் தெரிவித்தது

## பற்குணத்துக்கு புதிய பதவி

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. எஸ். பற்குணம் வடகிழக்கு மாகாண முதலமைச்சரின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

தற்போது மன்னாரில் உதவி

→16 ஆம் பக்கம் பார்க்க

## நானூறு புதிய ஆசிரியர்களுக்கு சமகால முன்சேவை பயிற்சி

புதிதாக நியமனம் பெற்ற சுமார் நானூறு ஆசிரியர்களுக்கு இம்மாதம் 20 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நான்கு பாடசாலைகளில் ஒரேநேரத்தில் முன்சேவைப் பயிற்சி வழங்கப்படும்.

இவர்களுக்கு இரு பிரிவாக அடுத்தமாதம் 11ஆம் திகதி வரை பயிற்சி வழங்க முன்னர் ஆலோசிக்கப்பட்டிருந்தது.

ஆனால் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம்

→16 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வங்கிக் கிளைகளுக்கும் முகவர்கள் நியமிக்கப்படுவர்

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சகல வங்கிக் கிளைகளும் முகவர்களை நியமிக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இவ் வருட மார்ச் மாத முடிவுக்குள் முகவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். வங்கிகளின்

→16 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க நிறுவன உதவியுடன் யாழ். நூலகம் திருத்தப்படும்

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகில் அமைந்துள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான நூலகம் திருத்தி அமைக்கப்படவுள்ளது. அமெரிக்க நிறுவனம் ஒன்றின் உதவியுடனேயே இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக தெரிகிறது.

இத்திட்டத்துக்கு தேவையான நிதியளவைக் கணிப்பீடு

→16 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வந்த மூன்று ஜீப்புகள் ஓமந்தையில் கடத்தப்பட்டன

நேற்று முன்தினம் யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கென கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த மூன்று புதிய ஜீப் வண்டிகள் ஓமந்தையில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த புதன்கிழமையும் இதே பாணியில் யாழ். பொலிஸ் அதிபர் அலுவலக பாவனைக்கு வந்த ஒரு ஜீப் வண்டி புளியங்குளத்தில் கடத்திச் செல்லப்பட்டிருந்தது அறிந்ததே.

## பூநகரி-மன்னார் வீதியருகில் துப்பாக்கி சூட்டுக்கு இருவர் பலி

(வவுனியா)

பூநகரி - மன்னார் வீதியில் நாலாம் கட்டை இராணுவ முகாம் அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஈ.என்.டி.எல் எப். இயக்க உறுப்பினர்கள் இருவர் மரணமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் ஷெல் தாக்குதல்கள்

→16 ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறை பிரதானவீதி பொதுமக்கள் பாவனைக்கு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம், பொலிஸ் நிலையம் இருந்த ஊரிக்காடு பிரதான வீதி

→16 ஆம் பக்கம் பார்க்க

# காங்கேசன்துறை தடை முகாமிலிருந்த தமிழ் இளைஞர்கள் 25 பேர் நேற்று விடுதலை

இந்திய இராணுவத்தினரால் அண்மைக் காலங்களில் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் இருபத்தைந்துபேர் பொங்கல்தினமான நேற்று விடுதலை செய்யப்பட்டனர். நேற்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் இவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து நகரிலுள்ள சில வர்த்தகர்கள், பிரமுகர்கள் முன்னிலையில் அமைதிப்படையினரால் விடுவிக்கப்பட்டனர். இவர்களை விடுவிக்கும் வைபவத்தில் இராணுவ அதிகாரிகள், ஈ.பி. ஆர். எல். எப்., ஈ. என் டி எல். எப். உறுப்பினர்கள், மற்றும் அங்கு வந்த பிரமுகர்களில் சிலர் ஆகியோர் உரையாற்றினார்கள். இவர்களை விடுவிப்பதற்கு முன்னர் எவ்வித தீவிரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என இராணுவ அதிகாரிகளினால் அறிவுறுத்தப்பட்டனர். விடுதலையானவர்களும் தாம் திருந்தி நடப்பதாக உறுதியளித்தனர். விடுதலையானவர்களில் ஒருவர் வலது கால் துண்டிக்கப்பட்ட நிலையிலும். மற்றொருவர் ஷெல் தாக்கி காலில் காயமடைந்த நிலையிலும் காணப்பட்டனர். இவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அமைதிப்படையால் அனுமதிக்கப்பட்டனர். விடுதலையானோர் பெயர் விபரம் வருமாறு:- புஸ்பம் எட்வேட் (24) குருநகர், எம். கணபதி (26) குருநகர், வீ ஜெயக்குமார் (29) மயிலிட்டி, ஆர். சிவகுமார் (22) கோண்டாவில், எஸ் கலாரூபன் (25) புத்தூர், கே. மதுரகவி (23) சுண்டுக்குளி, ஏ உதயகர்ணன் (18) இணுவில், ச. மனோகரசீலன் (34) இணுவில், அன்ரன் செல்வகுமார் (26) யாழ்ப்பாணம், கே. பிரதீபன் (17) அளவெட்டி, எஸ். சிவச்செல்வன் (18) பண்டத்தரிப்பு, து. சிவனேஸ்வரன் (18) உடுப்பிட்டி. மொகமட் மர்சீன் (30) யாழ்ப்பாணம், வீ. சுசிலபாக்கியம் (54) வல்வெட்டித்துறை, எம். இராமச்சந்திரன் (32) சிறுப்பிட்டி, ரீ. திருமகன் (19) அச்சுவேலி, எஸ். சந்திரசிவம் (32) கோப்பாய், இ. ரஞ்சனுதன் (34) பொலிகண்டி, கே. ஜெகநாதன் (22) கிளிநொச்சி, மு. தனிஸ்வரன் (19) அச்சுவேலி, எப். அன்ரனி ஜோயிஸ் (19) இளவாலை, எஸ் சுப்பிரமணியம் (29) உடுப்பிட்டி, எம். ரவீந்திரன் (26) கோப்பாய், ஏ. அல்பிறட் (20) மருதடிலேன், அ. பராஜிதன் (18) ஊர்காவற்றுறை.

# வாகனங்களுக்கான
# தகுதிச் சான்றிதழ் வழங்கல்
## Fitness Certificates for Motor Vehicles

1989-ம் ஆண்டுக்கான வாகன லைசென்ஸ் பெறுவதற்கு தேவையான வாகனப் பரிசோதனையும், சான்றிதழ் வழங்குதலும் எமது கீழ்க்கண்ட புதிய முகவரியில் நடைபெறுகின்றன என்பதை வாகனச் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கின்றோம்.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**
**10, குறுசெற் ஒழுங்கை (கச்சேரி - நல்லூர் வீதி)**
**சுண்டுக்குளி யாழ்ப்பாணம்**
[கச்சேரியிலிருந்து 200 யார்]

01310


# அறிவித்தல்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும் பாதிப்புற்றோர்க்கான நிவாரணம் வழங்கல்

1983-ம் ஆண்டு யூலை மாதம் 24-ம் திகதியில் இருந்து ஏற்பட்ட இனக்கலவரங்கள், வன்செயல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், தொடர்ந்த உள்நாட்டுப் பதட்டநிலை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கள், ஊனங்களுக்கான நிவாரணம் வழங்கும்வேலைகள் இச்செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்நிவாரணத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனையில் கீழ்க்கண்ட திகதிகளில் வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் வழங்குவதற்கான தகைமை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒருங்கிணைந்த புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ''குடும்பப் பதிவு அட்டை''யின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பங்கள் இணைப்பிரதியில் பூர்த்திசெய்யப்பட்டு கீழ்க்கண்ட திகதிக்குமுன்பு பகுதிக் கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்படல்வேண்டும். இதுசம்பந்தமான மேலதிக விபரங்களைத் தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலோ அல்லது கிராமசேவை உத்தியோகத்தரிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் திகதிகள் | விண்ணப்பப் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கிராம சேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட வேண்டிய திகதி |
|---|---|---|
| 1. மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்) | 23.01.89 முதல் 27.01.89 வரை | 1989.02.15-ம் திகதிக்கு முன்பு |
| 2. துணுக்காய் | 30.01.89 முதல் 03.02.89 வரை | 1989.02.22-ம் திகதிக்குமுன்பு |
| 3. புதுக்குடியிருப்பு | 13.02.89 முதல் 17.02.89 வரை | 1989.03.08-ம் திகதிக்கு முன்பு |
| 4. கரைதுறைப்பற்று (முல்லைத்தீவு) | 27.02.89 முதல் 03.03.89 வரை | 1989.03.22-ம் திகதிக்குமுன்பு |

**க. பொன்னம்பலம்**
முல்லைத்தீவு அரசாங்க அதிபர்.

கச்சேரி,
முல்லைத்தீவு. 08.01.1989

01337




# அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்''
-பாரதியார்

20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி ''பாரதி பாடல்கள்'' என்ற நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

01361


# சிறு விளம்பரம்


### Grill Inn
Grill Inn Galaxy Catering division order undertaken for wedding reception, Birthday, Cocktail parties other special function etc Address: Palaly Road Thirunelvely. or 30, Kannathiddy Road, Jaffna.
01168

### பயிற்சிகள்
குறுகியகால விசேட தொழில்நுட்ப,பயிற்சிகள் Radio, TV, Air conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், வைண்டிங், பிளம்பிங், மோட்ட மெக்கானிசம், Typing, Spoken English, கட்டிட வரைதல், புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த பொறியியல் நிபுணர்களால் கற்பிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி, சந்தி, யாழ்ப்பாணம்.
01357

### தொழிற் பயிற்சி
Computer Programming (BASIC), ரெலிவிசன் வீடியோ டெக் றிப்பியறிங், றீவைண்டிங், வயறிங், வெல்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம்: 15-01-89 Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி. (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம்.
01261

### தேவை
ஆங்கில அறிவுள்ள காரியாலய உதவியாளர் தேவை. முன் அனுபவமற்றவருக்கு பயிற்சியளிக்கப்படும். காலைநேரம்நேர் முகமாய் அல்லது தபால் மூலம் விண்ணப்பிக்கலாம் பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், 93, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
01346

### விற்பனைக்கு
நீர்வேலியில் பருத்தித்துறைவீதிக்கும் அரசகேசரிப்பிள்ளையார் கோவிலுக்குமிடையில் அழகியசிறிய வீடு 1½ பரப்புக் காணியுடன் விற்பனைக்கு. தொடர்பு. விளம்பர இல. 239 மே/பா. முரசொலி, யாழ்ப்பாணம்.
01349

### உணவு
புதிய Chefs வருகையால் Rice / curry fish 17/50, Buriyani 25-35/- Fried Rice 20-40/-. Also Cool Beer 39/- நாடும்முகவரி: Galaxy Restaurant, கன்னதிட்டி,(சிவன் கோவில்முன்பாக), யாழ்ப்பாணம்.
01183


## வெளிநிலை மாணவர் ஆய்வுகூடத் தேர்வு

பேராதனைப் பல்கலைக்கழக வெளிநிலைப்பரீட்சை பொது விஞ்ஞான ஆய்வுகூடத்தேர்வு முப்பதாம் திகதி திங்கட்கிழமை பேராதனை பல்கலைக் கழக விஞ்ஞானபீடத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## கும்பாபிஷேகம்

(சித்தன்கேணி)

வட்டு-மேற்கு ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலய சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் இம்மாதம்பதினெட்டாம்திகதி புதன்கிழமை முற்பகல் 9மணியளவில் நடைபெறும் அன்று பிற்பகல் 4 மணிக்கு மேல் ஸ்ரீ வீரபத்திரசுவாமிக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கும் திருக்கல்யாண உற்சவ விழாவும் விசேடமாகநடைபெறும்.


வர்த்தகவிளம்பர ஓவியங்கள், உருவப்படங்கள்,புளொக்ஸ் ஸ்ரிக்கர் என்பன செய்துகொள்ள

'லங்கா'
கொமேஷல் ஆட்டிஸ்ற்
108/1, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்

# NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, Jaffna.

## 89 A/L
## DAY CLASSES

[திங்கள் > வெள்ளி]

பிரிவு III க்கான வகுப்புக்கள் யாவும் 10. 01. 1989-ம் திகதி முதல் நடைபெறுகின்றன.

7.15 Botany - பிறப்புரிமையியல்
8.15 Zoology - பாகுபாட்டியல்
9.15 Botany - சூழலியல்
10.15 Physics - வெப்பவியல்
11.15 Chemistry - பௌதீக இரசாயனம்
1.00 Chemistry - பொது இரசாயனம்
2.00 Physics - பொறியியல்
3.00 Zoology - சிறுநீர் சனனித் தொகுதி
8.15 Pure & Applied Maths - காவிகள், திரிகோண கணிதம்
3.00 Pure & Applied Maths - எளிமையிசைஇயக்கம்

எமது ஆசிரியர் குழு

**Physics** - திரு. விக்கி
**Chemistry** - திரு. மக்வி
**Botany** - திரு. செல்வநேசன்
**Zoology** - பிரபல ஆசிரியர்
**Pure / Applied Maths** - திரு. சந்திரமோகன்

I-ம், II-ம் பிரிவுகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

0135

வார முரசொலி

# தீவுப்பகுதிப் பிரதேசத்தின் ' இன்றைய கல்வி நிலை

கார்த்திகேசு குகபாலன்
சிரேஷ்ட விரிவுரையாளர் - புவியியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்

மிக நீண்டகால கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட தீவுப்பகுதி கடந்த பத்து ஆண்டுகளில் வெளிப்படையாக சகலராலும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் மாணவரிடையே கல்வித்தரம் குறைவடைந்துசெல்வதையும், பெற்றோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துதவுவது சார்புர்தியாக பலம் குறைவதையும், பிரதேச வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் பங்களிப்பு குறைவடைந்து வருவதையும், தேசிய ரீதியில் ஏற்படுகின்ற பிரச்சனைகளின் தாக்கத்தினை கருத்திற் கொண்டு வெளிநாட்டுப் பயணத்தின் உச்சப்பயனை அனுபவித்தலால் ஏற்படுகின்ற விளைவுகளாலும் இளஞ் சமூகத்தின் கல்வி பெரிதும் பாதித்து வருகின்றது. கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி ஆரம்பக்கல்வி, மற்றும் இடைத்தரக் கல்வியின் நடுப்பகுதியில் கல்வியை முறித்துக் கொள்ளும் நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவுப்பகுதியே முதலிடம் பெறுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. லைடன்தீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, ஆகிய ஏழுதீவுகளின் கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள தாக்கங்களே இக் கட்டுரையில் கூறப்படுகின்றது.

தீவுப்பகுதியின் கல்விவளர்ச்சியை மூன்று காலப் பிரிவுக்குள் வகைப்படுத்தி அறியலாம். ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட சில குடும்பங்கள் கல்வியில் நாட்டம் கொண்டிருந்தனர் என அறிய முடிகின்றது. வரையறைக்குட்பட்ட பாடத்திட்டத்தில்லாது தங்களது சிறப்புத் தேர்ச்சிக்கு ஏற்ற வகையில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள், கோவில்கள் போன்றவற்றில் சேவை மனப்பான்மையுடன் பொது அறிவு சார்ந்த கல்வி போதிக்கப்பட்டதாக தற்போதுள்ள கல்வி அறிவுடன் கூடிய முதியோர் கருத்துத் தெரிவிக்கின்றனர். குறிப்பாக வேலணை நெடுந்தீவு புங்குடுதீவு ஆகியபிரதேசங்களில்இது காணப்பட்டதாக அறியப்படுகின்றது. ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் மதம் பரப்புவதைக் கருத்திற் கொண்டு கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியில் நிறுவனரீதியிலமைந்த கல்விக் கூடங்கள் தீவுப்பகுதியில் அமைக்கப்பட்டன. எனினும் ஆரம்ப கல்விக் கூடங்களே பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டதால் இடைத்தர, உயர்தரக்கல்விக்கான வாய்ப்பு கிட்டவில்லை. எனினும் தாம் பெற்ற ஆரம்பக் கல்வியுடன் பெற்றோரின் பொருளாதார நிலைக்கேற்ப சிறியளவு பங்கினர் யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்று அரச, மற்றும் தனியார்துறைகளில் தொழில் வாய்ப்பினைப் பெற்றது மட்டுமல்லாது சிங்கப்பூர், மலேயா போன்ற நாடுகளில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இப்பிரதேசத்தில் உள்ள ஒரு சில கிறிஸ்தவ பாடசாலைகளைக் தவிர ஏனையவற்றில் ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டமையால் இடைத்தரக் கல்விக்கு மேல் தம்மை வளர்த்தெடுக்க ஆங்கிலம் ஒரு தடையாகவிருந்தது இதன் விளைவாக ஆசிரியர்களாகும் நிலையே தொழில் வாய்ப்பில் அதிகம் காணப்பட்டது. எனினும் எதிர்நீச்சல் போட்டவர்கள் கல்விநிலையில் சிறப்பாக தம்மை உருவாக்கிக் கொண்டனர் என்றே கூறல் வேண்டும்.

மூன்றுவது நிலையில் இலங்கையில் இலவசக் கல்வியும், நாட்டின் சுதந்திரமும், கல்விச் சீர்திருத்தங்களின் விருத்தியும் அரசாங்கப் பாடசாலைகளில் அதிகரித்தமையும், பாடசாலைகளிடையே கல்வி விருத்தியில் போட்டி மனப்பான்மையும், ஆசிரியர்களின் ஆர்வமும் மக்களிடையே பொருளாதார நிலையில் ஏற்பட்ட செழிப்பு நிலையும், காரணமாக தீவக மக்களின் கல்வி நிலை யாழ்ப்பாண மாவட்டத்தில் மிக நீண்டகல்விப்பாரம்பரியத்தைக் கொண்ட வடமராட்சி பிரதேசத்துடன் ஒப்பிடக் கூடியளவுக்கு விருத்தி பெற்றது.

குறிப்பாக பல்கலைக்கழகம் வரை சுயபாஷாக் கல்வியின் அறிமுகமும் தீவுப்பகுதியின் கல்விவளர்ச்சிக்கு துணை புரிந்தன. குறிப்பாக 1960 களில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அனுமதி பெற்ற தமிழ் மாணவர்களில் ஏறத்தாழ ஐந்திலொரு பங்கினர் தீவுப்பகுதியைச் சார்ந்தவர்களாகவிருந்தனர். இக்காலங்களில் கல்வியில் ஆர்வம் இருந்தமைக்கு பின்வரும் காரணிகளை கூறலாம்.

1 கடமைப் பற்றுடன்கூடிய ஆசிரியர்களின் சேவை. அதாவது அவர் தம் பிள்ளைகளை நகரப் பள்ளிகளில் பயிலவிட்டாலும் பிரதேசப்பற்று அதிகமாகவிருந்தது.

2 ஆரம்ப, இடைத் தரக் கல்வித்தரம் சிறப்பாகப் பேணப்பட்டமையால் நகரப் பாடசாலைகளில் உயர் கல்வி பெறச் செல்வது சுலபமாகவிருந்தது.

3 தீவுப்பகுதியிலுள்ள ஆசிரியர்களில் பெரும்பாலானோர் நகரப்பகுதிகளில் நிரந்தரமாகவோ அன்றித் தற்காலிகமாகவோ குடியிருப்பினை அமைப்பதில் அக்கறை கொள்ளாமை.

4 பெற்றோரின் ஊக்கம்

5 கல்வி தவிர்ந்த ஏனைய வள வாய்ப்புகள் குறைவாக விருந்தமை.

6 நகரம் சார் இழுவிசை சகல மட்டங்களிலும் குறைவாகவிருந்தமை.

போன்ற பல காரணிகளின் விளைவாக இப்பிரதேச மக்களின் கல்வி வளமானது பிரதேசத்துக்குள்ளும் வெளியிலும் சிறப்புத்தன்மை பெற்று வந்தது. குறிப்பாக வேலணை, நெடுந்திவு, நயினாதீவு புங்குடுதீவு மகாவித்தியாலங்களிலிருந்து பல்கலைக்கழங்களுக்கு கணிசமான பங்கினர் உள் நுழைந்தனர் அது மட்டுமல்லாது க. பொ. த. சாதாரண பரீட்சையில் சிறப்பாக சித்தி பெற்று நகரப் பாடசாலைகளில் தமது திறமைகளை வெளிக்காட்டினர். 1960 களிலும் 1970இன் முற்பகுதியிலும் இப்பிரதேச மகாவித்தியாலங்களில் தோற்றிய மாணவர்களில் 70 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் உயர் கல்வி கற்கும் வாய்ப்பளித்தது. ஆனல் 1980 களில் இந்நிலை சராசரி 30-40 வீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது இப்பிரதேசத்திலுள்ள முக்கியமான மகாவித்தியாலத்தில் இக் காலப் பகுதியில் 10-15 வீதத்தினரே ஆகக் கூடியது ஆறு பாடங்களில் சித்தி பெற்றுள்ளனர் என்பது இங்கு நோக்கற்பலாது.

1970 களின் நடுப்பகுதியிலிருந்து சிறப்பாக 1980களில் தீவுப்பகுதி மாணவர்களின் கல்வி நிலை பற்றி அபாயகரமான கேள்விக்குறி கல்விமான்களிடையே மட்டு மல்லாது சாதாரண ஒவ்வொரு குடிமகனுக்கும் ஏற்பட்டுள்ளது துரதிஷ்டவசமானது. இதனை மாணவர், பெற்றோர், ஆசிரியர், கல்விஇலாகா என்ற நான்கு பிரிவுகளாக வைத்து ஆராய்தல் அவசியமாகின்றது

மாணவர் நிலையில் வைத்துப் பார்க்கும் போது திறமையான மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகி நகரப் பாடசாலைகளில் சேருவது அல்லது கல்விப் பாரம்பரியமுடைய, வசதிபடைத்தவர்கள் நிரந்தரமாக இடப்பெயர்வினை ஏற்படுத்துவதால் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது எனப் பலர்கருதுகின்றனர். எஞ்சியவர்கள் வசதி குறைந்த,

... 15 ஆம் பக்கம் பார்க்க

## செயற்கரிய செய்தோர்

பண்டைய அரசர்கள் புலவர்களைத் தமக்குச் சமமாகக் கருதினர். தாம் புவி அரசர் என்பதையும் புலவர்கள் கவி அரசர் என்பதையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

சோழன் மாவளத்தான் என்னும் அரசனும் தாமற்பல்கண்ணனர் என்னும் புலவரும் ஒருமுறை சூதாடிக் கொண்டிருந்தனர். சூதாடுதலை அன்று வட்டாடுதல் என்பர். அவர்கள் இருவரும் சூதாடிக் கொண்டிருக்கும் போது புலவரிடம் இருந்த சூதாடும் காய்களில் ஒன்று தவறுதலாக மறைந்து விட்டது. சூதாட்டத்தில் தோல்வியை நோக்கிக் கொண்டிருந்த அரசன் புலவர் இருந்த இடத்தில் மறைந்து கிடந்த சூதாடும் காயைக் கண்டுவிட்டான். தன்னை வெல்வதற்காகப் புலவர் காயை மறைத்ததாக அவன் கருதினன். விளையாட்டில் வரும் வெற்றி, தோல்வியிலும் ஆத்திரமடைவது மனித சுபாவம். ஆத்திரமடைந்த அரசன் சூதாடுகாயினுல் புலவருக்கு எறிந்துவிட்டான்

எறிந்தவன் அரசன் என்று புலவர் சிறிதும் அஞ்சவில்லை. அரசன் செய்த தவறை அரசனுக்கு உணர்த்த விரும்பினர், உணர்த்தினர். இன் சொல்லால் உணர்த்தவில்லை. காரம் கலந்த சொற்களாலேயே உணர்த்தினர்.

''அரசனே, நீ புறுவுக்கு இரங்கிய சிபிச்சக்கரவர்த்தியின் வழியில் வந்தவன். நின் முன்னோர்கள் சான்றோர்கள் துன்பம் படக் கூடிய செயல்களைச் செய்ய மாட்டார்கள். இச் செயல் உனக்கு எப்படி வந்தது? உன் பிறப்பில் எனக்குச் சந்தேகம் உள்ளது'' என்றார்.

சோழன்மாவளத்தானும் சூதாடும் ஆவேசத்தில் தவறு செய்தவனே அல்லாது பண்பு குறைந்தவன் என்று சொல்லிவிடமுடியாது. தன் தவறை உணர்ந்து தன் செயலுக்காக நாணமுற்று வாடி இருந்தான். புலவரும் மனம் ஆறிய பின்னர் அவனை வாழ்த்தினர்.

சான்றோரை அவமதிப்பது தவறு என்பதைச் சோழன் மாவளத்தானுக்கு அஞ்சாது உணர்த்திய தாமற்பல் கண்ணனர் என்னும் புலவர் சான்றோர் பெருமையை அரசனுக்கு உணர்த்திய சான்றோர் ஆவார்.

**தாமற்பல் கண்ணனர்**

## தரிசனம்

வரலாற்று ஆசிரியர்கள், சரித்திர மாணவர்களுக்கு கி. மு.; கி. பி. என்பதுநன்கு பரிச்சயமான சொற்றொடர்: கிறிஸ்துவுக்கு முன்னைய, பின்னைய காலங்களை நடுப்புள்ளியாக வைத்தே பல்துறை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேபோன்ற இன்னொரு நடுப்புள்ளியாக,' 83-மு' ''83-பி'' என்பது இப்போது அமைந்துவிட்டது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

ஈழத்தமிழரின் அரசியல் போராட்டத்தை ஆராயப் புகும்போது1983க்கு முன்னைய காலம், பின்னைய காலம் என்ற இரு காலப் பகுதியில் நின்று ஆய்வதன் மூலமே பல உண்மைகளை அறிந்து கொள்ள முடியும்.

1983 க்குப் பிந்தியகாலம் தமிழர் பிரதேசங்களைப் பொறுத்தளவில் 'சுடுகாட்டு வாழ்க்கை' யாகவே அமைந்திருந்தாலும், எமது மொழி, கலை, கலாசாரம் என்ற புத்துணர்வு இக்காலத்திலேயே உருவான தென்பதை காலம் நின்று சான்று பகரும்.

தமிழ் மண்ணிலிருந்து புதிதாக மூன்று தமிழ் தினசரிகள் பிரசவமானது இந்தக் காலப் பகுதியில்தான்.

பெருந் தொகையான இலக்கிய நூல்கள் இந்தக் காலப் பகுதியில் வெளியிடப்பட்டுள்ளன.

பல நூற்றுக் கணக்கான இளம் எழுத்தாளர்கள் இந்தக் காலத்துள் உருவாகியுள்ளனர்.

ஏறத்தாழ ஒவ்வொரு பாடசாலையிலிருந்துமே கையெழுத்துச் சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன.

நாட்டுக் கூத்துகளும், நாடகங்களும் கூட, வகை, தொகையின்றி அரங்கேற்றம் கண்டுள்ளன. இரவுக்கு மட்டுமே உரித்தான நாடகக்கலை ஊரடங்கைக் கண்டு அஞ்சிவிடவில்லை. பகலில் மேடையேற்றம் கண்டு விட்டது

பாடசாலைகள் மூடப்பட்டிருந்தபோதிலும் மாணவரின் பரீட்சைத் திறமை மேலும் பிரகாசித்துள்ளது.

கோவில்களில் கும்பாபிஷேகங்களும், குடமுழுக்கு விழாக்களும் பக்திமணம் கமழச் செய்தன.

இந்த மண்ணிலிருந்து புதிய தினசரி கலண்டராக' அஷ்டலக்ஷ்மி' கூட வெளிவந்து விட்டது.

இழப்புக்கள், சேதங்கள், அழிவுகளின் மத்தியிலும் இந்த மண்ணின் மக்கள் படைத்துக் கொண்டிருக்கும் சாதனைகளே, அவர்களின் ஜீவ சக்தியாகும்.

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

# இருபெரும் நெறிகள்

இந்துநாகரிகம் இன்று உயர்கல்வி பெறும் மாணவர்களைப் பெரிதும் கவரும் பாடநெறியாகச் செல்வாக்குப் பெற்று வருகிறது. கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்பிலும் பல்கலைக்கழக நிலையிலும் பலர் இப்பாடத்தைப் பயின்று வருகின்றனர். எனினும் இப்பாடத்தைப் பயிலும் மாணவருக்குத் பயன்படக்கூடிய முழுமையான, தரமுயர்ந்த நூல்கள் இல்லாமை பெருங்குறையாகவுள்ளது

இக்குறையைப் போக்கும் வகையில்இந்துநாகரிகம்தமிழ், மெய்யியல் ஆகிய துறைகளில் வல்லவராகிய'திரு.சொக்கன்' அவர்கள் பல விரிவான கட்டுரைகளை, எழுதி, வெளியிட்டு வருகின்றார். திரு. சொக்கன் அவர்களின் இரு 'பெரும் நெறிகள்' என்ற நூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

இந்நூல்சைவநெறிவேதாந்த நெறி ஆகிய இரண்டையும் சிறப்புற ஆராய்கிறது சைவம் பற்றிய பொது விளக்கங்கள், சைவ சித்தாந்த தோத்திரங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள் சைவ சித்தாந்த தத்துவம் முதலியன பத்தொன்பது பக்கங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன

உபநிடதங்களிடையேகாணப்படும். முரண்பாடுகளைத் தீர்த்துக் கோட்பாட்டு ஒருமையை ஏற்படுத்தும் வகையில் உருவான பாதராயனரின் வேதாந்த சூத்திரம் முதல் வேதாந்த நெறியில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் இந்நூல் முப்பத்து மூன்று பக்கங்களில் ஆராய்கிறது

வேதாந்த நெறியினை ஒழுங்கு படுத்தி உரைத்தவரான கௌடபாதரின் ''எதுவும் படைக்கப்படுவதில்லை யாவும் தோற்றமே'' என்ற அஜாதி வாதக் கருத்து முதலில் ஆராயப்படுகிறது. தொடர்ந்து பிரமம் வெளிப்பட்டுத் தோன்றும் வகைபற்றிய அஸ்பர்ஷ யோகம் என்ற கருத்து விளக்கப்படுகிறது.

இக் கருத்துக்களின் அடிப்படையில் கேவலாத்துவிதம், மாயாவாதம் என்ற பெயர்களால் அழைக்கப்படும் சங்கரரின் அத்துவித வேதாந்தம் நூலில் ஆராயப்படுகிறது. அஜாதிவாதம், அஸ்பர்ஷ யோகம் ஆகியவற்றின் விளக்கம் மூலம் சங்கர வேதாந்தத்தை எளிதில் விளங்கிக் கொள்ள வாய்ப்பளிப்பது இந் நூலுக்குரிய தனிச்சிறப்பு எனலாம. சங்கராச்சாரியாரின் மறுப்புக்களும், நிறுவல்களும் சங்கரர் நோக்கில் மாயை, மாயையும் அவத்தையும், பிரமமும், ஈசுவரனும்,பிரமமும், சிவனும், ஞானமும், கன்மமும் வீடுபேறு ஆகிய தலைப்புக்களில் சங்கர வேதாந்தத்தின் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன

மேற் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான இராமனுஜரின் மறுப்புக்களும்,விளக்கங்களும் அடுத்த பகுதியாக விளக்கப்படுகிறது இப்பகுதியில் விசிட்டத்துவாதக் கோட்பாடு பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகிறது.

இறுதியில் மத்துவரின் துவித வேதாந்தம் ஆராயப்படுகிறது. விசிட்டாத்துவாதத்துடன் துவிதம் ஒப்பிடப்படுகிறது

''மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிது'' என்பார்கள். இது இந் நூலுக்குப் பொருந்தும் என்பதை நூலைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

இந் நூலின் இன்னொரு சிறப்பு இது அன்பளிப்பாக வழங்கப்படுவதாகும். இதனை அமரர் இராமலிங்கம் கைலாசபிள்ளை அவர்களின் நினைவாக வழங்குபவர் நாயன்மார்கட்டு இராமலிங்கம் சரவணமுத்து அவர்கள். தமது குடும்பத்தில் நீத்தார் நினைவாகத் தரமுயர்ந்த அறிவு நூல்களை அன்பளிப்பாக வழங்குவதை ஒரு விரதமாகக் கொண்டிருப்பவர் இவர். இது இவர் வெளியிடும் ஆறுவது அன்பளிப்பு நூல்.

இந் நூலைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் நூலாசிரியரிடம் அல்லது திரு. இ. சரவணமுத்து அவர்களிடம் நாயன்மார்கட்டு யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். இந்துநாகரிக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இந் நூல்பெரிதும் பயன்படும்.

நாயன்மார்கட்டு இராமலிங்கம்கைலாசபிள்ளை நினைவாக இந் நூல் வெளியாகியுள்ளது.

● சங்கரன்

# கைலாசபதி

# ஒரு வாழ் நாள் நண்பன்

பேராசிரியர் க. கைலாசபதி ஞாபகார்த்தமாக ஆராய்ச்சி தொகுதியொன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் வெளியிடப்படவிருக்கிறது. இலக்கியம், பண்பாடு, மொழியியல், வரலாறு ஆகிய துறைகளில் ஆங்கிலத்திலும், தமிழிலும் அவ்வத் துறைசார் அறிஞர்களின் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இந்நினைவேடு, வெளியீட்டினையொட்டி இக் கட்டுரை வெளியிடப்படுகிறது

எவ்வளவு காலம் போய் விட்டது என்று எனக்குத் தெரியவில்லை; ஆனால் கைலாஸ் அயோவாப் பல்கலைக்கழகத்திலிருந்து பேர்க்லிக்கு வரும் வாய்ப்பு இருக்குமா என்று கேட்டு எழுதியது சில மாதங்களுக்கு முன்பு தான் என்று தோன்றுகிறது உண்மையில் கைலாஸ் போன்ற ஒரு அறிஞரை- எழுத்தாளரைப் பெறுவதையிட்டு எங்களுக்குப் பெரு மகிழ்ச்சியே. அது ஒரு எதிர்பாராத பேறுதான் சாத்தியமற்ற பேர்க்லிச் சந்தையில் கைலாஸுக்கு ஒரு வீடு பிடிப்பதற்காக நான அவருடன் ஒரு வாரத்தைக் கழித்தது நினைவிருக்கிறது. கடைசியாக மலையில் இருந்த ஒரு நல்ல சிறிய வீட்டை அவருடைய மனைவி சர்வமும் மக்கள் சுமியும் பவியும் ஒரு வசதியான இடமாக மாற்றிக் கொண்டனர்.

கைலாஸை ! ஏனையோரிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் தன்மை எது? அவர் ஒரு கலைக்களஞ்சிய மனம் கொண்ட முதல்தர அறிஞர் என்பது உண்மைதான். இந்த நூற்றுண்டின் கிட்டத்தட்ட எல்லா எழுத்தாளர்களையும், அவர்களது படைப்புக்களையும் நேர்முகமாக அறிந்தவராகவே அவர் காட்சியளித்தார் பழந்தமிழுடன் அவருக்கிருந்த பரிச்சயமும் நிச்சயமாக விசாலமானது.

அவர் எனக்கு முதலில் எப்போது அறிமுகமானுர் என்பது எனக்கு நினைவிருக்கிறது. என்னுடைய முதற் புத்தகத்தில் காரசாரமாக நான் தாக்கிய ஒரு அறிஞருடன் நான் எவ்வாறு சமாதானம் செய்து கொள்ளப் போகிறேன் என்பது எனக்கு வியப்பாக இருந்தது. நாங்கள் பகல் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். நான் மிகக் கவனமாக விசயத்தைத் தொடங்கினேன். எனதுமுதற் புத்தகம் ஒருவகையில் (உணர்ச்சிகரமான) மிக இளமையில் எழுதப்பட்டது என்பதை விளக்கினேன் உண்மையில் நான் சொல்ல நினைக்காததைச் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னேன். கைலாஸ் ஒரு புன்னகையுடன் நான் சுலபமாகக் கையாளக் கூடிய வேறு ஒரு திசைக்கு பேச்சைத் திருப்பி விட்டார். அது என்னை மிகவும் கவர்ந்து விட்டது. தனது தகுதிக்கும், சாதனைகளுக்கும் மேலாக பணிவும், யாரையும் கவரும் தன்மையும் உடைய மனிதனுக அவர் காட்சியளித்தார்.

கைலாஸ் எப்போதும் தாராள குணம் உள்ளவராகவும் இனியவராகவும் தன் நகைச்சுவை உணர்வினுல் விஷயங்களுக்கு உணர்வூட்டுபவராகவும் இருந்தார். தனது குடும்பத்தின் பலத்துக்கும் மகிழ்ச்சிக்கும் அவர் ஊற்றுக் கண்ணுக இருந்தார். அவருடைய நண்பர்களுக்கு எப்போதும் உதவுபவராகவும் இனியவராகவும் இருந்தார்.

**பேராசிரியர்**
**ஜோர்ஜ்-எல்-ஹார்ட், பி. எச். டி.**
**தென்-தென்கிழக்காசிய ஆய்வியற்துறை**
**கலிபோர்ணியப் பல்கலைக் கழகம் பேர்க்லி**

... 15 ஆம் பக்கம் பார்க்க

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**15-1-89 -- 21-1-89 வரை**

**மேடம்:** பெரியோர்ஆதரவு, வீண் விரயம், பெண்களால் கவலை, புத்திரவழியால் சஞ்சலம், தூரதேச பிரயாண அலைச்சல், புதுத்தொழில் முயற்சி, புண்ணிய வழிபாடு, தடைப்பட்ட பணம் கிடைக்கும்.

**ரிசபம்:** வீண்விரயம், திருடர் பயம், வாகன நஷ்டம், கல்வியால் கவலை, தூரதேசம் போனவர் வருகை, மங்கள காரியத்தடை, உடல் நலக் குறைவு, இனசன உதவி, புண்ணிய வழிபாடு.

**மிதுனம்:** இலட்சுமி கடாட்சம், பெரியோர் ஆசி, புகழ் தானே வரும், கல்வியால் உயர்வு, தூரதேசம் போனவர் வருவக, உடல் நலம், காதலர் [வாழ்வில் மகிழ்ச்சி.

**கடகம்:** மனையில் மங்கள காரியம், மாமன் வழி உதவி, வாகன சுகம், பெரியோர் உதவி, இரு தொழில் வருமானம், திடீர் பிரயாணம், கல்வியால் உயர்வு, இடமாற்றம்.

**சிங்கம்:** கல்வியில் சித்தி, பிரிந்த காதலர் ஒன்று சேருவர், தூரதேசம் போனவர் வருகை, மங்கள காரியத் தடை, மாமன் வழி உதவி, இருதொழில் வருமானம்.

**கன்னி:** புகழ்தானே வரும், தூரதேசம் போனவர் வருகை, விவாக நிச்சயம், இலட்சுமி கடாட்சம், கடற்தொழில், வணிகம் செய்வோர் லாபமடைவர், வாக்கு வசிகரம்.

**துலாம்:** பெரியோர் ஆசி, புகழ்தானே வரும், எண்ணிய எண்ணம் நிறைவு, வாகன சுகம், தூரதேச பிரயாண நிறைவு, மங்கள காரிய நிறைவு, மனமகிழ்ச்சி, கடற் தொழில் செய்வோர் லாபமடைவர்.

**விருச்சிகம்:** புண்ணிய வழிபாடு, திடீர் பிரயாணம், தேடியவர் வருகை தருவார், புது வாகன சுகம், கல்விமான்கள் கௌரவிக்கப்படுவர்,வணிகர்கள் இலாபமடைவர், புண்ணிய வழிபாடு.

**தனுசு:** அந்நியர் உதவி, வாகன கஷ்டம், தொழில் மூலம் இடமாற்றம், புத்திர சுகம், விருந்துபசாரம், தூரதேசம் போனவர் வருகை, மனை பூமியால் மகிழ்ச்சி, மாமன் வழி உதவி.

**மகரம்:** பெரியோர் உதவி, வாகன சுகம், பணப் புழக்கம், பெண்களால் உதவி, தூரதேச செய்தியால் நன்மை, மனை பூமியால் லாபம், காதலர் ஒன்று சேருவர், தடைப்பட்ட பணம் கிடைக்கும்.

**கும்பம்:** மங்கள காரிய நிச்சயம், வாகன லாபம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோருக்கு லாபமான வாரம், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், புகழ்தேடி வரும்,மாமன் வழி உபத்திரவம், தடைப்பட்ட காரியம் நிவர்த்தி.

**மீனம்:** பெரியோர் உதவி, வாகன சுகம், காதலருக்கிடையே உள்ள பிரச்சனை தீரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, மனச் சஞ்சலம் நீங்கும், கல்வி தொழிலில் உயர்ச்சி, புகழ் தேடிவரும், கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிக்கப் படுவார்கள்.


உ
விராட்விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் !

நிகழும் விபவ ஞு தை மாதம் 5-ம் திகதி (18-01-89) புதன்கிழமை காலை 11.18 க்கும் 12.34 மணிக்குமிடையில் வரும் சுபவேளையில்

| எமது புதல்வன் | எமது புதல்வி |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **இராஜேந்திரனுக்கும்** | **சங்கரிக்கும்** |

திருமணஞ் செய்ய பெரியோர்களால் நிச்சயித்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்

திருமதி இரத்தினம் கணபதிப்பிள்ளை,
அவர்களும் குடும்பத்தினரும்
''கணபதி வாசா''
40, அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி ஹரிதாஸ்,
83, கலிபா அப்துல் ஹமிட் வீதி,
(கொல் ஒழுங்கை)
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

( இரு வீட்டார் அழைப்பு )

01294

## சிறுகதை




சந்திரா தனபாலசிங்கம்

வானமும், பூமியும் இருண்டு கிடந்தது, சுகந்தனின் மனதைப்போல.

தன் வீட்டின் முற்றத்தில் பரப்பியிருந்த மணல் மேல் கைகளைத் தலைக்கு அணையாக்கிக்கொண்டு அந்த இருண்ட வானத்தையே வெறித்தபடி படுத்திருந்தான் சுகந்தன்.

தன் குடும்ப மானம் இவ்வளவு தூரம் சந்திக்கு வந்துவிட்ட பின்பும் தான் உண்டு, உடுத்து, இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது பற்றித் தன்னைத் தானே நொந்து கொண்டான். தன் விரக்கம் காரணமாக அவன் இரு கண்ணிலிருந்தும் வழிந்த கண்ணீர் அவன் காதோரங்களை நனைத்திருந்தது

தன் குடும்ப உறவே ஆட்டம் கண்டு போன பின்னால், குடும்பத்துக்காக என்று தான் இதுவரை வெளிநாட்டில் கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிவிட்டதை மிக வேதனையுடன் உணர்ந்தான். இவன் மன உணர்வுகளை அவமதிப்பதே போல உள்ளே ரீ.வியில் படம் பார்த்துக் கொண்டிருந்தாள் சுகந்தனின் மனைவி வாசுகி.

''அப்பா இருட்டுக்குள்ளை ஏன் இருக்கிறீங்கள்?'' சுகந்தனருகில் வந்து ஆதரவுடன் அவன் கைகளைப் பிடித்தபடி கேட்டவள் அவன் அன்பு மகள் மைதிலி.

''மைதிலிக்குஞ்சுக்கு இந்த வருஷம் ஸ்கொலர்ஷிப் சோதனையெல்லே? பாடமெல்லாம் ஒழுங்காகப் படிச்சனீங்களோ? சாப்பிட்டு முடிஞ்சுதோ?'' தன் நிலை அவளையும் பாதிக்கவேண்டாம் என்பது போல் வெகு உற்சாகத்துடன் மகளை விசாரித்தான்.

''அம்மா இரவுக்குச் சாப்பாடு ஒண்டும் செய்யேல்லை. நீங்கள் அம்மாவோடை சண்டை போட்டா, அண்டைக்கு நாங்கள் எல்லோரும் விரதம் இருக்க வேணும் எண்டு அப்பாவுக்குத் தெரியும் தானே! மிகப்பெரிய மனிதத்தோரணையில் சலித்துக் கொண்டாள் மைதிலி.

அவளது இந்தப் பதிலால் அந்தப் பொய் உற்சாகம் வடிந்துபோய் விட்டவனாக, உடம்பில் ஒட்டிக்கொண்டிருந்த மணல் துணிக்கைகளை கைகளால் தட்டிக்கொட்டியபடி எழுந்தான் சுகந்தன். ''இருட்டுக்குள்ளை...... என்னத்துக்கு... வா வீட்டை போவம்'' என்று சமாளித்தபடி அவளை வீட்டினுள்ளே கூட்டிச் சென்றான்.

இப்போதும் கால்மீது கால் போட்டபடி படம் பார்த்துக் கொண்டிருந்தாள் வாசுகி. அவள் பக்கம் திரும்பியும் பாராமல் தன் அறைக்குள் மைதிலியோடு போனவன் மீண்டும் தன் படுக்கையில் விழுந்தான். மைதிலியும் அப்பாவோடு ஒட்டிக்கொண்டாள். இருண்டுபோய் விட்ட தன் வாழ்வில் ஒரே நம்பிக்கை நட்சத்திரமானவளைப் பரிவுடன் பார்த்தான்.

''நான் இல்லாத நேரங்களிலையும் சச்சி மாமா இங்கை அடிக்கடி வருவாரோ மைதிலி...?'' கேட்ட பின்தான் சிறுபிள்ளையிடம் போய் இதென்ன கேள்வி என விழித்தான். இதுக்கெல்லாம் பதில் சொன்னால் அப்பாவும் அம்மாவும் திரும்பவும் சண்டை பிடிக்கத் தொடங்கி விடுவார்கள் என பயந்தாளோ என்னவோ சத்தமின்றித் திரும்பிப் படுத்து கண்களை இறுக மூடிக் கொண்டாள் மைதிலி. அப்படியே உறங்கியும் போனாள்.

சுகந்தனால் உறங்க முடியவில்லை. இப்போதுதான் என்றில்லை. சவூதியிலிருந்து திரும்பிய நாள்தொட்டு கடந்த ஒரு மாதமாகவே நிம்மதியான உறக்கம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தான் சுகந்தன். வாழ்க்கையை நிம்மதியாக வாழ்வதற்கு பணம் மட்டும் போதும் என்றுதான் அவன் நினைத்திருந்தான். அதனாலேயே தான் பார்த்துக்கொண்டிருந்த கௌரவமான கற்பிக்கும் தொழிலுக்கு லீவு போட்டுக் கொண்டு சவூதிக்குப் பயணமாகியிருந்தான்.

மூன்று வருடங்களில் மூன்று இலட்சங்களுக்கும் மேலே சம்பாதித்தும்திரும்பியிருந்தான். நாய் விற்ற காசு குரைப்பதில்லை என்பதுபோல, அவன் செய்து விட்டு வந்த வேலைக்கான கூலியும் நாறவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும்......

அவன் வெளிநாட்டில் இருந்த போதே வாசுகியைப் பற்றி சாடைமாடையாக அம்மா தன் கடிதத்தில் எழுதியிருந்தாள். வாசுகி தனது இலட்சிய மனைவி என்று இவன் தீவிரமாக நம்பியிருந்த காரணத்தால் எதையும் கருத்தில் எடுக்காமல் விட்டு விட்டான. வாசுகியும் அதை மெய்ப்பிப்பவளே போல அடிக்கடி கடிதங்கள் போட்டுக் கொண்டிருந்தாள். அவன் வாசுகிக்கு எழுதியிருந்த கடிதம் ஒன்றில் தனது வேலைக்கான மூன்று வருட கால ஒப்பந்தம் முடிந்து வருவதையும், அதைப் புதுப்பிக்க விரும்பாததால் தான் ஊர் திரும்ப இருப்பதையும் விபரமாக எழுதியிருந்தான் உண்மையில் தன் ஆசிரியத்தொழிலை மீண்டும் பொறுப்பெடுக்கும் ஆர்வம் அவனுக்கிருந்தது.

ஆனால் அதற்கு வாசுகியிடம் இருந்து வந்த பதில்தான் அவனைக் கொஞ்சம் நிலை குலையச் செய்துவிட்டது. ''இங்கே இன்னும் நிலைமைகள் சரியாகவில்லை. விலைவாசிகளும் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு போகின்றன மைதிலிக்கென்று நாம் கட்ட நினைத்த வீட்டைக் கட்ட இன்னும் நிறையப் பணம் தேவைப்படும். அதனால் இன்னும் மூன்று வருடங்கள் நீங்கள் வேலையைப் புதுப்பித்துக் கொள்வது நல்லது'' என்று எழுதியிருந்தாள் வாசுகி. அந்தப் பதிலில் தனது இந்த மூன்று வருடப் பிரிவு பற்றிய எந்தவிதமான பாதிப்பும் இல்லாதது கண்டு வியப்படைந்திருந்தான் சுகந்தன்.

திருமணமான புதிதில் ''உங்களை விட்டு ஒரு நாளாவது இருக்கமாட்டேன்'' என்று அடம் பிடித்தவள் வாசுகி. மைதிலி பிறந்திருந்த போதுகூட இவனைப் பிரிய வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக தன் தாய்வீடு போக விரும்பாதவள். அம்மா, அம்மா என்றுஇவன் தாயையே தன் தாயாக மதித்திருந்தவள். சில நாள் முன்பு வீடு தேடி வந்திருந்த அந்த அம்மாவையே எவ்வளவு தரக்குறைவாகப் பேசி விட்டாள். எப்போதிருந்து வாசுகி இப்படி மாறிப் போனாள்? என்று குழம்பினான் சுகந்தன்.

எல்லோரும்தான் வெளிநாடு போகிறார்கள். சம்பாதிக்கிறார்கள். நவீன வசதிகளுடன் வீடு கட்டுகிறார்கள். ரீ.வி என்றும், டெக் என்றும் ஆடம்பரப் பொருட்களாக வாங்கிக் குவிக்கிறார்கள் என்றுதான் வெளிநாடு போக சுகந்தனும் முடிவெடுத்திருந்தான். அதுவும் அண்டை வீடு, அயல் வீடுகளைப் பார்த்து வாசுகி மனம் புழுங்குவதை காணச்சகியாமலும், தன் பிள்ளைகள் இருவரதும் எதிர்கால நலன் கருதியும் பணம் பண்ணும் ஒரே நோக்கில்தான் பயணம் மேற்கொண்டான். அவன் இங்கு பார்த்த உத்தியோகத்தில் இவற்றையெல்லாம் கனவில் கூட காண முடியும் என்பது சந்தேகமே!

பயணம் போன அந்த நேரம் தன் நண்பன் சச்சிதானந்தனை தனியாகச் சந்தித்திருந்தான் சுகந்தன், ''வாசுகியின்ரை தாய், தகப்பனும் போய்ச் சேர்ந்திட்டினம். அம்மாவோ தங்கச்சியையும், வீட்டையும் விட்டிட்டு எங்கடை வீட்டிலை வந்து இருக்க மாட்டா. இவையளை தனிய விட்டுப் போறது எனக்கு கவலையாத்தான் இருக்கு. எதுக்கும் போக,வர என்ன, ஏதெண்டு விசாரிச்சுக் கொள்ளும்'' என்று சச்சியிடம் சுகந்தன் சொன்னதென்னவோ உண்மைதான். அதற்காக இன்று சந்தி சிரிக்கும் அளவுக்கு வைத்து விட்டானே இந்தச் சச்சி!

அவனும் படித்தவன், ஒரு பொறுப்பான உத்தியோகத்தில் இருப்பவன். மாற்றான் மனைவி என்றும் பாராமல். நண்பனுக்கு துரோகம் செய்கிறேனே என்ற உணர்வும் இல்லாமல் .... பார்த்த தொழிலையே பார்த்துக் கொண்டு, சிக்கனமாக உள்ளதே போதும் என்ற மன நிறைவுடன் தான் இருந்திருந்தால், இன்று இதயமே நொருங்கிப் போயிருக்கும் இந்த நிலைக்கு ஆளாகியிருக்க வேண்டாம் என்ற சுய பச்சாத்தாபம் அவன் விழிகளில் மீண்டும் கண்ணீராய் நிறைந்தது.

சச்சிதானந்தனுக்கு வயது நாற்பதுக்குமேலே. இன்னும் திருமணம் செய்துகொள்ளும் எண்ணமே இல்லாமல் திரிபவன் அவனுக்குப் பொறுப்பாக அவன் அக்காவும், ஒரு தங்கையும் வீட்டில் இருப்பது காரணமாக இருக்கலாம். தன் பொழுதைக் கழிப்பதற்கென்றே சில வீடுகளையும் அங்குள்ளவர்களையும் திட்டமிட்டு நண்பர்கள் ஆக்கிக் கொண்டிருந்தான். அவனது அந்த நண்பர் கூட்டத்தில் தானும் ஒருவனாக இதுவரை இருந்து விட்ட அவலம் சுகந்தனைச் சுட்டுப் பொசிக்கியது. சச்சி இப்படிப்பட்டவன் என்று தெரிந்திருந்தால் என்றோ அவன் உறவை வெட்டி எறிந்திருப்பான் சுகந்தன்.

இவன் பயணத்திலிருந்து வந்த சில நாளிலேயே அம்மா முணுமுணுக்கத் தொடங்கி விட்டாள். 'இனி நீ வெளிநாட்டில் உழைச்சது போதும். வாசுகியாலே மானம் போகுது. மைதிலியும் வளர்ந்து வாற ஒரு பொம்பிளைப்பிள்ளையெண்டு தெரிய வேணும் உனக்கு'' என்று பட்டும் படாமலும் சொன்ன தாயின முகத்தை உற்று நோக்கினான் சுகந்தன். ''வேலை முடிஞ்சு தானே வந்திருக்கிறன் அதென்ன ... வாசுகி மானம் எண்டுதேவையில்லாமல் கதைக்கிறீங்கள்'' என்று அவன் தாய் மீது சீறிப் பாய்ந்தான். ''உந்த ரோசத்தை உன்ரை பெஞ்சாதிக்குப் போய்க் காட்டு ஒண்டில் அவளைத் திருத்து அல்லது அவன் சச்சியை அடிச்சுக் கொல்லு'' என்று பதிலுக்குக் கத்திய தாயை அதிர்ந்து போய்ப் பார்த்தான் சுகந்தன். மேற்கொண்டு எதையும் விசாரித்துத் தெரிந்து கொள்ளும்—அதைத் தாங்கிக் கொள்ளும் தைரியம் அவனுக்கு இருக்கவில்லை தன் தாய் யார் மீதும் வீண்பழி சுமத்த மாட்டாள் என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்திருந்தது. அதனால் குழம்பி விட்ட மனதுடன் மௌனமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தான் சுகந்தன்

''ஆர் .....சுகந்தனே? எப்ப வெளியாலை இருந்து வந்தனி'' தவறணை மகாநாடு முடிந்து தள்ளாடியபடியே வந்த மணியம் சுகந்தனை விசாரித்தார். ''எப்பிடி மாமா சுகமா இருக்கிறீங்களோ?'' ஏதோ நினைவிலும் பேச வேண்டுமே என்று கேட்டு வைத்தான் சுகந்தன்'' ஓ... சுகத்துக்கென்ன குறைச்சல். உனக்கென்ன...நீ வெளிநாடு போனாலும் உன்ரை குடும்பத்தை சச்சி பார்த்துக் கொள்ளுவான். எங்களுக்கெண்டா ஒருதருமில்லை'' அந்த வெறியிலும் வெகு நிதானமாக நறுக்கென்று அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளினால் காயப்பட்டான் சுகந்தன் அவரை அடிக்கவென்று தன்னிச்சையாகப் பரபரத்த கைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான்

அந்தநேரம் பார்த்து வீட்டில் வாசுகியுடன் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான் சச்சி. சுகந்தன் வந்தநாளில் இருந்து அவனைத் தொடவும் அனுமதிக்க மறுத்த அவன் மகன் வேறு சச்சியின் மடியில் சொகுசாக அமர்ந்திருந்தான். ''சச்சிதானந்தன் இப்பிடி ஊரான் வீட்டு பெஞ்சாதி, பிள்ளையை மேய்க்கிற நேரத்துக்கு. நீரே ஒரு கலியாணம் கட்டி பிள்ளையும் பெறலாமே'' அடக்க முடியாத கோபம் சுகந்தனின் வாயிலிருந்து கத்தியாகப் புறப்பட்டது. ''சுகந்தனுக்கு வெய்யிலுக்காலை வந்தது என்னவோ செய்யுது போலை'' என்று சொல்லி வாசுகியைப் பார்த்துக் கண்சிமிட்டிச் சிரித்தான் சச்சி. வாசுகிக்கு மட்டும் நிலைமையின் விபரீதம் சங்கடமாக இருந்தது சச்சியின் அந்தச் சிமிட்டலும், சிரிப்பும் சுகந்தனின் பொறுமையைச் சோதித்திருக்க வேண்டும். கண்ணிமைக்கும் நேரத்தில் தன்னையும் மறந்து சச்சியின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறைவிட்டான்.

அன்று நடந்துவிட்ட அந்தச்சம்பவத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவள் போல் வாசுகி நடந்துகொண்டாள்' 'நீங்கள் இல்லாத நேரத்திலை, எவ்வளவு உதவியா இருந்தவர் சச்சி. எப்பிடியும் ஆரின்ரையோ பேச்சைக் கேட்டு அவருக்குக் கைநீட்டி அடிச்சது பிழைதான்'' என்று இவன் அவளுடன் பேச முயன்ற நேரமெல்லாம் சச்சிக்காகவே பரிந்துபேசினாள் வாசுகி. இன்னும் நாலு வயதும் முடியாத அவன் மகன், ''மாமாவுக்கு அடிச்சதுக்கு அப்பாவை கத்தியாலை வெட்டவேணும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் தன் வீட்டிலேயே தான் மிகவும் அந்நியனாகி விட்டான் சுகந்தன். தான் இழந்துவிட்டது மகனுடைய பாசத்தையும் தான் என்பது இப்போது புரிந்தது அவனுக்கு.

''நான் நல்ல குடும்பத்திலை இருந்து வந்தவன் எனக்கு ஒரு நல்ல மனைவியாக நீர் இருக்க வேணும் எண்டு எதிர்பார்க்கிறன்'' என்று பொறுமை இழந்து வாசுகியைக் கண்டித்தான் சுகந்தன். ''ஏன் உங்கடை நல்ல குடும்பத்துக்கு நான் என்ன கேடு செய்தனான்? ஆரோடையும் ஓடிப்போட்டனே என்னைத் தேவையில்லையெண்டா இந்த வீட்டையும்,பிள்ளைகளையும் பொறுப்பெடுங்கோ. நான் எங்கையெண்டாலும் போறன்'' வாசுகியின் இந்தப் பதிலால் அடியுண்டவனாக, இதற்குமேலும் பேச்சை வளர்க்கப் பயந்து வாயை இறுக மூடிக்கொண்டான் சுகந்தன். அவனது இந்தப்பலவீனம் அவளுக்குப்பலமானது. மனிதத்தோல் போர்த்திய மிருகமாக, எதுவுமே நடவாதது போல் சச்சி இப்போதும் வந்து போய்க்கொண்டுதானிருந்தான்

இன்று மாலை வாசுகி தன்னை மறந்து இவனுடன் சற்று அந்நியோன்னியமாக இருந்த வேளை சுகந்தன் உருக்கமாக தன் வேண்டுகோளை விடுத்தான் ''வாசுகி,சச்சி இங்கை வந்து போறதைப்பற்றி ஊரில் கண்டபடி பேசினம் மைதிலியும் வளர்ந்திட்டாள். நாங்கள் வீண்பேச்சுக்கு இடம் குடுக்காமல் நடக்கிறது நல்லதெல்லே''

''ஊர் ஆயிரம் பேசும். ஊருக்காகவே நாங்கள் வாழுறம் நீங்கள் இல்லாத இந்த மூண்டு வருசமும் சச்சி தானே... ''

''அதுதான் நான் வந்திட்டனே!'' அவள் முடிக்க முன்னே குறுக்கிட்டான் சுகந்தன்.

''இவ்வளவு வீண் கதை எதுக்கு? சச்சிக்கும் எனக்கும் ஏதும் பிழையான உறவுதான் எண்டு இந்த ஊருக்கோ, உங்கடை அம்மாவுக்கோ ஏன் உங்களுக்கோ தன்னும் நிரூபிக்க முடியுமோ'' வாசுகி கேட்டுவிட்டாள்!! சுகந்தனால் முடியாதுதான் நவீன வசதிகள் பெருகிவிட்ட இந்தக் காலத்தில் பெண்களின் கற்பு நிலையை நிரூபணம் செய்ய யாராலுமே முடியாதுதான் தன் மனைவி பற்றிய மதிப்பெல்லாம் தன் மனதளவில் சரிந்துபோய்விட்டவனாக மௌனமாகினான் சுகந்தன்'

... 15 ஆம் பக்கம் பார்க்க

## ஆங்கிலம்

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆனால் தவறாக பேசிவிடுவோமா என்று தயக்கமாக இருக்கிறது. இதுதானே உங்களது பிரச்சனை. இனி கவலை வேண்டாம் உங்களின் பிரச்சனை மூன்றே மாதங்களில் தீர்க்க முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

Bright Training Centre
P. O. Box 192,
Colombo

01027

**வைத்திய கலசம்**

# தோய்வு பற்றிய சில அடிப்படைத் தகவல்கள்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B. S. (Cey)

★ தொய்வு அல்லது ஆஸ்த்மா நீங்கள் அடிக்கடிகாணும், கேள்விப்படும் ஒரு நோயாகும். நூற்றுக்கு நாலு பேருக்கு இது காணப்படுவதாகச் சில மேல் நாட்டு ஆய்வுகள் கூறுகின்றன. நோயாளிகளுக்கு கடும் சுவாச அவஸ்தையும், அருகில் இருக்கும் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் பீதி உணர்வையும் கொடுப்பதால், நோயாளிகள் மாத்திரமின்றி ஏனையவர்களும் இந் நோய் பற்றிய சில அடிப்படை உண்மைகளையும், உடன் சிகிச்சை முறைகளையும் அறிந்திருப்பது அவசியம்.

★ தொய்வு எந்த வயதிலும் தொடங்கலாம்; ஆனல் குழந்தைகளையும் இளம் பராயத்தினரையும் அதிகம் பிடிப்பதை நீங்கள் அவதானித்திருக்கக் கூடும். சிறு குழந்தைகளில் காணப்படும் தொய்வு அவர்கள் வளர்ந்த பின்னரும் அவர்களை விட்டகலாது அல்லற் படுத்துமா என்பதே பெரும் பாலான பெற்றோர்களின் அங்கலாய்ப்பு ஆகும். பெரும்பாலான குழந்தைகள் (60% மேல்) வளர்ந்து 13 வயது ஆவதற்கிடையில் இது முற்ருக மறைந்துவிடும். இல்லையெனிலும் சுலபமாகச் சமாளிக்கக் கூடிய அளவிற்குத் தணிந்துவிடும்.

★ சில குடும்பங்களில் இந்நோய் பரம்பரை பரம்பரையாக காணப்படுவதையும் நீங்கள் பல தடவைகள் கண்டிருக்கக் கூடும். இது ஒரு பரம்பரை நோய்தான். ஆனல் நோயுள்ளவரின் குழந்தைகள் எல்லோரையும் இது நிச்சயம் பீடிக்கும் என்று சொல்ல முடியாது. அதே நேரத்தில் பரம்பரையில் இல்லாதவர்களுக்கு புதிதாகவும் தோன்றக்கூடும்.

★ இது ஒரு தொற்று நோயல்ல என்பது கட்டாயம் நினைவில் வைத்திருக்க வேண்டிய செய்தி. தொய்வு நோயாளிகளைப் பராமரிப்பதினலோ அவர்களுடன் கூட வாழ்வதினலோ ஒரு போதும் தொற்ருது.

★ ஆஸ்த்மாவின் போது சுவாசக் குழாய்கள் சுருங்குகின்றன. அவற்றின் மென்சவ்வுகள் (Mucus Memprane) தடிப்படைகின்றன. சளி (Mucus) அவற்றை அடைக்கிறது. இதனல் சுவாசம் கடுமையான தொழிற்பாடாகிறது. மூச்சை உள்ளே எடுப்பதை விட, உள்ளெடுத்த காற்றை வெளியேற்றுவதே சிரமமாக இருப்பதை நோயாளர்கள் உணர்வார்கள்.

★ சிலருக்கு ஆஸ்த்மா திடீரெனத் தோன்றி திடீரென மறைந்து விடலாம். சிலருக்குச் சிறிது சிறிதாகத் தோன்றி பல மணி நேரமோ பல நாட்களோ கூட நீடிக்கலாம். சிலருக்குச் சாதாரணமாக இருக்கலாம். சிலருக்கு மிகக் கடுமையாக இருக்கலாம். ஆனல் நோயின் பாதிப்பு இல்லாத நேரங்களில் ஏனையவர்கள் போல சுகதேகியாக இருப்பார்கள்.

★ ஆஸ்த்மாவில் இரண்டு முக்கிய வகைகள் உண்டு. கடும் பனிக்குளிர் நேரத்தில் பலருக்கு ஆஸ்த்மா தோன்றுவதைக் கண்டிருப்பீர்கள். இதே போல் தூசி, மகரந்தம், பறவைச் சிறகுகள், விலங்குகளின் மயிர் சிலவகை உணவுகள் போன்றவற்றிக்கு அலர்ஜியினல் ஏற்படுவது முதல்வகை. இது பொதுவாகச் சிறு வயதிலேயே ஆரம்பித்துவிடும். இரண்டாவது வகை வளர்ந்தவர்களிடையே ஆரம்பிப்பது. இவர்களது ஆஸ்த்மாவிற்கு அலர்ஜி ஒரு காரணமாயிருப்பதில்லை.

★ ஆஸ்த்மாவின் முக்கிய அறிகுறிகளாக மூச்சு விடுவதில் சிரமம், ஒருவித ஓசையுடன் மூச்சு விடுதல் (இதையே 'ஆஸ்த்மாவின் இராகம்' எனக் கவிஞர் ஒருவர் பாடியுள்ளார்), நெஞ்சில் இறுக்கத்தன்மை, இருமல் ஆகியவற்றைக் கூறலாம். சிலரில் அதிலும் முக்கியமாக குழந்தைகளில் இரவில் ஏற்படும் தொடர்ச்சியான இருமல் மாத்திரமே, ஆஸ்த்மாவின் ஒரே அறிகுறியாக இருக்கலாம்.

★ ஆஸ்த்மாவைக் குணப்படுத்தினல் எக்ஸிமா வரலாம் என்றும், எக்ஸிமாவைக் குணப்படுத்தினல் ஆஸ்த்மா வரலாம் என்றும் பல நோயாளிகள் பயப்படுகிருர்கள். சில போலி வைத்தியர்கள் இதற்குத் தூபமூட்டுகிருர்கள். இது தவருன நம்பிக்கை. ஆஸ்த்மா, எக்ஸிமா, தும்மல், மூக்கடைப்பு, மூக்கிலிருந்து நீர் சிந்துதல் போன்ற பல அறிகுறிகளும், அலர்ஜியின் வெவ்வேறு தோற்றங்களாதலால், இவை யாவுமே ஒருவருக்கு ஒரே தருணத்திலோ அல்லது தனித்தனியாக வெவ்வேறு நேரங்களிலோ ஏற்படலாம் என்பதே உண்மை.

★ புரோன்கைடிஸ் (Bronchitis) என்ற நோயும் ஆஸ்த்மாவிற்கு உண்டாவது போன்ற அறிகுறிகளுடனேயே ஏற்படுவதால், நோயாளிகளுக்கும், ஏன் வைத்தியர்களுக்கும் கூட பல சந்தர்ப்பங்களில் சந்தேகத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தலாம். ஆனல் புரொன்கைடிஸ் கிருமி தொற்றுவதாலேயே ஏற்படுகிறது. இயோசினேபிலியா என்று பலரால் சொல்லப்படும் Trophical Pulmonary Eosinophilia என்ற நோயும் இதேவித சந்தேகத்தை ஏற்படுத்தும். இருதயம் செயற்றிறனை இழக்கும் (Heart Failure) நிலையும் ஆஸ்த்மா போல் தோற்றமளிக்கலாம். எனவே முதல் முதலாக ஆஸ்த்மா நோய் ஏற்பட்டால், சுய வைத்தியம் செய்ய முனையாது. தகுதியான வைத்தியரிடம் சென்று பூரண பரிசோதனை செய்து நோயை நிச்சயப்படுத்துவது அவசியம்.



## வழக்கறிஞரும் சாட்சியும்

ஒருவனை ஒருவன் அடித்த செய்திகளைப்பற்றி நீதிமன்றத்தில் விசாரணை நடந்த போது, வழக்காளியைக் குற்றவாளி அடித்ததைத் தான் பார்த்ததாக ஒருவன் சாட்சி கூறினன்.

குற்றவாளியின் வழக்கறிஞர் அந்தச் சான்றுரைப் போனைப் பார்த்து 'அந்த அடி எப்படிப்பட்ட அடி, என்று கேட்டார். கையை ஓங்கி வலிமையோடுஅடித்ததாகச் சாட்சி சொல்பவன் சொன்னன்.

வழக்கறிஞர் அவனைப் பார்த்து 'அது எப்படி அடி என்று எனக்கு நீ மெய்ப்பிக்க வேண்டும்' என்ருர்.

சாட்சி சொல்பவன் நீதிபதியைப் பார்த்து அது இப்படிப்பட்ட அடி என்று நான் எப்படி மெய்ப்பிப்பேன்? அதுபலமான அடிதான் என்ருன். நீதிபதி அவனைப் பார்த்து 'வழக்கறிஞர் சொல்லுகிறபடி அவருக்கு நீ மெய்ப்பிக்கத் தான் வேண்டும்' என்ருர்.

உடனே சாட்சி சொல்பவன் இரண்டு கைகளையும் ஓங்கித்தன் வலிமையெல்லாம் கூட்டி வழக்கறிஞரை அடித்து 'இவ்வகையாகத்தான் குற்றவாளி அடித்தான்'' என்ருன்.

வழக்கறிஞர் அந்த அடி பொறுக்க மாட்டாமல் கீழே விழுந்து விட்டார். இது வழக்கறிஞர் கேட்டுக் கொண்டபடி நிகழ்ந்த செயலாதலால் அடித்தவனை ஒன்றும் செய்ய முடியாமற் போய் விட்டது.

(பிரதாபமுதலியார் சரித்திரத்திலிருந்து)

## ஒரு பாட்டில் எட்டு நூல்கள்

சங்க இலக்கியம் பத்துப் பாட்டு எட்டுத்தொகை என்பன. பின்வரும் பாடல் எட்டுத்தொகை நூல்கள் இவைஎன்பதைக்கூறுகிறது.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு உற்ற பதிற்றுப்பத்தோங்கு பரிபாடல் கற்றறிந்தோ ரேத்தும் கலியோடகம்புறமென்று இத்திறத்த எட்டுத் தொகை

பாடலிற் கூறப்படும் எட்டுநூல்கள்:- நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

## விண்வெளிச் சாதனைகள்

விண்வெளியில் முதலில் நடந்து சாதனை புரிந்தவர் 'அலெக்றிலியோநோவ்' எனும் ரஷ்யர் ஆவார். 1965 மார்ச் 18இல் 'வோஷ்காட்' விண்கலம் மூலம் சென்று விண்வெளியில் நடந்தார்.

இரண்டாவதாக விண்வெளியில் நடந்தவர்கள் ஜேம்ஸ் ஏ. எலாவெல் எட்வின் இ. ஆல்ட்ரின் ஆவர் இவர்கள் ஜெமினி 12 கலம் மூலம் 1966 நவம்பர் 12ந் தேதி விண்வெளிக்குச் சென்று நடந்தனர்.

1980ஆம் ஆண்டில் மறினர்-10 கலம் புதன், வெள்ளி, செவ்வாய்க் கிரகங்களை அணுகி புகைப்படங்களை எடுத்தது.

வியாழன் கிரகத்தை பயணியர் 10, பயனியர் 11 என்ற கலங்கள் முதலில் அணுகின,

முதல் முதல் அனுப்பப்பட்ட பூமிக்கான துணைக் கோள் ''ஸ்புட்னிக்'' என்றதாகும். இது ரஷ்ய நாட்டால் 1967இல் அனுப்பப்பட்டது.

விண்வெளிக்கு முதன் முதல் சென்ற பெண் ''வலன்றீனு திரெஸ் கோவர்''

வானில் மிகப் பெரிய நட்சத்திரம் ஒரிகா

ஞாயிற்றுத் தொகுதிக்கு (Solanr System) அண்மையுள்ள நட்சத்திரம் 'புரொக்சிமா சென்ரோறி'

மிகவும் ஒளி படைத்த உடு 'சிரியஸ்' ஆகும் (Syrius)

## ஐம்பிரிவில் தொகைப் பெயர்கள்

| | |
|---|---|
| ஐம்பால் | — ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன்பால், பலவின் பால். |
| ஐங்குரவர் | — அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன். |
| ஐந்தொழில் | — படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல். |
| ஐம்பூதம் | — நிலம், நீர், தீ, வளி, வான், |
| ஐங்கணை | — மாம்பூ, அசோகம்பூ, குவளைப்பூ, முல்லைப்பூ, தாமரைப்பூ. |
| ஐந்து இலக்கணம் | — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி. |
| ஐம்பொறி | — மெய், வாய், கண், மூக்கு, செவி. |
| பஞ்ச கௌவியம் | — பால், தயிர், நெய், கோசலம்' கோமயம். |
| பஞ்ச தோத்திரம் | — தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம். |
| ஐம்பெருங் குழு | — அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், ஏவலர். |
| ஐம் பொன் | — பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம். |
| ஐம்பெரும் பாதகம் | — கொலை, களவு, கள், பொய், குரு நிந்தை. |
| ஐம்பெரும் காப்பியம் | — சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. |
| பஞ்சாமிர்தம் (ஐவகை அமிர்தம்) | — முப்பழம் (பலா, மா, வாழைப் பழம்), தேன் சர்க்கரை, என்பன, கலந்த அபிடேக திரவியம். |
| பஞ்சாங்கம் | — திதி, வாரம், நாள், யோகம், கரணம். |
| ஐவகை இசைக் கருவி | — தோற் கருவி, துளைக்கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக் கருவி, நரம்புக் கருவி. |
| ஐவகை வேள்வி | — தெய்வம், பிரமம், பூதம், தென்புலத்தார், விருந்தினர் |
| ஐவகைச் சுத்தி | — பூத சுத்தி, ஆன்ம சுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி. |
| ஐம்பால் | — முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள் (கூந்தல்), |
| பஞ்ச வருணம் | — பச்சை, மஞ்சள், வெண்மை, கருமை, செம்மை. |
| பஞ்ச பாண்டவர் | — உதிட்டிரன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன். |
| ஐஞ் சிறு காப்பியம் | — உதயணன் கதை, நீலகேசி, சூளாமணி, நாககுமார காவியம், இயசோதர காவியம். |

# சேக்கிழார் சுவாமிகளின் நாட்டுப்பற்று

அகளங்கன்

சிவபெருமானின் பெருமைகளையும், அவரை வழிபட்டுய்ந்த அடியார்கள் பெருமையையும் அழகாக எடுத்துக் கூறும் புராணம் பெரியபுராணமாகும். சேக்கிழார் சுவாமிகள் "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்" பாடிய இப்புராணத்திற்கு சிவபெருமானே 'உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்ததாக இப்புராணத்தின் சிறப்பினை ஆன்றோர் போற்றிப் புகழ்கின்றனர்.

"உலகெலாம்" என இறைவன் எடுத்துக் கொடுத்த அடியைத் தனது முதற் பாடலின் முதற் சொல்லாக வைத்து. பாயிரத்தின் வாழ்த்துப் பாடலிலே "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" எனத் தொடங்கிப் பாடுகிறார் சேக்கிழார் சுவாமிகள். முதற் பாடலில் மட்டுமன்றி நடுவிலும் திருஞானசம்பந்தர் புராணத்தில் "சோதிமுத்தின் சிவிகை..." எனத் தொடங்கும் பாடலில் "அஞ்செழுத்து ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்" என்றும், புராணத்தின் இறுதிச் சருக்கமான வெள்ளானைச் சருக்கத்தின் இறுதிப் பாடலான "என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்..." என்ற பாடலில் இறுதி வரியில் இறுதிச் சொல்லையும் "உலகெலாம்" என்றே சொல்லி முடிக்கிறார்,

"மன்றுளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்,'

இப்படியாக முதல், இடை. கடை என மூன்று இடங்களிலும் "உலகெலாம்" என்ற சொல்லைச் சுவாமிகள் சிறப்புச் செய்தது இப்புராணத்தின் தனிச் சிறப்பாகும். திருவள்ளுவர் திருக்குறளின் முதற் குறளை அகரமுதல . என 'அ' வில் தொடங்கி இறுதிக்குறளை

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

என 'ன்' இலே முடித்தது சேக்கிழாருக்கு ஒரு உந்துதலாக இருந்திருக்கலாம் 'ன்' என்ற மெய்யெழுத்தே மெய்யெழுத்தின் கடைசி எழுத்தாகும் 'ன்' என்ற மெய்யெழுத்தின் கடைசி எழுத்தும் 'ஔ' என்ற உயிர் எழுத்தின் கடைசி எழுத்தும் சேர்ந்து 'னௌ" என்ற தமிழ்க் கடைசி எழுத்து உருவாவதை நினைவிற் கொள்ளலாம்.

உலகம் பதின் நான்கு என்ற முற்காலக் கருத்திற்கேற்ப மொத்தம் பதின் நான்கு இடங்களில் "உலகெலாம்" என்ற திருவாக்கைப் பெரிய புராணத்தில் ஒலிக்கச் செய்த சிறப்பும் போற்றி வியக்கத் தக்கதே இறைவனின் 'முதல்' கொண்டு காவியத் தொழில் செய்து சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தவர் சேக்கிழார் சுவாமிகள் என்பது மிகைக் கூற்றல்ல.

அநபாய சோழ மன்னனின் சீவக சிந்தாமணிக் காப்பியப் பற்றை மாற்றி, அச்சமணக் கொள்கையால் பயனேதுமில்லை என்பதை உணர்த்தவே சிவனடியார் பெருமை கூறும் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை சேக்கிழார் சுவாமிகள் பாடினார் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

சைவத்தின் மேன்மையைப் பாட ஆசைகொண்ட சேக்கிழாருக்கு தமிழின் மேன்மை, தமிழ் நாட்டின் மேன்மை என்பவற்றையும் பாடவேண்டுமென்ற ஆசை இருந்திருக்கிறது என்பது இப்புராணத்தின் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கிறது.

## திருவையாறும் கைலைமலையும்

சேக்கிழார் சுவாமிகள் தமது தமிழ்ப்பற்றைப் பல இடங்களிலும் காட்டியுள்ளார். கவிக் கூற்றாக மட்டுமன்றி பாத்திரங்கள் வாயிலாகவும் காட்டியுள்ளார். தமிழ்ப்பற்றையும், நாட்டுப்பற்றையும் மக்களுக்கு ஊட்டுவதற்காக சிவபெருமான் மூலமாக தமிழின் சிறப்பையும், தமிழ் நாட்டுச் சிறப்பையும் பெரிய புராணத்தில் வெளிக்காட்டிய சிறப்பு சேக்கிழாருக்கே உரிய தனிச் சிறப்பாகும். சேக்கிழார் பெருமானின் தமிழ்ப்பற்று தனியே ஆராயப்பட வேண்டியது. இங்கே அவரது நாட்டுப் பற்றை நோக்குவோம்.

சேக்கிழாருக்கு நாட்டுப் பற்று அதிகம். சோழ நாட்டின் முதன் மந்திரியாக இருந்து நாட்டின் முன்னேற்றத்தில் பங்கு கொண்டமையால் போலும் அவருக்கு நாட்டுப்பற்று மிகமிக அதிகம் சிவபெருமான் வட நாட்டுக் கைலையங்கிரியில் வீற்றிருக்கிறார் என்ற கொள்கையில் கூட சேக்கிழாருக்கு அதிகம் பற்றில்லை. வடநாட்டுக்குச் சென்று கைலைமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் தரிசிப்பதே முத்திக்கு வழி என்ற கொள்கையிலும் சேக்கிழாரின் மனம் அதிகம் ஒன்றியதாகத் தெரியவில்லை அவரது நாட்டுப் பற்று அதற்கு இடம் கொடுக்கவில்லை தமிழ்நாடு எல்லாவகையிலும் சிறப்புடையது என்பதே அவரது அடிநாதமாக இருக்கின்றது.

நமிநந்தி அடிகளின் கனவிலே சிவபெருமான் தோன்றி "திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லோரும்தேவ கணங்களே" என்று கூறுவது திருவாரூரின் சிறப்பைக் கூறும் ஒன்று.

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் திருநாவுக்கரசர் கைலைமலை நோக்கிச் செல்லும் காட்சியைக் காட்டுகிறார் சேக்கிழார். முதுமையின் கொடுமையால் நடக்க முடியாமல் தவழ்ந்து செல்கிறார் அப்பர். அவரின் மார்பு அரைந்து, தசை கிழிந்து குருதி சோர எலும்பு முறிய, இரவு பகலாகத் தவழ்ந்து தவழ்ந்து கைலைமலையாத்திரையை மேற்கொள்கிறார் நாவுக்கரசர்.

கொடிய கூரிய கற்களும், அடர்ந்த இருண்ட காடும் மிருகங்கள், பாம்புகள் விஷ ஐந்துக்களும் நிறைந்திருக்கும் வழியிலே தன் ஊன் அழிய ஊர்ந்து சென்று அதுவும் முடியாமல் தவித்த நேரத்தில் சிவபெருமான் ஒரு முனிவர் போல அவரருகே வந்து

"சிந்தி இவ்வுறுப் பழிந்திட வருந்திய திறத்தால்
இந்த வெங்கடத் தெய்திய தென்"

என்று கேட்கிறார். அதற்கு அப்பர் சுவாமிகள் "மலைமகளுடன் எம்பெருமான் வீற்றிருக்கும் சிறப்பை அவர் அடியவனாகிய யான் கண்டு கும்பிடும் நோக்கில் வந்தேன்" ,என்று கூறுகிறார் அதற்கு முனிவராக வந்த சிவபெருமான்.

"கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு
பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ
அயில்கொள் வேற்படை அமரரும் அணுகதற் கரிதால்
வெயில் கொள் வெஞ்சுரத் தென்செய்தீர் வந்தென விளம்பி"

கயிலை தேவர்கள் கண்டு தொழுவதற்கே அருமையானது அப்படியாயிருக்க மானுடர் சென்று கண்டு தொழுதல் எளிமையானதோ, வீணாக இந்தச் சுடுகானில் வந்து விட்டீர் எனக் கூறி "மீளும் அத்தனை உமக்கினிக் கடன்" என்றுரைக்கின்றார். அதற்கு அப்பர் சுவாமிகள்

"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்."

என்று மறுக்கிறார். நாவுக்கரசரின் மனத் திண்மையை, வைராக்கியத்தைக் கண்ட முனிவர் தானே சிவபெருமானாகக் காட்சி கொடுத்து அருகிலே ஒரு பொய்கையை உண்டாக்கிக் காட்டி "இப் பொய்கையிலே மூழ்கி திருவையாற்றிலே எழுந்து கயிலைக் காட்சியைக் காண்க" எனப் பணித்து மறைகின்றார்.

நாவுக்கரசர் அப்பொய்கையிலே மூழ்கி திருவையாற்றிலேயுள்ள ஒரு வாவியிலே எழுந்து அங்கே கயிலைக் காட்சியைக் கண்டு வணங்கினார் என்று சேக்கிழார் சுவாமிகள் பாடுகிறார்.

சிவபெருமானை வழிபடக் கயிலை மலைக்குச் செல்ல வேண்டியதில்லை. திருவையாற்றிலே தமிழ் நாட்டுக்குள்ளேயே தரிசிக்கலாம் என்பதைச் சிவபெருமானே அடியார்களுக்கு எடுத்துக் கூறுவதாகச் சேக்கிழார் சுவாமிகள் கூறி, தமிழ் நாட்டின் சிறப்பை வியந்து தனது நாட்டுப் பற்றைக் காட்டியுள்ளார்.

## திருவாலங்காடும் கைலைமலையும்

இதே போல காரைக்காலம்மையார் புராணத்திலும் சேக்கிழார் சுவாமிகளின் நாட்டுப்பற்றைக் கண்டு வியக்கலாம். சோழநாட்டில் காரைக்காலில் பிறந்த புனிதவதியார் காரைக்காலம்மையாராகிப் பேயுடம்பைப் பெரு

... 14 ஆம் பக்கம் பார்க்க

# ஈழத்துப் படைப்புகளும் அவைபற்றிய நோக்குகளும்

தெணியான்

அண்மைக்காலத்தில் எனக்குக் கிடைத்த அநுபவங்கள் வாயிலாக மனதில் எழும் எண்ண அலைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் போலத் தோன்றுகிறது. நான்பகிர்ந்து கொள்வ விரும்பும் இந்த அநுபவங்கள் எவையும் எனக்குப் புதியவை அல்ல.

நான் பேனா பிடிக்கஆரம்பித்த காலம் முதலாக அவ்வப்போது ஏற்பட்டு வருபவைகள்தான். ஆயினும் இந்த அநுபவங்கள் மூலம் மனதில் எழுந்து கொண்டிருக்கும் எண்ண அலைகள் புதியவைகள். இந்த எண்ண அலைகள் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பவை இன்று வெளிப்படுத்தப்படும் இலக்கிய விமரிசனங்களே என்பதனையும் நான் புரிந்து கொள்ளுகிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக ஈழத்து ஆக்க இலக்கியங்கள் பற்றிய முழுமையான விமரிசனங்கள், இலக்கிய ஆய்வாளர்களால் முன்வைக்கப்படவில்லை. கருத்தரங்குகள், நூல் வெளியீடுகள் இடம் பெறும் போது மாத்திரமே சிற்சில கருத்துக்கள் அபிப்பிராயங்கள் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. அக் கருத்துக்கள் அபிப்பிராயங்கள் முழுமையானவையாக இல்லாத போதும் அவற்றின் அடிநின்றெழும் எண்ண அலைகளைப் படைப்பாளியினால் தட்டிக் கழித்துவிட முடியவில்லை.

கடந்த 18-09-88 முரசொலியில் 'மாயை' என்ற சிறு கதை ஒன்று வெளிவந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தக் கதை இவ்வாறு முடிகின்றது;

"அவன் எழுதியிருப்பதை அப்பா திரும்பத் திரும்பப் படித்தார். அவருக்கு விளங்கவில்லை.

அம்மாவையும் அழைத்துப் படித்துக் காட்டினார். அவளுக்கும் விளங்கவில்லை.

தங்கச்சியவை வந்து படித்துப்பார்த்தார்கள் அவர்களுக்கும் விளங்கவில்லை.

கடைக்குட்டித் தம்பி...... அவனுக்கும் விளங்கவில்லை.

அவர்கள் எவருக்குமே அவன் என்ன தான் எழுதி இருக்கின்றான் என்பது விளங்கவே இல்லை"

இந்த 'விளங்காமை' கதையின் பாத்திரமாகவுள்ள அவர்களுக்குத்தான் உரியதென்று நான் கருதினேன். இந்தச் சிறுகதை வெளிவந்த பின்னர் தரமான வாசகர்களெனக் கணிக்கத் தகுந்த சிலரும், தம்மை விமர்சகர்களாகக் கருதுகின்றவர்களும் என்னிடமே, 'கதையின் முடிவு விளங்கவில்லை' எனக் கேட்டார்கள்.

நான் நினைத்துக் கொண்டேன், இவர்களெல்லாம் இந்தச் சிறுகதையின் பாத்திரங்களாக வருகின்ற அப்பாவா? அம்மாவா? அக்காமாரா? அல்லது கடைக் குட்டித் தம்பியா? என்றே.

இந்த விளங்காமைக்கான காரணம் என்ன என்று மீள இன்று நினைத்துப் பார்க்கும் போது ஓர் உண்மை புலப்படுகின்றது. 'இந்த எழுத்தாளரின் தரம் அல்லது மட்டம் இவ்வளவுதான். இதற்குமேல் இவர்சிந்தித்திருக்க இயலாது' என முன்கூட்டியே 'மட்டங் கட்டிக்' கொண்டே அருகே உள்ள எழுத்தாளனை மதிப்பீடு செய்ய எண்ணும் தவறான மனப்பாங்கே இதற்குக் காரணம் என்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது. வெளியிலிருந்து வரும் எழுத்துக்களை எல்லாம் இதழ் இதழாகப் பிரித்த, 'குறியீட்டின் மூலம் இதனைச் சொல்லுகிறார்; சொல்லாமலே இதனை உணர்த்தி இருக்கின்றார்' என்ற விதமாகச் சிலாகித்துப் பேசுகின்றவர்கள், அருகே இருக்கும் ஓர் எழுத்தாளனின் படைப்பினை அவ்வாறு நோக்குவதற்கு ஏன் தவறிவிடுகின்றார்கள்.

வீரகேசரியில் (10-7-88) 'செல்லாக்காசு' என்ற சிறு கதை வெளிவந்தது. அந்தச் சிறுகதை பற்றியும் பரவலாகப் பலர் என்னிடம் கருத்துத் தெரிவித்தார்கள். ஆனால் ஒருவர்தானும் அந்தப் படைப்பின் நுட்பங்களைப் புரிந்து கொண்டு என்னிடம் பேசியதாக எனக்குத் தோன்றவில்லை. உதாரணமாக ஒரு சிலவற்றை இங்கு தொட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

நாற்பத்தைந்து வயதினை அடைந்து விட்ட மாமாவுக்குப் பெண் பார்க்க, இருபத்தைந்து வயது வாலிபனான மருமகன் அவருடன் புறப்பட்டுச் செல்லுகிறான். அப்போது அவன் நினைக்கிறான்; "நான் 'ஜீன்ஸ்' அணிந்து கம்பீரமாகக் காட்சி அளிக்கிறேன் ......மாமா வேட்டியுடன் புறப்பட்டு நிற்கிறார். அவர் மனதிலும் இன்று விருப்பமிருக்கலாம். தனது 'பெல்ஸ்' ஒன்றைப் போட்டுக் கொண்டு புறப்படுவதற்கு"...

பெண்பார்க்கப் போனவர்களுக்கும் கலியாணத் தரகருக்கும் பெண் வீட்டில் தேநீர், சிற்றுண்டி கொடுத்து உபசரிக்கின்றார்கள். ஓலைக் குடிசையில் வாழ்ந்த பெண் வீட்டார் வெளிநாட்டுப் பணத்தில் திடீரெனக் கட்டிய ஆடம்பரமான வீட்டில் இந்த உபசாரம் நடைபெறுகிறது.

"ஒருவெள்ளித் தட்டில் வடை, வாழைப்பழம், பிஸ்கட், கேக், என்று நிறைத்துக் கொண்டு வந்து முதலில் மாமாவிடம் நீட்டுகிறார். மாமா ஒரு வடையைக் கையில் எடுக்கிறார். அதன் பிறகு என்பக்கம் திரும்புகிறார். நான் கேக் ஒன்றை எடுத்துக் கொள்ளுகிறேன் தரகர் வகைக்கொன்றாக எல்லாவற்றையும் கையில் தூக்கிக் கொள்ளுகிறார்"

இந்த விருந்தில் பெண்ணின் தகப்பனார் எந்தவொரு சிற்றுண்டியையும் எடுத்து உண்ணவில்லை. தேநீர் பரிமாறிய மணப்பெண்ணும் அவருக்குத் தேநீர் கொடுக்கவில்லை.

இவ்வாறு இந்தச் சிறுகதையில் இன்னும் சில சொல்லலாம். இவையாவும் எவற்றைச் சொல்லாமல் சொல்லுகின்றன?

இவற்றைத் தரமான வாசகர்கள் ஏன் உணருகிறார்கள் இல்லை? விமர்சகர்கள் இவற்றைக் கண்டு கொள்ள மறப்பதற்கான அல்லது மறுப்பதற்கான நியாயந்தான். 'மாற்றான் தோட்டத்து மல்லிகை மணமில்லாதது' என்று கொள்ளும் மனப்பான்மை வரவேற்கத்தகுந்தல்ல. அதே சமயம் தனது தோட்டத்து மல்லிகையில் மணமே இல்லை என எண்ணும் மனப்பாங்கு நியாயமானதா? வரவேற்கத் தகுந்ததா?

இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் ஈழத்துப்படைப்புக்கள் யாவும் உன்னதமானவை என்பது கருத்தாகி விடாது ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புக்களில் இடம் பெறும் சிறப்புக்களையும் தரமான வாசகர்களும் விமர்சகர்களும் கண்டு கொள்ள வேண்டும். உடன்வாழும் அருகேயுள்ள படைப்பாளியைவிடவும் விமரிசகன் மேலே உயர்ந்து நிற்பதாகக் கருதி. படைப்புக்களை ஆழமாக நோக்கத் தவறிவிடுவது ஈழத்து இலக்கியத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குக் குந்தகமாகவே அமையும்.

# இலக்கியத்திலும் வரலாற்றிலும் வாழ்கின்ற சில உதாரணங்கள்

# குற்றமும் தண்டனையும்

சொக்கன்

**கடந்தவார தொடர்ச்சி**

குற்றம் செய்தவர்களை ஒறுக்காது அவர்கள் மனந்திரும்பத் தாமே தமக்குத் தண்டனை அளிப்பதாகிய தியாகம் புரிவோரும் உள்ளனர். கோப்பெருஞ்சோழன் சங்ககால மன்னன். தன்னை எதிர்த்துப் போர் புரிய வந்த மக்கள் மீது முதலிலே சீற்றம் கொண்டாலும் தன் அவைக்களப் புலவரின் அறிவுரையால் மனம் மாறிய இவன் அவர்களோடு எதிர்த்துப் போரிடாது நாட்டை அவர்களுக்கே கையளித்து அக்கால மரபுக்கிசைய வடக்கிருந்து உண்ணுநோன்பு நோற்று உயிர்துறந்தான்.

குமணன் சிறந்த கொடை வள்ளல். முதிரமலைத் தலைவனை அவன் புலவர்க்கும் வறியோர்க்கும் வரையாது வழங்குதல் கண்டு அவன் தம்பி அவன் மீது வெறுப்புக் கொண்டான்; அவனை அரசுக் கட்டிலிலிருந்து தொலைக்கச் சூழ்ச்சியும் செய்தான். இதனை அறிந்த குமணன் அரசைத் தம்பிக்கு அளித்ததோடு தானும் காடு சென்று உறைந்தான். ஆனால் அவன் தம்பிக்கோ அவனது தியாகத்தை உணரும் மனப்பக்குவம் இருக்கவில்லை அவன் தலையைக் கொணர்வார்க்குப் பரிசு அளிக்கப் போவதாக அக்கொடியவன் அறிவித்தான். அதற்காகவேனும் குமணன் தன் தம்பி மீது வெகுளி கொள்ளவில்லை. பரிசில் வேண்டி வந்த புலவர்க்குத் தன் தலையையே பரிசளிக்க முன் வந்து தம்பியின் இச்சையை எளிதாக்கினன். அவ்வள்ளல்.

பாடிநின்றனென் ஆகக்
கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடி
னன் பெயர்தவென்
நாடிழந் ததனினும் நனியின்
னாதென
வாள்தந் தனனே தலை
எனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறி
தொன் றின்மையின்
ஆடுமலி உவகையோடு வரு
வல்
ஓடாப் பூட்கைநின் கிழமை
யோற் கண்டே

நனி இன்னாது-மிகவும்கொடிது ஆடுமலிஉவகை-வெற்றிப்பெருமிதம் (புறநானூறு 168 9–15) என்று பெருஞ்சித்திரனார் குமணனுடைய தலையையே உவந்து அளிக்கும் வள்ளன்மையை மட்டுமன்றி அவன் தம்பிக்கு அவன் அளித்த ஒறுப்பையும் (தண்டனை) குறிப்பாக இப்பாட்டின் மூலம் பெறவைக்கின்றார் என்று கொள்ளலாம்.

இவ்விருபதாம் நூற்றாண்டில வாழ்ந்து புகழுடல் நிறுவிய மகாத்மா காந்தி தமது நாட்டு மக்கள் செய்த குற்றங்களுக்காகத் தாமே தம் உடலை வாட்டி உண்ணுநோன்பு நோற்ற ஆன்ம வேள்வியையும் இவ்விடத்தில் நினைவு கூர்வது பொருத்தமானது.

சீர்திருத்தத் தண்டனைகள் குற்றம் செய்தவர்களின் மனச்சான்றைத் தொட்டுத் தூய்மை செய்து திருத்தி விடுகின்றன என்பது இலக்கியங்களைப் பொறுத்த வரையில் பொருத்தமான நிகழ்வாகலாம். ஏனெனில் அவை 'இது இவ்வாறு இருக்கிறது' என்று மட்டும் கூறுது 'இன்று இவ்வாறுதான்இருத்தல்வேண்டும்' என்ற தமது விருப்பங்களையும் நியமனங்களையும் வாசகர்களிலே பதிக்கின்ற குறிக்கோளையும் கொண்டு எழுந்தவை. ஆனால் உண்மை வாழ்க்கையிலே சீர்திருத்தத் தண்டனைகள் குற்றவாளிகளின் மனங்களை மாற்றுவது என்பது அரிதாகவே இடம் பெறுகின்றது. அகிம்சையையே தமது வாழ்வின் உயிர்நாடியாகவும் பிறரைத் திருத்தத் தம்மை வருத்துவதே தமது வாழ்விலட்சியமாகவும் கொண்ட மகாத்மாகாந்திக்கு என்ன நிகழ்ந்தது? அவர் மதத்தை அநுட்டித்தவனே அவரின் உயிருக்கு உலை வைத்தான்! ஆக, இன்னுசெய்தார்க்கும் இனியவே செய்தலாகிய ஒறுத்தலும் பயனளவில் குறைவுடையதே.

## பழிக்குப்பழிவாங்கும் தண்டனை

தண்டனைகளுள் மிகச் கொடுமை வாய்ந்ததும் நீண்ட வரலாறு கொண்டதும் பழிக்குப் பழி வாங்குவதாகிய தண்டனையே. ஒருவன் இன்னொருவனுக்கு இழைக்கும் துன்பத்திற்கு மாற்றீடாக அவ்வாறு இழைத்தவனைத் துன்பத்திற்கு உள்ளாக்குவது இத்தண்டனையுள் அடங்கும். முற்காலத்தில், இழைக்கப்பட்ட துன்பத்திற்குப் பல மடங்கு அதிகமான துன்பத்தை வழங்குதலே வழக்கமாய் நிலவி வந்துள்ளது. மனிதனில் பகுத்தறிவு வளர்ச்சிஅடையாமலும் பண்பாடோ நாகரிகமோ நிலவாமலும் அவனுக்கும் விலங்கிற்கும் அதிக வேறுபாடு இல்லாதிருந்த காலம் அது. எனினும் அக்காலத்திலும் சிந்தனைத் திறனும் மனிதாபிமானமும் மிக்க ஒரு சிலராவது இருந்து, இந்த மிருகவெறித் தண்டனையின் கடுமையைத் தணிக்க முனைந்துதான் இருப்பர். இவ்வாறு முனைந்தவருள் குறிப்பிடத் தக்க ஒருவர் மோசஸ் என்னும் ஞானியாவார். யேசுகிறிஸ்துவுக்குப் பல காலம் முன்பு வாழ்ந்த அவர் ஒன்றுக்குப் பத்தாக நூறாக இழைக்கப்படும் தண்டனைகளின் கொடூரத்தைக் குறைக்கக் 'கண்ணுக்குக் கண் வேண்டும்.' 'பல்லுக்குப் பல் வேண்டும்' என்ற தொரு விதி சமைத்தார்.

'உனது வலக் கன்னத்தில் அறைந்தவனுக்கு உனது இடக் கன்னத்தையும் காட்டு' என்ற யேசுவினதும்,

இன்னாசெய் தார்க்கும் இனி
யவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.
(திருக்குறள்– சான்றாண்மை
– 987)

என்ற திருவள்ளுவரினதும் உபதேசங்கள் தோன்றாத காலத்தில், தோன்ற முடியாத சூழ்நிலையும் மனப் போக்கும் நிலவிய காலத்தில் மோசஸ் ஞானியரின் மேற்குறித்த அருள்வாக்கு மிக அவசிய தேவையாக இருந்திருக்கும் என்பதற்கு ஐயம் இல்லை. ஆனால் மோசஸின் அருள்வாக்கையே செயற்படுத்தும் அளவிற்காவது உலகம் மனிதாபிமான வளர்ச்சியை இன்றுவது அடைந்து விட்டதா என்பதுதான் கேள்வி.

பழிவாங்கும் மனப்பான்மையும் அதனை நிறைவேற்ற வல்ல ஆற்றலும் எவனில் நிறைந்துள்ளததோ அவனே வீரன் என்று வரையறை செய்து கொண்ட காலமும் ஒன்று இருந்தது அக்காலத்தின் தலைசிறந்தபிரதிநிதியாகத் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கொள்ளலாம். அவன் சிறுவனாய் இருந்த காலத்தில் அவனை வெற்றி கொண்டு அவனது நாட்டைக் கொள்ளையிடச் சேரனும், சோழனும், ஐம்பெருவேளிரும் ஒன்றுகூடிப் படைதிரட்டி வந்தனர்.

இளையன் இவன் என உளை
யக்கூறி...
சிறுசொற் சொல்லி சினங்
கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி
முரசமொடு
ஒருங்கு அகப் படேஎன்
ஆயிற் பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல்
நிழல் காணாது
கொடியன்எம் இறை
யெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன்
ஆகுக.
(புறநானூறு 71)

என்று வஞ்சினம் பல கூறி நெடுஞ்செழியன் தலையாலங்கானம் என்ற செருக்களத்திலே தான் சொல்லியவாறே அவர்களைக் கடுமையாகத் தாக்கி வெற்றியும் கொண்டான். எனினும் அந்த வெற்றியோடு அவனது பழிவாங்கும் உணர்வும், சீற்றமும் அடங்கவில்லை. புறமுதுகிட்டோடிய பகைவரைத் துரத்திச் சென்று நின்ற நிலையிலேயே தன் வேல் கொண்டு அவர்கள் உடல்களைச் சிதையுமாறு தாக்கினான். இவ்வாறு தாக்கிய அவனது திண்ணிய வேல் தனது செயலால் கொளுத்துக் கலங்கியது. அந்தக் கலக்கமானது பகைவரின் மனைவியர், தம் மார்பகங்களிலே அடித்துப், புலம்பித் தங்கள் அழகிய சுருண்ட கூந்தலைக் கைம்மை காரணமாகக் கொய்ததன் பின்னரே வேலினின்றும் நீங்க அது பிழைத்தது! இவ்வாறு நெடுஞ்செழியனது பழி வாங்கும் தண்டனையின் பெருமையை (?) க் கல்லாடனார் என்ற புலவர் புகழ்ந்து பாடக் காண்கிறோம்.

நிலை திரிபு எறியத் திண்
மடை கலங்கிச்
சிதைதல் உய்ந்தன்றே நின்
வேல் செழிய!
முலைபொலி ஆகம் உருப்ப
நூறி
மெய்ம்மறந்து பட்ட வரை
யாப் பூசல்
ஒள்நுதல் மகளிர் கைம்மை
கூர
அவிர் அறல் கடுக்கும் அம்
மென் கூந்தல்
குவையிருங் கூந்தல் கொய்
தல் கண்டே.
(புறம் 22.8–14)

திண்மடை கலங்கி-திண்மையுடன் கொளுத்துக் கலங்கி சிதைதல் உய்ந்தன்றே- (உன் வேல்) கெடுதலினின்று பிழைத்தது.

வரையாப் பூசல்–அளவில் அடங்காப் புலம்பலால் ஏற்பட்ட ஆரவாரம்.

ஒள் நுதல்–ஒளி பொருந்திய நெற்றி (உடைய)

அவிர்–விளங்கும்

அறல்–ஆற்று மணல் (போன்ற சுருண்ட)

அம்மென் கூந்தல்–அழகிய மென்மையான கூந்தல்.

பகையரசர் நாட்டைக் கைப்பற்றியதும் அங்குள்ள மனைகள் முதலியவற்றிற்குத் தியிடல், அவர்களின் வயல்களிலே பயிர்ச் செய்கை நிகழா வண்ணம் கழுதைகளைப் பூட்டிப் பாழாக்கல், ஊருணிகளான குளங்களில் யானைகளைப் படிய வைத்து அசுத்தமாக்கல், காவல் மரங்களை வெட்டுதல் முதலாம் பல்வேறு வகையான பழி வாங்கும் தண்டனைகளை அக் கால வேந்தர்கள் நிகழ்த்தியமைக்கான இலக்கியச் சான்றுகள் பல உள்ளன.

சிலப்பதிகாரத் தலைமைப் பாத்திரமாகிய கண்ணகி, தன் கணவன் கோவலனைத் தீர விசாரியாது அநியாயமாகக் கொலைத் தண்டனை விதித்துக் கொன்ற மதுரை வேந்தன் நெடுஞ்செழியனின் மரணத்தோடு அமைதி அடையவில்லை.

யான் அமர் காதலன் தன்
னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்ற
மிலேன்

சிலப்பதிகாரம்– வஞ்சினமாலை 41–42) என்று கூறித் தனது இடமுலையைக் கையாலே திருகி எறிந்து பழி வாங்க முற்படுகின்றாள். அவளது ஆவேசக் குரலுக்கு அஞ்சி அவள்பணிப்பினை ஏற்று நடக்கச் சித்தமாய் அந்தணக் கோலத்தில் அக்கினிதேவன் அவள் முன்பு தோன்றுகின்றான்.

மாபத்தினி நின்னை மாணப்
பிழைத்த நாள்
பாய்எரி இந்தப் பதி ஊட்
டப் பண்டே ஓர்
ஏவல் உடையேனால் இயார்
பிழைப்பார்?
(ஷை(–50–53)

என்று தான் எரிக்காது விடுக்க வேண்டியவரைக் குறித்திடுமாறு வேண்டுகிறான் கண்ணகி.

''பார்ப்பார் அறவோர்
பசுபத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமி
வற்றைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே
சேர்க''(ஷை53–55)

என்று பணிக்க அவ்வாறே அங்கியங்கடவுள் மதுரையைப் பசுமிகரம் செய்கின்றான்.

கண்ணகியின் பழி வாங்கும் தண்டனையானது இவ்வாறு

... 15 ஆம் பக்கம் பார்க்க

# நட்சத்திரங்கள் பிறக்கின்றன

## விண்ணகத்து உண்மைகள்

இ. சிவயோகநாதன் பி. எஸ்சி.

மண்ணிலிருந்து இரவில் விண்ணைப் பார்க்கும்போது உண்மையிலேயே அழகாகத் துலங்குகிறது. நட்சத்திரக் கூட்டம் கண்கொள்ளாக் காட்சி எதுவாயினும் கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு.

நட்சத்திரங்களைப் பார்க்கும் போது இவைகள் மாறுவதில்லை என்ற எண்ணமே தோன்றும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முன்னோர்கள் கண்ட நட்சத்திரக் கூட்டங்களில் இன்றும் அவ்வளவு மாற்றம் ஏற்பட்டதாக இல்லை. இப்படியான கூட்டங்களில் பெரும் கரடி, ரோறஸ், நண்டு போன்றவை சிலவாகும்.

ஆனால் உண்மையில் நட்சத்திரங்கள் மாறுகின்றன. மனிதர் போன்று பிறக்கிறது வாழ்கிறது பின்பு இறக்கிறது. ஆனால் இவைகளின் சீவியம் மனிதர்கள் போலல்லாது பல மில்லியன் வருடங்கள் வாழ்பவையாகும்.

வானிலை விஞ்ஞானிகள் நட்சத்திரத்தின் வாழ்வின் கதையைக் கணிக்க முடியும். இதன் பிறப்பு அதன் பின் வளர்ச்சி இறுதியில் இறப்புப் பற்றிய தகவல்களை வானிலை விஞ்ஞானிகளால் கணிக்க முடிகிறது.

நட்சத்திர வளர்ச்சி பற்றிய தத்துவம் 20 ஆம் நூற்றாண்டின் பெரும் சாதனையாகும்– என்னே விஞ்ஞான வளர்ச்சி.

நட்சத்திரம் வாயுக்கள் மூலம் உருவெடுக்கிறது. இவ்வாயுக்கள் முக்கியமாக கைதரஜன் அணுக்களுடன் சில கீலியம் சேர்கிறது. சில இடங்களில் தடிப்புள்ள வாயு முகில்கள் ஒருமிக்கின்றன.

ஈர்ப்புத் தத்துவத்தின் படி வாயு முகில்கள் தங்களைத் தானே ஈர்ப்பு மூலம் இழுக்கின்றன. இப்படிச் செய்வதால் அமுக்கம் கூடுகிறது.

இப்படியாக வாயுக்கள் அமர்த்தப்படும் போது மத்தியில் வெப்பம் அதிகமாகிறது. மத்தியின் வெப்பம் 10 மில்லியன் செல்சியிஸ்க்கு அதிகமாகிறது. இதனால் மாறுதல்கள் ஏற்படுகின்றன. பெரும் சக்தியையும் கொடுக்கிறது இதனால் இக்கூட்டம் துலங்குகிறது. நட்சத்திரக் கூட்டம் அழகாகப் பிரகாசிக்கிறது. நட்சத்திரமும் பிறக்கிறது.

மற்றைய நட்சத்திரங்களின் அறிவைக் கொண்டு நமது சூரியனின் பிறப்பு, இறப்பு கணிக்கக்கூடியதாகவுள்ளது. நமது பிரதான நட்சத்திரமான சூரியனின் துலங்கும் தன்மை அதன் மத்தியில் கைதரஜன் கீலியமாக மாறுவதேயாகும்.

சூரியனின் தோற்றம் 5000 மில்லியன் வருடங்கள் ஆகலாமென கூறப்படுகிறது இதனில் இருக்கும் கைதரஜன் இன்னும் 5000 மில்லியன் வருடங்களுக்கும் போதுமானது. இது பின்பு பெருக்கலாம். சூரியன் செந்நிற இராட்சதனுக்குப்போது அருகிலுள்ள கிரகங்களை (மெர்கூறி, வீனஸ்) விழுங்கலாம்.

பொருத்த வடிவெடுக்கும் சூரியனின் வெப்பம் பூமியில் உள்ள சமுத்திரங்களை அழித்துவிடலாம்.

உயிர்வாழ்வன வேறு கிரகத்திற்குப் போகாவிட்டால் அழிவதற்கு இடமுண்டு என்று ஆய்வு கூறுகிறது. அத்துடன் பூமியையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

இப்படியாகப் பெருத்து ஒரு அழகான நேபூலம் ஆகலாம். மத்தியில் சூட்டுத்தன்மை இருக்கலாம். சூரியகுடும்பமே அழிந்தும் போகலாம். சூரியனின் மேற்பரப்பு மற்றக் கருகிய கோள்களால் மூடப்பட்டு இருக்கிற நிலைமையுண்டாகலாம் எனக் கூறப்படுகின்றன.

ஒன்றுமே நிரந்தரமானதாகத் தெரியவில்லை வருங்காலத்தில் விஞ்ஞான அறிவு இன்னும் என்னென்ன அறிகிறதோ தெளிவில்லை.

நினைவுக்கட்டுரை

# வரலாற்று அறிஞர் இலக்கிய கலாநிதி கலாநிதி ஜேம்ஸ் இரத்தினம்

வி. சிவசாமி
முன்னை நாள் செயலாளர்
யாழ்ப்பாண தொல்பொருளியற் கழகம்

கடந்த நவம்பர் மாதம் நான்காம் திகதி மறைந்த இலக்கிய கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்கள் சம கால இலங்கையின் மூதறிஞர்களில் ஒருவராவர். தொழிற் சங்க வாதியாக, அரசியல் வாதியாக, அறிஞராக விளங்கிய இப் பெரியார் மனிதப் பண்பியலாளராகவும், குறிப்பாக வரலாற்றுராய்ச்சியாளராகவும் தமிழியல் ஆய்வாளராகவும் திகழ்ந்தார். தமது வாழ்க்கையின் முதற் பகுதியினைப் பெருமளவு இலங்கைச் சட்ட சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு முயற்சித்தும் வெற்றி காணு விடினும் அறிஞராகப் புகழ் பெற்ருர். சம கால இலங்கையிலே வாழ்ந்த மூத்த பத்திரிகைக் கட்டுரையாளராகவும் ஆங்கில எழுத்தாளராகவும் விளங்கிஞர். 1974-ம் ஆண்டு தொட்டுப் பல ஆண்டுகளாக யாழ்ப்பாணத் தொல் பொருளியற் கழகத்தின் தலைவராகவும் திகழ்ந்தவர்.

1905-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி யாழ்ப்பாணத்திலே பிறந்த இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொழும்பு பரி. யோசெப் கல்லூரி, மவுன்ற்லெவினியா பரி. தோமஸ் கல்லூரி ஆகியனவற்றிலே கல்வி பயின்ற பின் கொழும்பில் அக்காலத்தில் இருந்த பல்கலைக்கழகக் கல்லூரி, சட்டக் கல்லூரி ஆகியனவற்றிலும் சில காலம் பயின்ருர். சட்டக் கல்லூரி மாணவனுக சட்ட ஆய்வுக்காக வழங்கப்படும் வால்ரர் பெரேரா பரிசு பெற்றவர்.

இதன் பின் அக்கால இலங்கை அரசியல், கல்வி வானிலே புகழுடன் விளங்கிய சேர் பொன். அருணுசலம் அவர்களின் அடிச் சுவட்டினைப் பின்பற்றித் தேசிய அரசியலிலே ஈடுபட்டார். சேர் பொன். அருணுசலம் பற்றி ஒரு நூலும் இவர் எழுதியுள்ளமை குறிப்பிடற்பாலது. இந்த நூற்ருண்டின் இருபதுகளிலே பிரபல தொழிற்சங்க வாதியாக விளங்கிய திரு. ஏ. இ. குணசிங்கவின் கருத்துக்களிலே மனதைப் பறிகொடுத்த திரு. இரத்தினம் அவருடைய இளம் இலங்கையர் சங்கம், தொழிற்சங்கம், ஆகியனவற்றிலே சில காலமாகக் கவனம் செலுத்திஞர்.

1925லே காலம் சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தொடங்கிய முற்போக்குத் தேசிய சங்கத்திலே சேர்ந்து பின் வெளியேறிஞர். முதலாவது உலகப் போரின் பின் பிரித்தானிய அரசாங்கம் ஆண்டு தோறும் நவம்பர் 11-ம் திகதியினை ''பொப்பி தினம்'' ஆகக் கொண்டாடி வந்தது. இளம் இரத்தினம் இத்தினத்தின் போது வசூலிக்கப்படும் பணம் ஏகாதிபத்திய நலனுக்காகப் பயன்டுத்தப்பட்டதெனக் கூறி இதற்கெதிராகக் கட்டுரை எழுதிஞர். இதைத் தொடர்ந்து ஏற்பட்ட 'சூரியமல்' இயக்கத்திலும் இவர் ஈடுபட்டார். இவற்றின் விளைவாகவே இலங்கையின் இடதுசாரி இயக்கம் உருவாகிற்று. எனவே இலங்கையின் இடதுசாரி இயக்க ஆரம்ப கால ஆதரவாளர்களில் இவரும் ஒருவர் என்பதும் ஈண்டு குறிப்பிடற்பாலது.

தொழிற்சங்க வாதியாகத் திரு. இரத்தினம் மலையகத்திலே பல ஆண்டுகள் கவனம் செலுத்திஞர். ஊவாக் கல்லூரியில் ஆசிரியராகவும் பின் நுவரெலியா சென்ற் சேவியர் கல்லூரி அதிபராகவும் மூன்று ஆண்டுகள் பணி புரிந்தார். அவ்விடத்திலே தொழிற்சங்க பிரமுகராகி 1929லே இரண்டு மாதங்கள் நீடித்த வேலை நிறுத்தத்தினை ஏற்படுத்திஞர். இலங்கை அரசாங்க சபை உறுப்பினர்க்கான தேர்தல்களில் ஈடுபட்டவராக 1931, 1943-ம் ஆண்டுகளில் போட்டியிட்டார். குறுகிய தொகையினுல் 1943-ல் தம்மை வென்ற திரு. எம். டி. பண்டாரவைத் தேர்தல் வழக்கிலே வென்று பதவியிழக்கச் செய்தார் ஆனுல் உறுப்பினர் பதவி கிட்டவில்லை.

அரசியலிலும், வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்த திரு. இரத்தினம் கல்வியிலும் மிக்க ஆர்வம் காட்டி வந்தார். ஒரு தமிழியல் அறிஞராக குறிப்பாக வரலாற்ருராய்ச்சியாளனுகவே அவர் பிற்காலத்திலே புகழ் பெற்ருர். இலங்கையின் புராதன, மத்திய கால, தற்கால வரலாற்றின் சில அம்சங்களிலே குறிப்பாக 19ம் நூற்ருண்டு 20-ம் நூற்ருண்டு முற்பகுதி வரலாற்றில் இவருக்கு ஆழமான புலமை இருந்தது. மேலும் இலங்கையில் உள்ள சில பிரபல சிங்கள, தமிழ், ஐரோப்பிய பிரமுகர்களின் குடும்ப வரலாற்றிலும் மிக தேர்ச்சி பெற்றிருந்தார். காலம் சென்ற இலங்கைப் பிரதமர் எஸ் டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்கா, முன்னை ஜனுதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோர் பற்றிய கட்டுரைகள் குறிப்பிடற்பாலன. இவர்களின் மூதாதையர்கள் சிலர் தமிழர் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். தமது பல திறம்பட்ட ஆய்வுகளுக்காகப் பாரிய தனிப்பட்ட நூலகம் ஒன்றினைக் கொழும்பிலுள்ள தமது இல்லத்திலே உருவாக்கியிருந்தார். இதிலே பல அரிய நூல்களும், குறிப்பாகக் கிடைத்தற்கரிய ஆவணங்களும் சுவடிகளும் இடம் பெற்றன. சேர் பொன். இராமநாதன் பற்றிய தகவல்களும் சேகரித்துள்ளார். ஆனுல் இலங்கையின் ஆரம்ப கால பிரதம நீதிபதி சேர் அலெக்சாந்தர் ஜோன்ஸ்ரன், வில்லியம் டிக்பி, கிறிஸ்ரோபர் எலியட், வட்டுக்கோட்டை செமினறியிலே கல்விப் பணி புரிந்துவந்த அமெரிக்க மிஷனரிமார் முதலியோர் பற்றி இவர் சேகரித்துள்ளவை நன்கு குறிப்பிடற்பாலன. குறிப்பாக அலெக்சாந்தர் ஜோன்ஸ்ரன் பற்றிச் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வு செய்து வந்துள்ளார். இவ்வாய்வின் ஒரு பகுதி சென்ற ஆண்டு வெளிவந்துள்ளது. அமெரிக்க மிஷனரிமாரின் கல்விப் பணிகள் பற்றிக் கீழ் நாட்டுக் கல்வி ஆய்வாளர் மகாநாட்டிலே ஓர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். கி. பி. 15-ம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் இலங்கைக்குப் படையெடுத்து வந்த சீனத் தளபதியான செஸ்கோ பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலே பிறந்து கொழும்பிலே பெரிதும் கல்வி பயின்று சிங்களப் பெண்மணி செல்வி ஈவ்லின் விஜயரத்ன என்பவரைத் திருமணம் செய்து தென்னிலங்கையிலே வாழ்ந்தாலும், தமிழ்ப் பற்றுடையவராக, தமிழியல் ஆய்வுகளிலும் நன்கு ஈடுபட்டவர். உலகத்தமிழ் மகாநாடுகளுக்கு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் இணைச் செயலாளராகப் பல ஆண்டுகள் பணி புரிந்தார். 1974-ம் ஆண்டு ஜனவரியிலே யாழ்ப்பாணத்திலே நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு வெகு விமரிசையாக நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் திரு. இரத்தினமும் ஒருவர்ஆவார். குறிப்பாக இம்மகாநாடு நடைபெருது அரசாங்க ரீதியிலே ஒரு சாரார் தடுக்க முற்பட்ட போது, அத்தடையினை இலகுவில் விலக்கி வெற்றி கண்டார். இம் மகா நாட்டிலே தான் இவருடைய ஒரு பிரதான ஆய்வுக் கட்டுரையும் இடம் பெற்றது. பொலநறுவையில் உள்ள பொத்குல விகாரைக்கு முன் உள்ள பிரசித்தி பெற்ற சிலையினை முதலாம் பராக்கிரமபாகுவின் சிலையென ஒரு சாரார் கருதினர்.

பேராசிரியர் செ. பரணவிதான இது முதலாம் விஜயபாகுவின் சிலையென 1971லே புதிய ஒருகருத்தினை வெளியிட்டார். இக்கருத்துக்கள் யாவும் செவ்வனே வரலாற்றடிப்படையில் அமையவில்லையெனத் தமது நீண்ட கட்டுரையில் பல ஆதாரங்களை ஆணித்தரமாக எடுத்துக் காட்டி நிராகரித்து இது இந்து ரிஷியான அகஸ்தியர் சிலையென நிரூபித்துப் பாராட்டுப் பெற்ருர். மகாநாட்டிலே சமூகமளித்த பலர் ஒரு ஐரோப்பிய அறிஞர் தமிழர் போல ஆடையணிந்து தமிழருக்காகக் கட்டுரை எழுதியுள்ளார் எனக் கருதினர். ஆனுல் அவருடன் நேரிலே பேசிய பின் அவர் ஆங்கிலத்திலே சரளமாகப் பேசினுலும் 'அசல்' யாழ்ப்பாணத்தான் என்பதை உணர்ந்தனர். அவர் தமது கட்டுரைகள், பேச்சுகளுக்கு ஆங்கிலத்தினைப் பயன்படுத்தினுலும், தாம் யாழ்ப்பாணத் தமிழன் என்பதிலே பெருமைப் பட்டவர். ஆங்கிலத்தில் போல தமிழிலே சரளமாகப் பேச முடியாமை குறித்துக் கவலைப்பட்டவர். மேற்குறிப்பிட்ட கட்டுரை மத்தியகால இலங்கை வரலாறு, இந்துக்கலை வரலாறு, தமிழர் வரலாறு முதலியனவற்றில் இவருக்கிருந்த ஆழ்ந்த புலமையைக் காட்டிற்று. இதற்குப் பின் அவர் மேலும் கூடுதலாக தமிழர் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டார்; புகழும்பெற்ருர்.

1974 இலே யாழ்ப்பாணத் தொல் பொருளியற் கழகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுப் பல ஆண்டுகள் இப்பதவியினை வகித்து வந்தார். அவருக்கு வரலாறு மட்டுமன்றித் தொல்லியலிலும் மிக்க புலமை இருந்தமை மேலும் புலப்படலாயிற்று. 1974-ம் ஆண்டு ஒக்டோபரில் யாழ்ப்பாண வளாகம் தொடங்கிய பின் இராமநாதன் மண்டபத்திலே நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்ருக யாழ்ப்பாணத் தொல் பொருளியற் கழகத் தலைவராக இவர் ''இலங்கைத் தொல் பொருளியல் ஆய்வுகளின் சில அம்சங்கள்'' எனும் தலைப்பில் ஆற்றிய தலைமையுரை குறிப்பிடப்பாலது இது பின்னர் நூல் வடிவம் பெற்றுள்ளது. இவருடைய தமிழர் பற்றிய ஆய்வுகளுக்கு மகுடம் போன்று விளங்குவது, எல்லாளன் சமாதியும், வரலாற்று மோசடியும் என்ற நூலாகும். எண்பதுகளின் தொடக்கத்திலே இலங்கை அரசாங்கம் அரசியல் நலனுக்காகப் பாரம்பரியமாகஇலங்கை வரலாற்று மரபும், நூல்களும் கூறிவந்த எல்லாளனின் சமாதியைத் துட்டகைமுனு சமாதியெனப் பிரசாரம் செய்தது. அதிலுள்ள அஸ்தியைப் பௌத்தர் மத்தியிலே சாட்சிக்கு வைத்தது. ஆனுல் இக்கருத்து வரலாற்றுக்கு முரண்பட்டது. என்பதை ஐயம்திரிபற ஆராய்ந்து மேற் குறிப்பிட்ட நூலிலே கூறியுள்ளார். இலங்கைத் தமிழர் மட்டுமன்றி யாவருமே படிக்க வேண்டிய ஒரு நூல் இதுவாகும்.

மேலும் தமது வாழ்க்கையின் இலட்சியங்களை நிறைவேற்றும்நோக்குடன் 1964லே இறந்த தமது அருமை மனைவி ஈவ்லின் நினைவுச் சின்னமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகாமையிலே திருநெல்வேலியிலே சர்வதேசப் பண்பாட்டுத் தொடர்புகள் பற்றிய கருத்துக்களை எடுத்துரைக்கும் வகையிலே ''ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனம்'' ஒன்றினை 1981 இலே நிறுவியுள்ளார் இங்கு தான் இவருடைய அரிய நூலகமும் அமைந்துள்ளது. இது பல ஆய்வாளர்களுக்கும், மாணவர்க்குமான அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. இத்தகைய கல்விப் பணியும் இவர் தாம் பிறந்த மண்ணிற் கொண்ட அதீத பற்றினைக் காட்டுகின்றதெனலாம். மேலும் இந்திய வரலாற்றிலே ஷாஜஹான் தனது அருமை மனைவிக்காக தாஜ்மகால் கட்டினுன் என அறிகிருேம். ஆனுல் திரு. இரத்தினம் தமது அருமை மனைவியின் நினைவாக அழியாத கல்வி ஆய்வுக்கான நிலையமொன்றினைக் கட்டியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஆரம்ப காலம் தொட்டே இரத்தினம் அவர்கள் அதன் வளர்ச்சியிலே ஈடுபட்டவர். பேராசிரியர் செ. பரணவிதான இறந்த பின் அவருடைய அரிய நூலகம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட போது திரு. இரத்தினம் இதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாங்குவதற்கு முயற்சித்து வெற்றி கண்டார். இது குறித்துத் தென்னிலங்கையில் உள்ள பேராசிரியர்களும், பரணவிதானவின் மாணவர்களும் வேறு சில பிரமுகர்களும் வியப்பும், கவலையும் அடைந்ததாகக் கூறப்படுகின்றது. இவருடைய ஆய்வுகளைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1980இல் இவருக்குக் கௌரவ இலக்கியக் காலாநிதிப்பட்டம் வழங்கிற்று இப்பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் பீடச் சபை உறுப்பினராகவும், இப்பல்கலைக்கழக ஆளுநர் சபை உறுப்பினராகவும் இவர் சில ஆண்டுகள் இருந்துள்ளார்.

இவருக்கு 70 ஆண்டு நிறைவிலும் 80 ஆண்டு நிறைவிலும் ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய இரு சிறப்பு மலர்கள் வெளிவந்தமை குறிப்பிடற்பாலது. 1987 லே வரலாற்ருராய்ச்சிக்கான ஜனுதிபதி விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

தமது வாழ்க்கையின் முற்பகுதியிலே கூடுதலாகக் கல்வியிலே கவனம் செலுத்தாமை குறித்துக் கவலைப்பட்ட இவர் பிற்பகுதியிலே நன்கு கவனம் செலுத்திப் பிரபல்யம் அடைந்தார். இவருடைய அறிவுத்தாகமும், கட்டுரைக்கான தகவல் தேட்டமும் மிகவும் குறிப்பிடற் பாலன. இலங்கையுள்ள பிரபல நூல்களில் மட்டுமன்றி வெளி நாடுகள் சிலவற்றில் உள்ள பிரபல நூல்களையும் இவர் நன்கு பயன்படுத்தியவர். சிலநூல்களை விட இருநூறுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். இவருடைய நூலகமே இவரின் ஆழ்ந்தபுலமைக்கும் மிக்க ஆர்வத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சமகால இலங்கை வரலாற்ருசிரியர்கள் பலர், இவரிடம் ஆலோசனை பெற்றுள்ளனர். இவர் கூறிய ஆலோசனைகள் அறிவுரைகள், தகவல்கள் ஆகியனவற்றின் அடிப்படையிலே சிலர் தமது ஆய்வு நகல்களைத் திருத்தியும் எழுதியுள்ளனர் என்பதும் குறிப்பிடற்பாலது. ஆய்வுக்கட்டுரை எழுதியவருச்குத் தமது நூலகத்தைப் பயன் படுத்தவிட்டதுடன் ஆய்வு தொடர்பான ஆலோசனைகளையும்கூறி உதவி செய்துள்ளார். வயது முதிர்ந்த காலத்திற் கூட உள்ளத்திலே இளம் வாலிபன் போல அறிவாராய்ச்சித்தாகம் கொண்டவராக விளங்கிஞர் இவரது முன்மாதிரி இளம் ஆய்வாளர் பின்பற்றக் கூடியதாகும். இவர் ஒரு அறிவுக் களஞ்சியமாக குறிப்பாக வரலாற்றுக் களஞ்சியமாக விளங்கிஞர் எனலாம்.

இவர் எவருடனும் அன்புடன் பழகும் இயல்புடையவர். கம்பீரமான தோற்றப் பொலிவும் உற்சாகமும் உடையவர். அவரை முன்தெரியாதவர்கள். அவர்ஐரோப்பியர் என ஐயுறுவர். எனினும், தேசிய உடையிலும் சிலவேளைகளில் அவரைக் காணலாம். அவருடைய முதுமைப்பருவத்துத் தோற்றமும், தாடியும் இந்திய ரிஷிகளையும் ஒரு வகையில் நினைவுபடுத்தின தமது இளம் நண்பர்களை அன்புடன் ''தம்பி'' என அழைப்பார். அவர்களும் அவரைத் ''தாத்தா'' ''அப்பா'' என அன்புடன் அழைப்பர் இவ்வாறு அவர் பழகுதற்கு இனியவர்.

G. C. E. (O/L)
மீட்டற் பயிற்சி
1989 பெப்ரவரி சாதாரண பரீட்சைக்குத் தோற்றுவோரின் நன்மைகருதி
BRIGHT STUDY CIRCLE
தபால் மூலம் ஒரு கல்வி வட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.
BRIGHT STUDY CIRCLE
P. O. Box 162, Colombo
01026

# 16

# இந்துபோர்ட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்



க.சி.குலரத்தினம்

## அரசாங்க சபையும் இளைஞர் ஒன்றியொதுக்கலும்

ஆங்கிலேயர் 1796ஆம் ஆண்டில் இலங்கைக் கரை நாடுகளைக் கைப்பற்றி,சென்னை பட்டண வர்த்த சங்கத்தோடு சேர்ந்து கூட்டாக ஆண்டு, பின் தாமே ஆளத் தொடங்கி, 1815 இல் கண்டியையும் கைப்பற்றி, இலங்கை முழுவதையும் ஆளத் தொடங்கியதால் இலங்கையின் பழைய இராச்சியப் பிரிவுகள் மறையத் தொடங்கின.

முன்னர் இராசராசசோழன் முதலானவர்களாலும், பின்னர் கண்டி நாயக்க மன்னர்களாலும் இலங்கையில் பரவலாகப் பரந்திருந்த தமிழ்ப் பண்பாடு, மிலேச்ச நாகரிகத்துக்கு இடங்கொடுத்தது. ஆங்கிலேயர் தேசாதிபதி என்னும் அதிகார உத்தியோகத்தர் மூலம் ஆளத் தொடங்கி, 1833 ஆம் ஆண்டளவில் அவருக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைத்த சபையே சட்ட சபை. அதுவும் பல மாறுதல்களுக்கு இடம் கொடுத்து 1931 ஆம் ஆண்டு வரை நிலை பெற்றது. பழைய சட்டசபையை நீக்கிவிட்டுப் புதிதாக ஒரு சபையை நிறுவுவதற்கு விசாரிக்க வந்தவர்களே டொனமூர்க் குழுவினர். டொனமூர் குழுவினர் பரீட்சார்த்தமாகவும் பாரபட்சமாகவும் அமைத்த அரசாங்க சபை 1931 முதல் 1947 வரை நிலவியது. டொனமூர் பிரபுவின் தலைமையில் அரசியல் திருத்தம் செய்ய வந்த குழுவினர் தயாரித்த திட்டம் டொனமூர்த்திட்டம் என வழங்கியது. டொனமூர்த் திட்டம் உருவான காலத்தில் இலங்கை முன்னேறியிருந்தது. இங்கே 53,07,000 மக்கள் வாழ்ந்தனர். இவர்களின் இனக்கணக்கு வருமாறு:-

| | |
|---|---|
| சிங்களவர் | — 34,73,029 |
| தமிழர் | — 14,17,477 |
| முஸ்லிம்கள் | — 3,25,913 |
| பறங்கியர் | — 32,315 |
| மலாயர் | — 15,977 |
| ஐரோப்பியர் | — 9,254 |
| வேடர் | — 32,000 |

டொனமூர் குழுவினரை 6.8.1927 ஆம் நாளில் நியமித்தவர் லண்டனில் இருந்த குடியேற்ற மந்திரியார் அமெரி. டொனமூர் குழுவினர் இலங்கைக்கு வந்து, கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு எங்கும் சுற்றிப் பார்த்து விசாரணைகளின் பொருட்டு 34 முறை கூடி, 141 பெரியவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்தார்கள்.

தமிழர் சமபலம் (Balanced Representation) அமைதல் வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தனர். இதனால் ஓரினம் இன்னோரினத்தை நசிக்க முடியாது எனக் கருதினர். இன அடிப்படையில் பிரதிநிதித்துவம் அமைத்து இலங்கையரைப் பிரித்தவர்கள் பிரித்தானியர்களேயாவர். அவர்களுக்குப் பிரித்தாளும் தந்திரம் பிறவியிலேயே கிடைத்த பிரசாதம். இனப் பிரதிநிதித்துவத்தின் பூர்வோத்தரம் 1833 ஆம் ஆண்டின் சட்ட சபை என்க.

டொனமூர் குழுவில் வந்த பிரமன்சீல் என்னும் பெரியார் இலங்கையில் சர்வசன வாக்குரிமை வழங்குவதில் ஆர்வம் காட்டினார். அக்காலத்தில் தான் இங்கிலாந்திலும் பெண்கள் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்பெற்றது. அங்கே புகழ்பெற்றிருந்த சிட்னிவெப் என்பார் இங்கேயும் சர்வசன வாக்குரிமை வழங்குவதில் அனுதாபம் கொண்டிருந்தார் எனவே 1931 இல் இங்கே 15,77,850 வாக்காளர் பதியப் பெற்றனர்.

டொனமூர் அமைப்பில் இலங்கையில் ஐம்பது தேர்தல் தொகுதிகளை வரையறை செய்தார்கள். முதலில் அவர்கள் 65 தொகுதிகளை வரைந்து, பின்னர் 15 தொகுதிகளைக் களையெடுத்தார்கள். இவை வடகீழ் மாகாணங்களில் பிடுங்கப்பட்டதாகப்பின்னர் தெரிய வந்தது. இங்ஙனம் களை பிடுங்கிய பின் குறிக்கப்பட்ட தொகுதிகள் மாகாணந்தோறும் அமைந்தவகை வருமாறு:-

| | |
|---|---|
| மேல்மாகாணம் | — 14 |
| மத்திய மாகாணம் | — 8 |
| தென் மாகாணம் | — 7 |
| வட மாகாணம் | — 4 |
| கீழ் மாகாணம் | — 2 |
| வடமேல் மாகாணம் | — 6 |
| வடமத்தியமாகாணம் | — 1 |
| ஊவா மாகாணம் | — 3 |
| சப்பிரகமுவமாகாணம் | — 5 |

டொனமூர் அமைப்பு இலங்கை அரசியற் பரிபாலன அலுவல்களில் முப்பெரும் பிரிவுகளாய பொதுநிர்வாகம், நிதியலுவல், நீதி பரிபாலனம் ஆகியவற்றை ஆங்கிலேயர் கையிலே பொத்திக்கொண்டு, பிற அலுவல்களை ஏழாகப் பிரித்து தனித்தனி நிர்வாக சபைகளில் விட்டனர். நிர்வாக சபையொவ்வொன்றும் சாரசரி ஏழு அங்கத்தத்துவரைக் கொண்டமையும். இங்ஙனம் அமையும் ஏழு நிர்வாக சபைகளும் தங்களுள் தனித்தனி கூடி, ஒவ்வொரு தலைவரைத் தெரிந்து, அவர்களைக் கனம் மந்திரியாரென மதிப்ப, அரசாங்க அலுவல்களைக் கைகளிற் பொத்திக்கொண்ட வெள்ளைக்காரராய பிரதம காரியதரிசி நிதிக்காரியதரிசிசட்ட க்காரிய தரிசிஆகியமூவரும்,ஏழுகாரிய நிர்வாகசபைகளின் தலைவர்களாயஏழுகௌரவ மந்திரிமாருடன்உடனமர்ந்து,பதின்மராய் மந்திரிமார் சபை எனவிருந்து அரச காரியம் பார்த்தனர். பிரதமர் என்றோ, பிரதம மந்திரி என்றோ எவருமில்லாத அமைப்பில் ஒருவர் சபைமுதல்வர் என்னும்(Leader)பதவியில் இருந்தார். மந்திரிமார் சபையில் இருந்த பிரதம காரிய தரிசி என்பார் தேசாதிபதி என்னும் ஆள்பதிக்கு அடுத்த படியில் பெரியவராயிருந்தார்.

இவை இங்ஙனமாகக் கண்டிச் சிங்களவர்கள் தங்கள் பழைய பாரம்பரிய மெல்லாம் ஆங்கிலேயர் நாகரிகத்திற் பாழ்பட்டுப் போயிற்றென்று வாய்ப் பறையறைந்து இலங்கைக்குத் திரிசிங்கள என்னும் பழைய ஆட்சி முறையே நல்லது எனக்கூறினர். திரிசிங்கள மாவது கண்டியரசு, ஜெயவர்த்தன புரத்தரசு, யாழ்ப்பாணவரசு என்னும் மூன்றுமாம். கண்டியவர் நோக்கம் இந்த அமைப்பில் மாநிலங்களை உருவாக்கி ஒரு சமஷ்டி ஆட்சியை நிலைநாட்டுவதேயாம்.

டொனமூரார் கண்டியர் கோரிக்கையைத் தட்டிக் கழித்த போதிலும், கோரிக்கைக்கு மதிப்புக்கொடுத்துத் தாம் அமைத்த அரசாங்க சபையின் வைகல்கள் (Sessi-ons) என்னும் கூட்டங்களைக் காலந்தோறும் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய முப்பெரு நகரங்களில் நடத்த வேண்டும் என வரைந்தனர்.

பிடித்த ஒரு கொப்பின் பிடி நழுவிப்போக, அடுத்துப் பிடித்த கொப்பும் முறிந்தாற் போல, கண்டியர் கேட்ட சமஷ்டிப்பிடி நழுவிப்போக, அடுத்துப்பிடித்தமூன்று நகரத்துக் கூட்ட முறையையும் முறிந்து போவதற்குக் காரணமாயிருந்தவர் லண்டனில் இருந்த பாஸ்வீல் என்னும் குடியேற்ற மந்திரியாராவர்.

இப்பால் டொனமூர்த் திட்டத்தை ஏற்றுக்கொள்வதா ஒதுக்கி விடுவதா என்பதை நிர்ணயஞ் செய்வதற்குச் சட்டசபையில் காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. இராமநாதன் அவர்கள் டொனமூர்த் திட்டத்தை வன்மையாகக் கண்டித்து, எமக்குத்தேவை பூரணசுதந்திரமே எனக் கூறியதோடு வாக்குரிமைக்குப் படிப்பறிவு வேண்டும் எனக் கூறினார். முன்னர் இங்கிலாந்தில் 1865ஆம் ஆண்டில் சிட்னி வெப் பேசியவகையில் அவர் குதிரையை வண்டிக்கு முன்பக்கத்திலேதான் பூட்ட வேண்டும் என்றார். இராசரத்தினம் முதலானோரும் டொனமூர்த்திட்டத்தில் பிரதிநிதிகள் கேட்டவற்றைக் கொடாது, கேளாதவற்றையே கொடுத்துள்ளார்கள் எனக்கண்டித்துப் பேசினர். அவர்கள் கொடுத்த வகையில் வகுப்பு வேற்றுமை மேலும் வளருமேயன்றிக் குறையாது என்று சுட்டிக்காட்டினர்.

இராமநாதன் அவர்கள் தமது எழுபத்தொன்பதாம் வயதின் முதுமையையும் கவனிக்காது, மருமகன் நடேச பிள்ளை அவர்களையும் துணையாக அழைத்துக்கொண்டு பாரிய அளவிலமைந்த நிலைவேடு தயாரித்துக்கொண்டு, இங்கிலாந்துக்குச் சென்று, மேலிடத்து மந்திரிமாரைக் கண்டு, டொனமூர்த்திட்டம் நாட்டுக்கு உதவாதது என்று முறையிட்டார்.

இப்பால் டொனமூர்த் திட்டத்தை ஏற்பதா, விடுப்பதா என்பதறிவதற்கு விவாதித்த சட்டசபையினர் எவ்வளவு தான் மாறுகப் பேசிய போதிலும்,வாக்களிப்புக்கு விடப்பட்டபோது பத்தொன்மதின்மர் சாதகமாகவும், பதினேழு பேர் பாதகமாகவும் வாக்களிக்கவே, சட்டசபை அத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இராமநாதன் அவர்கள் 26-11-1930 இல் காலமாகவே நாட்டில் தக்க தலைவர் இல்லாது போயினர். சட்டசபையும் 15-10-24 முதல் 17-4-1931 வரை நிலவியதோடு குலைக்கப்பெற்றது. புதிய அரசாங்க சபைக்குப் பிரதிநிதிகளாவோரின் வேட்பு மனுக்களுக்கான நாள் 4-5-1931 எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## வடமாநிலத்து யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில்1920 ஆம் ஆண்டளவிலேயே இளைஞர்கள் சிலர் பலராகிக் கூடி மாணுக்கர் மாநாடு என்னும் இயக்கத்தை வலிமை வாய்ந்ததாக வளர்த்து, உள்ளூர்ப் பிரமுகர்களையும், தென்னிலங்கையரையும், பாரதநாட்டவரையும் பேசவைத்துக் கேட்டுத் தமக்கெனப் பூட்கையுடையவராய் மதிப்புப் பெற்றிருந்தார்கள். அவர்களுடைய பெருநாமப் பட்டியல் நீண்டதாயினும் அவர்களுள் ஒரு சிலரையாவது நினைவு கொள்ளுதல் சிறப்பாகும். அவர்கள் ஹண்டி பேரின்பநாயகம், கே. நேசையா, ஏ. ஈ. தம்பர், ஐ. பி. துரைரத்தினம், ஒறேற்றர் சுப்பிரமணியம், எஸ். துரைராசசிங்கம் முதலானோராவர். இவர்கள் கொண்ட சகோதரத்துவ இயக்கம் தோழமை நெறியின் பாற்பட்டுப் பரந்த அளவில் வியாபகமுற்றிருந்தது.

மாணுக்கர் இயக்கம் அவர்களோடு வளர்ந்து அவர்களுக்கும் பெருமைதரும் வகையில் வாலிபர் மாநாடாக மலர்ந்து, பல முற்போக்குத் துறைகளில் தலையிட்டது. இதைப் பொறுத முதியவர்சிலர்,அவர்களை வம்பர் மாநாட்டினர் என வைதும் வந்தனர். வாலிபர் மேலும் வலிமை பெற்று, வியாபகமுற்று, மகாத்மா காந்தியடிகளை இலங்கைக்கு அழைக்கும் வகையில் ஆளுமையுடையவராயினர்.

அவர்களுள் ஆசிரியரானோர் யாழ்ப்பாணத்திற்கு மாத்திரமின்றி, இலங்கைக்கே புகழீட்டி, உலக சம்மேளனத்திலும் பெயர் பெற்றவராயினர். அன்று ஜப்பானில் நடைபெற்ற உலக ஆசிரியர் மாநாட்டில் இலங்கையிலிருந்து சென்ற பிரதியாளர் ஆறு பேருள் நால்வர் நம் தமிழராயிருந்தனர். நம் தமிழரின் நாகரிகமும் அன்று இலங்கையில் சிங்களவருக்குச் சிங்கள மொழி எவ்வாறோ, அவ்வாறே தமிழருக்குத் தமிழ்மொழி என்பதாகும். இக் கோட்பாட்டை அன்று தென்னிலங்கையரும் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

## ஒன்றி ஒதுக்கல் என்னும் பகிஸ்காரம்

ஆங்கிலத்தில் போய் கொற் (Boy Cott) என்பதனை ஒன்றி ஒதுக்கல் என்றும் பகிஸ்காரம் என்றும் வழங்குவர். இஃது ஒரு வகையில் ஒத்துழையாமை எனவும் கருதப்படும். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்துக்குப் பன்னிரு ஆண்டுகளுக்கு முன்னரே வாலிபர் மாநாட்டினர் தம் முறுக்கேறிய விவேக பூர்வமான ஒன்றி ஒதுக்கலைக் காட்டினர் அஃதாவது டொனமூர்த்திட்டமும் வேண்டாம். அரசாங்க சபையும் வேண்டாம் தேர்தலும் வேண்டாம் என்பனவாகும்.

முன்னர் 1924ஆம் ஆண்டளவில் வாழ்ந்த வாக்காளரிற் பார்க்க 1930ஆம் ஆண்டளவில் ஆறு மடங்கு அதிகரித்த வாக்காளரோடு, ஐரோப்பிய நாடுகள் பல பெண்களுக்கு வாக்குரிமை பெறுத போது நாம் அது பெற்றிருந்தும்' சர்வ சனவாக்குரிமை எவ்வித நிபந்தனையும் இன்றிப் பெற்றிருந்தும், நல்ல முறையில் கல்வித் தகுதி பூத்திருந்தும் நாட்டுக்குச் சுதந்திரம் இல்லாமல்,நிர்வாகப் பொறுப்பை வெள்ளையரே வைத்துக்கொள்ளம்மா பொத்திக் கொள் அம்மா வாழைப்பழத்தையும் சோற்றையும் எனப் பற்றிக் கொண்டிருந்தமையை இளைஞர் வன்மையாகக் கண்டித்தனர்.

சட்டசபை குலைக்கப்பட்டு அரசாங்க சபைக்கான தேர்தல்களுக்குக் குறிக்கப்பட்ட நாள்களுக்கிடைப்பட்ட நாள்களில் வாலிப மாநாட்டாரின் ஏழாம் பெருவிழா நிலவுவதாயிற்று. வட பாரதத்திலிருந்து கமலாதேவி சட்டோபாத்தியாய என்னும் வீராங்கனை தலைமை தாங்க வந்திருந்தார். அவர் பேர் பெற்ற சரோஜினி நாயுடு அவர்களின் மைத்துனியும் புகழ்பெற்ற சுதந்திர இயக்கப் பெண்கள் தலைவியுமாவர்.

மிகப் பெரிய ஊர்வலத்தில் பலராய மேளக் கூட்டவொலியின் மத்தியில் மூன்று வெள்ளைக் குதிரைகள் பூட்டிய வண்டியில் வந்திறங்கிய கமலாதேவி முற்றவெளியில் பல்லாயிரவர் மத்தியில்முற் போக்கு இயக்கம் பூரண சுதந்திரம் பேசிய பின்னர் மாநாட்டார் வழமைபோலத் தீர்மானங்களை நிறைவேற்றினர். இருமொழிப் புலமைவாய்ந்த் சட்டத்தரணியும், யோகசுவாமிகளின் நல்ல சீடனுமான ரி. என். சுப்பையா அழகாகப் பேசியதோடு அரசாங்க சபையை ஒன்றி ஒதுக்கல் செய்யுமாறும் அருமையாக எடுத்துரைத்தார். அவரை ஆதரித்து ஹண்டி பேரின்பநாயகம் முதலானோரும் குதூகலமாகப் பேசினர். அரசாங்க சபை வேண்டாம் என்பதே பேச்சாக ஒலித்தது.

இளைஞர்கள் வெறும் தீர்மானத்தோடு அமையாது பகிஸ்காரத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்குக் குடா நாடெங்கும் கூட்டங்கள் வைத்துக் குரல் எழுப்பினர். அதைக்கேட்ட பெரியவர்கள் சிலர் வேட்பாளராவதற்குச் செய்த ஆயத்தங்களையும் உதறிவிட்டு இளைஞர்களோடு ஒன்றுபட்டு ஒன்றி ஒதுக்கலே வழி எனத்தாமும் பேசுவாராயினர்.

வாலிபர் மாநாட்டில் 1931ஆம்ஆண்டின்வைகல் முற்போக்கு வாதிகள் மத்தியில் ஏகாதிபத்தியத்துக்கு எதிர்ப்புக்காட்டுவதில் ஆர்வத்தைத் தூண்டியது. வெள்ளைக்காரரின் பொருளாதாரச் சுரண்டலையும் அத்துமீறிய ஆளும் அதிகாரத்தையும் கண்டித்துத் துண்டுப்பிரசாரங்கள் பறந்தன. பிரித்தானியரின் கொடியின் சிவப்பு நிறம் எங்கள் உழைப்பாளிகளின் இரத்தத்தில் தோய்க்கப்பட்டதா எனவும் கடுமையான குரல்கள் ஒலித்தன.

அன்று 1931 ஆம் ஆண்டில் வெளியான ஆங்கிலத் திங்கள் வெளியீடாய பேற்றியற் என்னும் தேசாபிமானியின் ஆசிரியராயிருந்தவர் அரியாலையூர் கௌரவ ஆ. கனகரத்தினம் அவர்களாவர்அந்தச் சஞ்சிகையில் யாழ்ப்பாணத்து வேட்பாளர் சிலரின் பெயர்களும் பிரசுரமாயிருந்தன. அவர்கள் யாவரும் இளைஞர்களின்குரல் கேட்டுத்தங்கள் தீர்மானத்தை மாற்றிக் கொண்டார்கள்.

அன்று 3. 5. 1931ஆம் நாள் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையில் வேட்பாளர்களானோர் சிலர் கூடினர்கள். அவர்களுள் வைத்திலிங்கம் துரைசுவாமிகதிரவேற்பிள்ளை பாலசிங்கம், அருணைசலம் மகாதேவா, ஏச் ஏ. பி சந்திரசேகரம் ஆர். ஸ்ரீ பத்மநாதன், அ.அப்பாத்துரை முதலானோர்பழையசட்டசபையை அறிந்தவர்கள் அவர்களைவிட மேலும் சு. நடேசபிள்ளை, இ. சிவகுருநாதர் முதலியார் காராளபிள்ளை முதலானோரும் கூடியிருந்தார்கள்.

வித்தியாலயத்தில் கூடிய வேட்பாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி முடிவெடுத்தபின் அவர்களுள் முதுகன் போன்றவரும் பேச்சாளருமான வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்கள் அங்கே வெளியில் காத்துநின்ற பொதுமக்களிடம் தாங்கள் வேட்பு மனுக்கள் கொடுப்பதில்லை எனத்

... 15 ஆம் பக்கம் பார்க்க

# பயிர் செய்கையில் பூச்சி நாசினி பிரயோகம்

## விவசாயம்

மு. கந்தசாமி
விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்

ஆரம்பத்தில் தமக்காகவும் மற்றவர்களுக்காகவும் மரபு வழி பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க அதிகரித்தளவு உணவு வழங்குவதற்காக அதி கூடிய அளவில் பயிர் செய்கையில் ஈடுபட வேண்டி வந்தது. உணவுத் தேவையை அதிகரிப்பதற்கு கூடியளவு நிலப்பரப்பில் பயிர் செய்வதுடன் கூடியளவு விளைவையும் பெற வேண்டியிருந்தது. இந்நிலையில் நிலப்பரப்பை அதிகரிப்பது சாத்தியமில்லாமல் போக, கூடியளவு விளைவைப் பெறுவதற்காக நவீன விவசாய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டதனால் மரபு வழியான பயிர்ச் செய்கையிலிருந்து சிறந்த விளைவு கூடிய இனங்களை பாவித்தல், உரப்பசளை பிரயோகம், பயிர் பாதுகாப்பு போன்ற நவீன விவசாய தொழில் நுட்பங்களைக் கொண்ட பயிற் செய்கையில் ஈடுபட்டு பெருவிளைவுகளைப் பெற்றார்கள்.

விவசாயத்துறை உணவுத் தேவையை மாத்திரமன்றி கைத்தொழிலுக்கு தேவையான மூலவளங்களை வழங்குவதற்காகவும் விவசாயத்தை பரந்தளவில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் வருடம் முழுவதும் பயிர் செய்கையை மேற்கொள்ளுதல், உரப்பசளை பாவித்தல் களைகளின் வளர்ச்சி அதிகரித்தல், புதிய பயிர் வர்க்கங்கள் பூச்சி பீடைகளுக்கு படிப்படியாக எதிர்ப்புத் தன்மை குறைதல் ஆகிய காரணங்களினால் பூச்சி பீடைகளின் பெருக்கம் மிக வேகமாக அதிகரித்தது. இதே வேளை தீங்கிழைக்காத பூச்சிகளும் பீடைகளாக மாறி பயிருக்கு சேதத்தை உண்டாக்கின. புதிய நீர்பாசன திட்டங்கள், காடு அழித்தல் போன்ற சூழல் மாற்றங்களும் பூச்சி பீடைகளின் பெருக்கத்துக்கு ஏதுவாக அமைந்தது. இந்நிலையில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பூச்சி பீடைகளை கட்டுப்படுத்த பூச்சிநாசினிப் பிரயோகம் அத்தியாவசியமாகிறது.

பூச்சிநாசினிகள் பிரயோகிக்கப்படாத பயிர்செய்கையில் 30வீதமான விளைவுகுறைவாக காணப்பட்டது.

பூச்சிநாசினிகளை பாவிக்கும் போது 17-60 வீதமான விளைவு கூடுதலாக அவதானிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் பூச்சி பீடைகளின் தாக்கத்தில்வருடா வருடம் 1400 கோடி அமெரிக்க டொலர் நஷ்டம் ஏற்படுகிறது. இது உலக உற்பத்தியின் 1/3 பங்குக்கு சமனானது என்றும் இதனால் 100 கோடி மக்களின் உணவு இழக்கப்படுவதாகவும் பொருளியலாளர் கூறுகிறார்கள்.

பூச்சிகளையும் அவற்றை கட்டுப்படுத்த பிரயோகிக்கும் பூச்சிநாசினிகள் பற்றியும், பூச்சிநாசினிப் பிரயோகத்தில் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றியும் தொடர்ந்து நோக்குவோம்.

### பூச்சிகள்

உலகிலுள்ள உயிரினங்களில் பூச்சிகள் ⅛ பங்கை நிரப்புகின்றன. பூச்சியின் பருவங்களான குடம்பி, கூட்டுப்புழு, அணங்கு, முதிர் பூச்சி என்பன பயிர்களுக்கு சேதத்தை விளைவிக்கின்றன. பயிருக்கு சேதம் செய்யும் உயிரினங்களை பீடைகள் என்று அழைக்கிறோம். பூச்சிகளை கூட்டங்களாக பிரித்துள்ளார்கள். அவற்றில் வெட்டுக்கிளிக் கூட்டம், பனிப்பூச்சிக் கூட்டம், தத்திக் கூட்டம், வண்டுகள், நீள் மூஞ்சி வண்டுக் கூட்டம், கறையான் கூட்டம், வண்ணாத்திப்பூச்சி, அந்துக் கூட்டம், சிற்றுண்ணிக் கூட்டம் என்பன கூடியளவில் பயிர்களுக்கு சேதம் உண்டாக்கும் கூட்டங்களாகும். இப் பூச்சிக் கூட்டங்கள் பயிர்களை தாக்குவதற்கு வெவ்வேறு வகையான வாய் உறுப்பை கொண்டுள்ளன. அவை யாவன அரைக்கும் வாய், குத்தி உறிஞ்சும் வாய், உறிஞ்சும் வாய், ஒத்தி உறிஞ்சும் வாய், அரைத்து நக்கும் வாய், அரைத்து உறிஞ்சும் வாய் ஆகிய வாய்யுறுப்புகளாகும்.

பலாபலன் அடிப்படையில் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள், ஒன்றுமே செய்யாத பூச்சிகள் என பிரித்துப் பார்க்கலாம். நன்மை செய்யும் பூச்சிகளில் தேனீ, பட்டுப்பூச்சி போன்றவை முக்கிய இடத்தை வகிக்கின்றன விவசாயத்தில் களைகளை கட்டுப்படுத்துவதற்கும், பயிருக்கு சேதம் செய்யும் பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கும் பல பூச்சிவகைகள் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் பூச்சிகள் கைத்தொழில் துறைக்கும், பற்பல தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

தீமை செய்யும் பூச்சிகள் நேரடியாக அல்லது மறைமுகமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நேரடித் தாக்கமாக பயிர்களில் சாற்றை உறிஞ்சுதல், கடித்து சப்பி உண்ணல், இலையை அரித்தல், இலையை துளைத்தல், தளிர் அல்லது தண்டினை துளைத்தல், பயிரினுள் கூட்டுப் புழுவாக இருத்தல், பழத்தினை துளைத்தல், மரங்களுக்கு சேதம் செய்தல், வேரையும் விதைகளையும் சேதம் செய்தல் ஆகிய தாக்கங்கள் மூலம் சேதத்தை உண்டாக்கிறது மறைமுகமான தாக்கமாக நோயுள்ள தாவரத்திலிருந்து நல்ல நிலையிலுள்ள தாவரங்களுக்கு வைரஸ் நோயை பரப்புகிறது. பயிர்களிலுள்ள எல்லா வகையான வைரஸ் நோய் கிருமிகளையும் காவுவது பூச்சிகளாகும். இதனால் பயிர்களில் குருமண், குருக்கன், சித்திரவடிவு, சிற்றிலை, மொசாக் போன்ற நோய்கள் பூச்சிகள்மூலம் காவிவரப்படுகிறது. மேலும் பூச்சிகளால் ஏற்பட்டகாயங்களில் பூஞ்சன வித்திகள் முளைத்து இரண்டாந் தாக்கமாக அழுகல் நோய் ஏற்படுகிறது.

### பூச்சி நாசினிகள்

பூச்சிநாசினிகள் குறுணல், பவுடர், செறிகுழம்பு ஆகிய வடிவங்களில் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறன. பூச்சி நாசினிகளைப் பூச்சிகள் உள் எடுக்கும் முறையைக் கொண்டு வயிற்றுப் பூச்சி நாசினிகள், தொகுதிப் பூச்சி நாசினிகள், தொடுகைப் பூச்சி நாசினிகள், தூபமாக்கிகள் என வகுத்துக்கொள்ளலாம். பூச்சிநாசினிகள் தொழிற்படும் முறையைக்கொண்டு அவற்றின் நஞ்சுத்தன்மையை பௌதிக நஞ்சு, கலவுருநஞ்சு, சுவாசநஞ்சு, நரம்புத்தொகுதி நஞ்சு என்று பிரிக்கப்பட்டுள்ளது.

### பூச்சிநாசினி வகைகள்

(அ) இயற்கை தாவர சேர்வைகள்:- தாவரத்தின் பகுதியிலிருந்து இயற்கையாக தயாரிக்கப்படும் நாசினிகள் முன்பு பரந்த அளவில் பாவிக்கப்பட்டது. தற்காலத்தில் பாவனை குறைவு உ+ம் நிக்கொட்டின், பைரீதரம், ரோட்டினன்

(ஆ) செயற்கை அசேதன சேர்வைகள்:- பறிஸ் கிறின் என்னும் ஆசனிச் சேர்வை முதலில் பாவிக்கப்பட்டது. தற்பொழுது கரப்பொத்தானைக் கட்டுப்படுத்த "போரக்ஸ்" பாவிக்கப்படுகிறது

(இ) செயற்கை சேதன சேர்வைகள்:- தற்காலத்தில் மிக அதிகளவில் பாவிக்கப்படும் பூச்சிநாசினி வகைகளாகும். இவை நவீன பூச்சி நாசினிகளாகவும் இருக்கின்றன. இவற்றில் பின்வரும் பிரிவுகள் அடங்குகின்றன.

(1) சேதன குளோரீன் சேர்வைகள் உ+ம் டி. டி. ரீ. பி. எச். சி. இவை தற்பொழுது தடைசெய்யப்பட்ட பூச்சி நாசினிகள்.

(2) சேதன பொஸ்பரஸ் சேர்வைகள் உ+ம் மொனோகுரோட்டபொஸ், டயசினோன்.

(3) சேதன காபமேட் உ+ம் கார்போஃபியூரான், காபறில், புரோமச்சோர்.

(ஈ) செயற்கை பைறித்திரொய்ட் சேர்வைகள்:- பூச்சிகளை உடனடியாக இயக்கம் இழக்கச் செய்து பின்னர் இறக்கச்செய்கிறது. உ+ம் அம்புஸ்.

(2) தாவர கனிப்பொருள் எண்ணெய்கள்:- மண்ணெண்ணை குழம்புகள் இந்த வகையில் அடங்குகின்றன இவற்றின் பாவனைகள் மிகக் குறைவு.

பூச்சி நாசினி கொள்கலன்களில் எந்தவகையை சேர்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பூச்சி நாசினிகள் விளைத்திறனுக தொழிற்படுவது அவற்றின் நச்சுத்தன்மையுடன் நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது. பூச்சி நாசினிகளைப் பாவிக்க முன் அவற்றிலுள்ள அறிவுறுத்தல் சுட்டிகளை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளல் மிகஅவசியமானதாகும். சுட்டியிலுள்ளவாறே பூச்சிநாசினிப் பிரயோகத்தையும் மேற்கொள்ளவேண்டும். சரியான நேரத்தில் சிபார்சு செய்யப்பட்டஅளவில்சிபார்சுசெய்யப்பட்ட பூச்சி நாசினிகளை பாவிக்கவேண்டும்.

பூச்சியின் பருவங்களான முட்டை, குடம்பி, கூட்டுப் புழு, அணங்கு, முதிர்பூச்சி என்பவற்றில் எது தாக்குகிறதோ அதற்குரிய பூச்சிநாசினியை தெரிவுசெய்ய வேண்டும். முட்டைகளை அழிப்பதற்கு குவினல்பொஸ் வகையை சேர்ந்த பூச்சி நாசினிகள் தெரிவுசெய்யப்படுகின்றன. பயிரின் தாக்கப்படும் பகுதியைக் கொண்டும் பூச்சி நாசினிகள் தெரிவு செய்யப்படுகிறது.

பயிர்களை நன்கு அவதானித்து பூச்சிகள் இயற்கையாக அழியக்கூடிய சாத்தியக்கூறுகள் குறைவாகவுள்ள சமயங்களில் பூச்சிநாசினி பிரயோகத்தை மேற்கொள்ள வேண்டும் நெல்லில் 5 சதுர மீற்றருக்கு இரு சந்துக் குத்தி காணப்பட்டாலும் நெற் பயிரின் அடியில் 10-15 தத்திகள் காணப்பட்டாலும் பூச்சிநாசினி பிரயோகம் செய்ய வேண்டும். பூச்சிகளின் எண்ணிக்கையை கணிப்பதற்கு "ஒளிப்பொறி" ஒரு சிறந்த சாதனமாகும். பூச்சிநாசினி விசிறிய பயிர்களில் பூச்சி புழுக்கள் மீண்டும் காணப்பட்டால் ஒன்று அல்லது இரண்டு கிழமைக்குள் மீண்டும் விசிறலை மேற்கொள் வேண்டும்.

விசிறலை ஆரம்பிக்க முன் தெளிகருவி நல்ல நிலையில் இருக்கிறதா என்பதை பரிசோதித்து பழுதுகள் இருந்தால் திருத்தம் செய்தபின்பு விசிறலை மேற்கொள்ளுவதன் மூலம் வயலில் ஏற்படும் சிரமங்களையும் காலதாமதத்தையும் தவிர்க்கலாம் தெளிகருவியின் தாங்கியில் ⅓ பங்கு நீர் விட்ட பின் செறி குழம்பை வடி கட்டி மூலம் விட்டு ஒரு கோலினால் நன்கு கலக்கிய பின்பு மிகுதி 2/3 பங்கும் நீர் விட்டு நிரப்பி விசிறலை மேற்கொள்ளலாம் நீரில் கரையும் பவுடராயின் சிறிதளவு நீருடன் ஒரு பாத்திரத்திலிட்டு கலக்கிய பின் தெளிகருவியில் விடவேண்டும். பயிர்களுக்கு பூச்சிநாசினி விசிறும் போது இலைகளிலிருந்து திரவம் வடிந்தோடாமல் விசிறுவதுடன் இலையின் இருபுறமும் விசிறவேண்டும்.

(அடுத்தவாரம் முடியும்)

# விமான விபத்துக்களும் நெடியில்லாத வெடிமருந்தும்

## செய்தியின் பின்னணியில்

'பான்' அமெரிக்கன் விமான விபத்து சதிவேலையா, இயந்திர கோளாறு என விமான கறுப்பு பெட்டியை வைத்துக் கொண்டு அறிவியல் நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

எத்தனை பாதுகாப்புக்கள் விமான நிலையத்திலும், விமானத்திற்குள்ளும் இருந்த போதும் வன்முறையாளர்கள் வெடி மருந்துகளையும்ஆயுதங்களையும்பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கண்களில் படாமல் எப்படி உள்ளே கொண்டு செல்கிறார்கள் என்ற வேதனை நிறைந்த வியப்புகுறி எழுகிறதல்லவா?

தற்பொழுது விமான நிலையங்களில் பிரயாணப் பொதிகளை சோதனையிட நவீன வசதி கொண்ட இயந்திர சாதனங்கள், கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தனை பாதுகாப்புகள் பரிசோதனைகளுக்கு மத்தியில் வன்முறையாளர்கள் எப்படி குண்டுகளையும், ஆயுதங்களையும் கொண்டு செல்கிறார்கள் என்பது வேதனை நிறைந்த ஒரு கேள்வி.

பாதுகாப்பு பரிசோதனை விடயங்களில் மேற்கொள்ளப்படும் உத்திகளில் ஒன்று உடம்பில், உடையில் எங்காவது ஆயுதங்கள் கத்திகள், குண்டுகள், கிரனேட்டுகள் என்பனவற்றை கொண்டு செல்கிறாரா என்பதைக் கண்டறிய தொழில் நுட்பக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

பிரயாணிகளின் கைப்பைகள், பொதிகள், குழந்தைகளின் கைப்பொம்மைகள் என்பனவற்றில் ஆயுதங்கள், குண்டுகள் மறைத்து எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய எக்ஸ்றே கருவி எனப்படும் ஊடுகதிர்ச் சோதனைக் கருவிகள் உண்டு.

இதில் பிளாஸ்ரிக் உறைகளினால் மறைத்துக் கொண்டு செல்லப்படும் வெடி மருந்துகள் குண்டுகளை 'மெற்றல்' வழிகாட்டி மூலம் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் இந்த எக்ஸ்றே கருவி எனப்படும் ஊடுகதிர்ச் சோதனை மூலம் கண்டுபிடிக்க முடியும்.

விமான நிலைய சோதனை பீடங்களில் இந்த இரண்டு கருவிகளையும் வைத்து பயணிகள், பயணப்பெட்டிகள் பொதிகள் முதலியவற்றை மிக நுண்ணிய முறையில் பரிசோதனை செய்து உள்ளே அனுப்புகிறார்கள். இருந்தும் கூட இவ்வாறான அவலங்கள், துயரங்கள் எப்படி நிகழ்ந்து விடுகின்றன என்பதே இப்போதுள்ள கேள்வி. ஆனால் மெற்றல் உலோக ஆயுதங்களை எக்ஸ்றே இயந்திரத்தை பயன்படுத்தும்போது துப்பாக்கி, தோட்டாக்கள், தெரியுமே தவிர, வெடி மருந்துகள் தெரியாது. எக்ஸ்றே இயந்திரத்தை இயக்கும் போது மெற்றல் துப்பாக்கிகள், தோட்டாக்கள் தெரியாது.

விமான நிலையங்களில் இலட்சோப இலட்சம் பயணிகள் பயணம் செய்யும் வேளையில் எல்லாவற்றையும் அனுபிசகாமல் சோதனையிடுவது என்பது பெரிய சிரமம்தான் இந்த பாதுகாப்பு சந்து பொந்துகளுக்குள் வன்முறைத் திட்டங்கள் சிற்சில சமயங்களில் நுழைந்துசேதங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

எலெக்ரோனிக் பிறிவர் டிரெக்ரர்ஸ் என்ற கருவி வெடிமருந்துத்திரியை எளிதில் கண்டுபிடித்து விடும். என்றாலும் பிளாஸ்ரிக் பைகளின் உள்ளே பொதிந்து அனுப்பும் போது கண்டுபிடிப்பதில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

இப்போது பெரும்பாலான பிளாஸ்ரிக் வெடிமருந்துகள் வாசனை நெடி செடியில்லாத நிலையில் தயாரிக்கப்படுகின்றன. வெடிமருந்துகளின் நெடி வெளியே வரும்போது சோதனை செய்யும் கருவிகளால் கண்டுபிடிக்கப்பட்டு விடுகின்றன. இது கண்டுபிடிப்பதற்கு இடைஞ்சலாக இருப்பன வாசனையற்ற வெடி மருந்துகளாகும். இவ்வாறான வெடிமருந்துகளில் ஒன்று சேம்ராக்ஸ் என்ற செக்கோஸ்லாவாக்கிய தயாரிப்பாகும்.

இந்த வெடிமருந்துகளைத் தயாரிக்கும் செக்கோஸ்லாவாக்கியா, தான் தயாரிக்கும்இந்த நெடி இல்லாதவெடி மருந்துகளை பயங்கரவாதிகள் கைக்குப் போகாமல் பாதுகாத்துக்கொள்வோம் என உறுதி கூறியது. என்றாலும் பல வன்முறைச் சம்பவங்களில் இந்த நெடி இல்லாத வெடிமருந்துகள் பயன்படுத்தப்பட்டதை நாம் அறிகிறோம்.

பிரிட்டன் அரசு செக்கோஸ்லாவாக்கிய அரசிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தது. வெடிமருந்துகளைத் தயாரிக்கும்போது பாதுகாப்பு பரிசோதனைகளின்போது எளிதில் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். நெடியை அகற்றும் வேலையைச் செய்ய வேண்டாம் என செக்கோஸ்லாவாக்கிய அரசிடம் கேட்டுக்கொண்டது.

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம் - ஷப்ரு



## 'ஷப்ரு' தரும் புதிய வட்டி வீதங்களை கூர்ந்து நோக்குங்கள்! ஆகா! பிரமாதம்! பரமதிருப்தி என்றே ஆனந்திப்பீர்கள்!

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,395,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,263,878 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,857 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி | | | |
| 〃 செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,878 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B. (Lond), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்.

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும் அபரிதமான வளர்ச்சியும் உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன. வங்கியியலிலும் நிதியியலிலும் சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன் அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே எமது பிரதான நோக்கமாகையால் அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து திறமையான சேவைகளை வழங்குகின்றோம்.

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி விதங்கள் பல்வேறு விசேட சலுகைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. உங்கள் தேவைக்கேற்ப வட்டியை மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில் பணமாகவோ, காசோலையாகவோ அன்றி வங்கிக் கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**SHABRA UNICO FINANCE LIMITED**
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL. 589310, 500576.
**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.**
யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

## விலங்குகள் விதம் விதம்: 14

# மலைப்பாம்பு

பாம்புகளில் மிகப்பெரிய இனமாகவும் விஷமற்றதாகவும் உடலில் வளர்ச்சியடையாக் கால்களையும் கொண்டது மலைப்பாம்பு சாதாரணமாக பார்த்தால் இக்கால்கள் தெரியாது. கால் காரணமாக இதற்கு காலுடை விரியன் எனத் தமிழ் அறிஞர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

சாதாரணமாக மலைப் பாம்புகள் 19 அடி அளவுள்ளதாக காணப்படும். ஆனால் இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலம், அந்தமான் நிக்கோபார் தீவுகளில் மட்டும் 28 அடி நீளமான மலைப்பாம்புகள் வாழ்கின்றன.

மலைப்பாம்பு காடுகள், நீரோடைகள், ஆறுகளில் வாழ்கின்றது. இது பசி எடுப்பின் மரங்களில் ஏறி அதன் கிளையில் சுற்றிக் கொண்டு தலையைத்தொங்கப்போட்டவாறு செத்தது போலஇருக்கும். அவ்வேளை அங்கு வரும் பறவைகள் மான் சிறுத்தை போன்றவற்றை பாய்ந்து பிடிக்கும். பிடித்ததும் தன் வாலால் அவைகளைச் சுருட்டி மூச்சுத் திணற வைத்து இறக்கச் செய்யும் மேலும பிராணிகள் இறந்துள்ளனவா எனப்பரிசோதிக்க நாவால் அதன் உடலைத் தடவும் மலைப் பாம்பு எப்பெரிய பிராணியையும் உண்ண வசதியாக உள்ளது அதன் விரியும் தன்மை கொண்ட வாய் வாயில் முதலில் தலையே புகும். அடுத்தே. உடல் உட்செல்லும்.

மலைப்பாம்பு ஒரு மானை உண்டால் அது செமிக்க மூன்று கிழமைகளாகும். பறவை எலி, முயல், போன்ற சிறு பிராணிகள் செமிக்கஒருவாரகாலமாகும்

மலைப்பாம்பு சிலவேளைகள் இரண்டு ஆண்டு காலம் கூட உணவு உண்ணமல் இருக்கும்.

முதலில் காட்டில் திரிந்து இலைகளை வாலால் சுருட்டிச் சேர்த்துக் குவித்தபின் அதன் நடுவில்குழி தோண்டி முட்டையிடும் பெண்மலைப் பாம்பு சாதாரணமாக ஒரே தடவையில் 8 முதல் 100 முட்டைகள் வரை இடும். முட்டையின் ஓடோ தடிப்பானதல்ல. மெல்லிய தோல்தான் முட்டையின் ஓடாகும்.

தி. தவபாலன்




## எங்கள் வீட்டு நாய்

கறுப்பு நிறத்தில் வெள்ளை மறையன்
எங்கள் வீட்டு நாய்
கலைத்துப் பிடிக்கும் கோழி முயல்கள்
எங்கள் வீட்டு நாய்
வீமன் என்று நாமழைக்கும்
எங்கள் வீட்டு நாய்
வீரம் அதிகம் உடையதாகும்
எங்கள் வீட்டு நாய்
வேற்று மனிதர் தம்மைக் கண்டால்
எங்கள் வீட்டு நாய்
வெள்வெள் என்று சத்தமிடும்
எங்கள் வீட்டு நாய்
நாம் கொடுக்கும் உணவுக்காக
எங்கள் வீட்டு நாய்
நன்றியுடன் வாலை யாட்டும்
எங்கள் வீட்டு நாய்

விழிசைச்சிவம்

## கல்வி அழகு

கூந்தலின் அழகும் மடிப்புள்ள ஆடையின் கரையின் அழகும் உடம்பிலே பூசுகின்ற மஞ்சள் பூச்சின் அழகும் ஒருவருக்கு உண்மையான அழகு அல்ல. மனதிலே நாம் நற்குணம் உடையோம் என்று கருதச் செய்கின்ற கோணுதல் இல்லாத தன்மையால் படிப்பினால் உண்டாகும் அழகே அழகாகும்.

கல்வி பிறருக்கு கொடுக்க குறையாது. கற்றவர்களை மிகுந்த புகழோடு விளங்கச் செய்யும். நாம் உயிரோடு வாழும் வரை தீமையின்றி வாழலாம். ஆகையால் கல்வியைப்போல அறியாமையை அழிக்கும் ஒரு மருந்தை எந்த உலகத்திலும் காணமுடியாது.

கல்வியை சேகரித்து வைக்கும் இடமாகிய மனதிலே இருந்து பிறரால் அதனை கவரமுடியாது. தகுதி உடையோர்க்கு கொடுக்கும் போது குறையாது. கல்வியின் மிகுதியான சிறப்பைக்கண்டு அரசனுக இருந்தாலும் சோபித்து அக்கல்வி அபகர்க்கப்படாது. ஒருவன் தன்பிள்ளைக்கு செல்வம் ஒன்று சேர்த்து வைக்கும் சிறந்த பொருள் இதுவன்றே வேறு இல்லை.

கல்விகரையற்றது. ஆனால் அதை படிப்பவர்களது வாழ்நாளோ நிலையற்றது. ஆலோசித்து பார்த்தால் வாழுகின்ற நாள்களிலும் கூட உடல் நோயும் பலவாகும். ஆதலால் நீரை விட்டு பாலை மட்டும் பருகும் அன்னம் போல விவேகிகள் நல்ல நூல்களையே படிப்பார்கள்.

விண்ணுலக வாழ்க்கையை காட்டிலும் கற்றவர்களோடு கூடி இருத்தல் சந்தோஷத்தை தரும். கற்றவர் நட்பு நுனியில் இருந்து அடிக்கரும்பை உண்டது போல இனிக்கும். பாதிரிப்பூவின் தொடர்பால் நீரும் மணம் வீசுவது போல கல்லாதவராய் இருந்தாலும் கற்றவர்களோடு பழகினுல் அவர்களும் நல்ல அறிவு பெறுவார்கள்.

இ.சுரேஷ்குமார்

## வெற்றி யாருக்கு

ஒருநாள் காற்றும் சூரியனும் எதிர்பாராத விதமாக சந்தித்துக் கொண்டன. அப்பொழுது காற்று நான்தான் இந்த உலகத்தில் பெரியவன் என்ற எண்ணத்தில் சூரியனைப் பார்த்து 'ஏய் சூரியனே இந்த உலகத்தில் "நீயா. நானு பெரியவன்" என்று கேட்டது" அப்பொழுது சூரியன் நான்தான் பெரியவன் என்றது. காற்று சூரியனைப்பார்த்து 'சூரியனே' நான் இல்லாவிடில் இந்த உலகமே இல்லாமல் போய் விடும் என்றது. அப்பொழுது சூரியன் காற்றைப் பார்த்து நான் இல்லாமல் போனுல் ஒளியிழந்து விடும் என்றது.

இருவரும் பலமணி நேரம் வாக்குவாதப்பட்டனர். பின்பு இருவரும் ஒரு தீர்மானத்திற்கு வந்தனர். ஒரு போட்டி வைப்போம் என்றனர். ஒரு மனிதன் மேலங்கியுடன் வேலை செய்து கொண்டிருந்தான். அப்பொழுது சூரியன் காற்றைப் பார்த்து நம்மிருவருள் யார் இந்த மனிதனின் மேலங்கியை கழற்ற வைக்கின்றுரோ அவரே பெரியவன் என்றது

முதலில் காற்று வீசியது. பலமணி நேரம் காற்று மிகவும் பலமாக வீசியது. ஆனுல் அந்த மனிதன் மேலங்கியை கழற்றவில்லை. பின்பு சூரியன் தனது கதிர்களால் வெப்பத்தை அகோரமாக வீசியது. அம்பொழுது மனிதன் மேலங்கியை விரைவாக கழற்றி வைத்தான். அப்பொழுது காற்று வெட்கத்துடன் தோல்வியோடு அந்த இடத்தை விட்டு நகர்ந்தது.

கு. இலட்சுமிகாந்தன்
அங்கத்தவர் இல. 91

## எப்போது கிடைத்தது?

| கண்டுபிடிப்பு | காலம் |
|---|---|
| அச்சு (கேக்ஸ்டன்) | 1476 இல் |
| மின்சாரம் (லாட் பிரதர்ஸ்) | 1843 இல் |
| மோட்டார் (ஹென்றி போர்டு | 1883 இல் |
| ரயர் (டன்லாப்) | 1884 இல் |
| தட்டெழுத்து இயந்திரம் (சோபால்) | 1883 இல் |
| கமரா (தொஸ்வெட்ஜ் உட்) | 1802 இல் |
| கடிகாரம் (பீட்டர்) | 1500 இல் |
| ரேடியோ (மார்க்கோனி) | 1902 இல் |

செ. தயாபரன்

## நாடும் தலைநகரமும்

| | |
|---|---|
| எகிப்து: | கெய்ரோ |
| லிபியா: | திரிப்பொலி |
| அல்ஜீரியா: | அல்ஜீயேர்ஸ் |
| எத்தியோப்பியா: | அடிஷ் அபாபா |
| சோவியத் ஒன்றியம்: | மாஸ்கோ |
| கென்யா: | நைரோபி |
| உகண்டா: | கம்பாலா |
| புறூண்டி: | உசுப்புரு |
| தன்சானியா: | டார்-எஸ்-ஸலாம் |
| சாம்பியா: | லுசாக்க |
| அங்கோலா: | லுவான்டா |
| சூடான்: | கார்ட்டூம் |
| பராகுவே: | அஸன்ஸியொன் |

ச. இராகுலன்

## பூந்தோட்டம் அங்கத்தவர்கள்

இலக்கம் 161 தில்லையம்பலம் குகநேசன்
வயது 13, உருத்திரபுரம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி

இலக்கம் 162 பிறைசூடி பிரதினி
வயது 10, ட்றீபேர்க் கல்லூரி சாவகச்சேரி

இலக்கம் 163 சிவமுருகானந்தன் சிவநடேசன்
வயது 12, வட்டக்கச்சி மகாவித்தியாலயம் வட்டக்கச்சி

இலக்கம் 164 நடராசா பவானி
வயது 08, ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை சுழிபுரம்

இலக்கம் 165 குணரட்ணம் குணசீலன்
வயது 13, விக்ரோறியா கல்லூரி சுழிபுரம்

இலக்கம் 166 இராசதுரை ஜீவானந்தன்
வயது 12, கொக்குவில் இந்துக்கல்லூரி கொக்குவில்

இலக்கம் 167 சும்சாயினி செல்வநாயகம்
வயது 08, திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் கொடிகாமம்

இலக்கம் 168 செல்வநாகன் சக்தீபன்
வயது 10, இணுவில் அமெ.மிஷன் தமிழ் கலவன் பாடசாலை சுன்னுகம்

இலக்கம் 169 தங்கவடிவேல் பிரியந்தினி
வயது 09, சைவப் பிரகாச வித்தியாலயம் வேலணை

இலக்கம் 170 ஸ்ரீதரன் மிதிலா
வயது 11, மட்டுவில் மகா வித்தியாலயம் சாவகச்சேரி

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..............................

வயது: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................

வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... திகதி

.............................. பெற்றூர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினுன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்ருக நிரப்பி அனுப்ப வேண்டும்)

# 75,000 சோவியத் படைகளும் பெப்ரவரி 15 க்கு முன்னராக ஆப்கானிலிருந்து விலகுமா?

பத்து வருடகால ஆப்கான் பிரச்சனை விரைவில் தீர்ந்து விடும் என்ற எதிர்பார்ப்பு உலகில் ஏற்பட்டுள்ள இவ்வேளையில், ஆப்கான் கெரில்லாக்களுக்கும் சோவியத் துணை வெளியுறவு அமைச்சர் யூரி வரோன்சோவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. இது ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் எப்படி அமையும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.




### பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முறிவு

சோவியத் அமைச்சர் நான்கு நாட்கள் இஸ்லாமாபாத்தில் கெரில்லாக் குழுக்களின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இரண்டு கோரிக்கைகளை முக்கியமாக முன்வைத்தார். உடனடியாக யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும், சோவியத் படைகளின் வெளியேற்றத்தின் பின்னர் அமைக்கப்படும் கூட்டு அரசாங்கத்தில் தற்போதைய நஜிபுல்லா அரசுக்கும் இடம் கொடுக்க வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள கெரில்லாக்கள் மறுத்துவிட்டதே பேச்சுவார்த்தைகள் முறிவடைவதற்கான முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. சோவியத் படைகள் முற்றாக ஆப்கானிலிருந்து வெளியேறும்வரை நாம் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க தயாராகவில்லை என முக்கிய கெரில்லா அமைப்பின் தலைவரான ஹெக்மதியார் அறிவித்துள்ளார். ஆனால் சோவியத் படைகள் வெளியேற வேண்டுமானால் கெரில்லாக்கள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என சோவியத் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு படை வெளியேற்றமா, யுத்த நிறுத்தமா முதலில் என்று எழுந்துள்ள கேள்வி சோவியத் படைகளின் வெளியேற்றத்தைத் தாமதமாக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஜெனிவாவில் கைச்சாத்தான ஆப்கான் ஒப்பந்தப்படி பெப்ரவரி மாதம் 15ம் திகதியுடன் சோவியத் துருப்புக்கள் முற்றாக வெளியேறிவிட வேண்டும். அதாவது ஆப்கானில் தற்போதுள்ள 75,000 சோவியத் துருப்புக்கள் ஒரு மாத காலத்தில் அங்கிருந்து வெளியேற வேண்டும்.

ஆப்கானுக்கு அனுப்பப்பட்ட 1,50,000 சோவியத் துருப்புக்களில் 75,000 துருப்புக்கள் ஏற்கனவே அங்கிருந்து வெளியேறிவிட்டது தெரிந்ததே. யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் தற்போதைய ஜனதிபதி நஜிபுல்லாவுக்கு ஆதரவான படைகளிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு சோவியத் அரசாங்கம் முற்படுவதாக கெரில்லாக்கள் சந்தேகிக்கின்றார்கள்.

அதேபோல சோவியத் படைகள் முற்றாக வெளியேறும்போது, கெரில்லாக்கள் ஆப்கானிஸ்தான் முழுவதையும் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் நிலை உருவாவதையும் சோவியத் ஆட்சியாளர்கள் விரும்பவில்லை. முஜாகுதின் கெரில்லாக்கள் அமெரிக்காவின் விசுவாசிகளாகவே இருப்பார்கள் என மாஸ்கோ கருதுவதே இதற்கான முக்கிய காரணம் இதற்காக தமக்கு ஆதரவாக இருக்கக் கூடியபொம்மை அரசு ஒன்று ஆப்கானில் இருப்பதையே மாஸ்கோ விரும்புகின்றது.

இதனால் தான் கெரில்லாக்களின் பலத்தைக்குறைப்பதற்காக 'உடனடி யுத்த நிறுத்தம்' என்ற கோஷத்தை சோவியத் யூனியன் முன்வைக்கின்றது. ஆப்கானிஸ்தானின் பல முக்கிய நகரங்கள் முஜாகுதின் கெரில்லாக்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில் 'தோல்வியுடன்' திரும்பிச் செல்வதையும் சோவியத் யூனியன் விரும்பாது. இது

## 'ஆர்பி'

சோவியத்யூனியனின் 'இமேஜ்' ஜையும் பாதிக்கும்.

### சோவியத்அமைச்சரின் தீவிர முயற்சிகள்

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானுக்கான முன்னாள் சோவியத் தூதுவரும் சோவியத் துணை வெளியுறவு அமைச்சருமான யூரி லரோன் சோவ் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் எதுவும்பலனளிக்கவில்லை ஆப்கான் கெரில்லாக்களுடன் ஒருபோதும் நேரடிப்பேச்சுவார்த்தை நடத்த முடியாதென சோவியத்யூனியன் ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும் லரோன் சோவ் இரண்டு தடவைகள் 'முஜாகுதின் களுடன் நேரடிப்பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

சவுதி அரேபியாவிலுள்ள தாய்ஃப் என்ற நகரில் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இது ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தையாகவே இருந்தது. அதன் பின்னர் ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னரான ஸாஹிர் ஷானுடன் ரோம் நகரில் சோவியத் அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தினர். 1973ஆம் ஆண்டில் இடம் பெற்ற புரட்சியையடுத்து ஸாஹிர்ஷா ரோமில் வசித்து வருகிறார்.

சோவியத்படை வெளியேற்றத்தின் பின்னர் அமைக்கப்படவுள்ள கூட்டரசில் முன்னாள் மன்னரும் இடம்பெற வேண்டும் என்ற சோவியத் அரசின் விருப்பத்தைலரோன் சோவ் இச்சந்திப்பில் தெரிவித்தார். எனினும் முஜாகுதின் கெரில்லாக்கள் இதனை விரும்பாததால் முன்னாள் மன்னர் இதனையிட்டு எதுவும் தெரிவிக்கவில்லை. இதனால் இம் முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது.

இதனைத் தொடர்ந்தே பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த வாரம் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. இப்பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததையடுத்து முஜாகுதின் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஹெக்மதியார் விடுத்துள்ள அறிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புக்கள் முற்றாக வெளியேறும் வரை தாம் யுத்த நிறுத்தமொன்றை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என அவர் அறிவித்துள்ளார் அது வரையில் எந்த ஒரு விடயத்தையிட்டும் சோவியத் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை எனவும் அவர் கூறிவிட்டார்.

இந்த நிலையில் துருப்புக்கள் வெளியேற்றத்தை ஒத்திவைத்த வேண்டிய நிலை சோவியத்யூனியனுக்கு ஏற்படத்தான் செய்யும். எனினும் சோவியத்யூனியன் இவ்வாறு செய்தால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்படக் கூடிய எதிர்ப்புக்களையும் விமர்சனங்களையும் அது எதிர்கொள்ளவேண்டி ஏற்படும் இந்த நிலையில் இதற்கான பழியை அமெரிக்கா மீதும் பாகிஸ்தான் மீதும் சுமத்துவதற்கு சோவியத்யூனியன் முற்படலாம்.


## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

## Hindu Board of Education

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான ஆதனங்கள் இலங்கையில் பல பாகங்களில் இருந்தன அவைகளில் பல அரசாங்கத்தால் 1962-ம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்டுள்ளன. சுவீகரிக்கப்படாமல் எஞ்சி இருக்கின்ற ஆதனங்களின் பட்டியல் தயாரிப்பதற்காகவும் அவைகளின் ஆட்சியை மீளப்பெறுவதற்காகவும் பொதுமக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடுகின்றோம் இவ்வாதனங்கள் நம்பிக்கைச் சொத்தாதலினால் ஆட்சி உரிமைபெற இயலாது. ஆகவே மேற்படி ஆதனங்களின் விபரங்கள் தெரிந்தவர்கள் சங்கக் காரியாலயத்துடன் நேர்முகமாகவோ அல்லது கடிதமூலமாகவோ தயவுசெய்து தொடர்புகொண்டு முழு விபரங்களையும் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.


இந் நம்பிக்கைச் சொத்துக்கள் திருநெல்வேலி இந்து சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தின் நன்மைக்கு அவசியம் தேவைப்படுகின்றன.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தலைவர்

01303


# நாடகம் எழுதி, நடிக்கப்பழக்கி நடிகரான நவாலியூரான்



**60** வயது பூர்த்தியடைந்த ஈழத் தமிழ்ப் பெரியார்களில் இன்னும் ஒரு கலைஞரைப் பாராட்டும் பாக்கியம் 1989 இன் ஆரம்பத்திலேயே கிடைத்துள்ளது. அவர் கடந்த 30 வருட காலமாக ஈழத் தமிழ் நாடகத்துடன் நெருங்கிய உறவு கொண்டவர். நாடகங்கள் எழுதி, தானும் நடித்து, நூற்றுக்கணக்கான இளைஞருக்கு நடிக்கப்பழக்கியவர்- நவாலியூர் நா செல்லத்துரை.

நவாலியூரில் 6. 1 1929 இல் பிறந்த நாகமுத்து செல்லத்துரை பாடசாலைகளில் படிக்கும்போதே நடிப்பில் பரிசுகள் பெற்றார். சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் பீ. ஏ. படிக்கும் போது சிறந்த நடிகராகத் தெரிவு செய்யப்பட்டதோடு மாணவ கால நடிப்பு நிறைவுற்றது.

அதன் பின்பு, ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் இரு வருடங்கள் கற்பித்தபின், கால் நூற்றுண்டு காலமாக சண்டி நினிற்றி கல்லூரியில் தமிழோடு நாடகம் வளர்த்தார். யாழ். குடாநாடு மலைநாட்டுத் தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு அளித்த ஆசிரியர்களில் குறிப்பிட வேண்டிய ஒருவராக நவாலியூர் செல்லத்துரை இருக்கிறார். நவாலியூரான் நாடகம் பயில்விப்பதைப் பார்ப்பது ஒரு தனி அனுபவம். என் போன்றோருக்கு நாடகத்தை மேடையில் பார்ப்பதிலும் பார்க்க, அவருடைய பராமரிப்பிலே அது ஒத்திகைகளில் வளர்வதைப் பார்ப்பதே மிகுந்த மகிழ்ச்சிதரும். இக் கட்டுரையாசிரியனுக்கு அவருடைய இரு நாடகங்களில் நடிக்கும் பாக்கியம் கிடைத்தது. நாடகம் இயக்குவதில் அவர் மிகவும் பண்பான முறையைக் கடைப்பிடிப்பார். அவருக்கு முறையான தமிழ் அறிவும், போது

## நந்தி

மான இசைப்பயிற்சியும், நாடகம் எழுதக்கூடிய ஆற்றலும் இருந்ததால் நாடகத்தை வேறு ஒருவர் உதவி இல்லாமலே மிகக் குறுகிய காலத்தில் நெறிப்படுத்தி மேடையேற்ற முடிந்தது. பாடசாலை நாடகங்களுக்கு இத்தகைய ஆற்றல் இன்றியமையாதது. இளைஞருக்கு, பாடசாலைகளிலும், வெளியிலும், மூக்கியமாக மலைநாட்டில் நாடகம் கற்பித்தது தான் நவாலியூரானின் தலைசிறந்த பணி என்று கணிக்கப்படும்.

நவாலியூர் நா செல்லத்துரை தொடர்ந்து பல காலம் நாடகத்துறைக்குச் சேவை செய்ய வேண்டும் என வாழ்த்துகிறோம்.

### சேக்கிழார் . . .

... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

மானிடம் வேண்டிப் பெற்றவர்.

கைலைமலைக்குச் சென்று சிவபெருமானைத் தரிசிக்கும் ஆவலினால் தலையால் நடந்து வடநாட்டுக் கைலைமலை நோக்கி நடந்து சென்றார் அம்மையார். சிவபெருமான் ''அம்மையே'' என்று அழைத்தார். எம்பெருமானின் பாதங்களில் விழ்ந்து பணிந்தார் அம்மையார். சிவபெருமான் அம்மையாரைப் பார்த்து 'நம்பால் இங்கு வேண்டுவதென் என்ன' அம்மையார் கூறுகிறார்.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு
கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்
டும் பிறப்புண்டேலுன்னை
என்றும்
மறவாமை வேண்டும்
இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க
என்றார்.

''அழியாத இன்ப அன்பு வேண்டும். என்று கேட்டு மேலும் கேட்கிறார். பிறவாமை வேண்டும். பிறப்புண்டேல் உன்னை மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும். நீ ஆடல் புரியும் போது உன் அடியின்கிழ் இருந்து மகிழ்ந்து பாட வேண்டும்'' என்று இறைவனை வேண்டுகின்றார் காரைக்கால் அம்மையார்.

அதற்குச் சிவபெருமான் அருள் கொடுத்துப் பின்வருமாறு கூறுகிறார்.

கூடுமா றருள்கொடுத்துக்
குலவுதென் திசையி
லென்றும்
நீடுவாழ் பழன மூதூர் நில
விய வாலங்காட்டில்
ஆடுமா நடமும் நீ கண்டா
னந்தஞ் சேர்ந்தெப்போதும்
பாடுவாய் நம்மை யென்
றான் பரவுவார் பற்றாய்
நின்றான்.

''தென் திசையில் அதாவது தமிழ்நாட்டிலுள்ள திருவாலங்காட்டிலே சென்று எமது நடனத்தைக் கண்டு ஆனந்தமடைந்து நம்மைப் பாடுவாயாக'' என்று பரமசிவன் காரைக்காலம்மையாரைப் பணிக்கிறார்.

காரைக் காலம்மையாரும் திருவாலங்காட்டுக்குச்சென்று திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் பாடிப் பரவிச் சிவபெருமானைத் தரிசித்தார், என்று சேக்கிழார் சுவாமிகள் பாடுகிறார்.

சிவபெருமானே தனது மெய்யடியார்களுக்கு, தென் திசையில், திருவையாறுக்கும், திருவாலங்காட்டுக்கும் சென்று அங்கே தன்னை வழிபடும்படி அனுப்பிவைத்த செய்தி தமிழ்நாட்டின் சிறப்புக்கு அத்தாட்சி போன்றதொன்று.

சேக்கிழார் சுவாமிகள் நாட்டுப் பற்றை மக்களுக்கு ஊட்டுவதற்காகச், சிவபெருமானே தமிழ்நாட்டைப் பெரிதும் மதித்ததாகவும், கைலைக்குச் சென்ற அடியார்களை மீண்டும் தமிழ் நாட்டுக்குச் செல்லும்படி அனுப்பியதாகவும் பாடியிருக்கும் விதம் கவனிக்கத் தக்கது.

## தீவுப் பகுதியில்

3ஆம் பக்கத் தொடர்ச்சி

அல்லது அக்கறை கொள்ளாத, அல்லது அக்கறை கொள்ளக்கூடிய வகையில் பொருளாதாரவளம் குறைந்தவர்களின் பிள்ளைகள் கல்வியில் நாட்டம் கொள்ளாத்துடன், பொருளாதார ரீதியில் வீட்டுத்தலைவரின் உழைப்பை மட்டும் சமாளிக்க முடியாத குடும்பங்களில் பிள்ளைகள் ஆரம்பக்கல்வியுடனே அல்லது இடைத்தரக்கல்வியுடனே படிப்பைத் தொடராது செல்லலும் காரணமாக அமைந்து விடுகின்றது. தீவுப்பகுதியில் 44 சதவீத மாணவர்கள் ஆரம்பக் கல்வியுடனும், 87 சதவீத மாணவர்கள் இடைத்தரக் கல்வியுடன் தமது கல்வியை முடிவுக்குக் கொண்டுவருகின்றனர். இந்நிலை யாழ்ப்பாணத்தில் ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடும் போது அதிகமானது. மாணவர்கள் கல்விநிலையில் பின்தங்கியிருப்பதற்கு அவர்கள் தரப்பில் கூறப்படும் குற்றச்சாட்டு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் தனியார் கல்வி நிறுவனங்கள் (ரியூசன் நிலையங்கள்) தமது பகுதிகளில் காணப்படாததும் முக்கிய காரணிகளில் ஒன்ருகும் எனக்கருதுகின்றனர். அதாவது ஆசிரியரால் கற்பிக்கப்படுவதையே நம்புகின்றனரே யொழிய பாடசாலை தவிர்ந்த நேரங்களில் ஒழுங்கமைப்புடன் கூடிய படிப்பினை மேற்கொள்வது மிகக்குறைவாகவுள்ளது.

பெற்ருேர் நிலையைப் பொறுத்தவரை அடுத்த வீட்டுப்பையன் வெளிநாடு போய் பணம் அனுப்புகிருன். எனது பிள்ளை வளருது இல்லையே என்று அங்கலாய்க்கும் பண்பு அண்மைக்காலங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது தீவுப்பகுதியில் மாணவர்களின் இன்றைய கல்விநிலைக்கு மறைமுகமாகவோ, நேரடியாகவோ தார்மீகப்பொறுப்பினை பெற்ருேர்களேவகிக்கின்றனர் 1970 களிலிருந்து ஆரம்பித்த நாட்டின் ஸ்திரமற்ற தன்மை குறிப்பாக 1983 லிருந்து விரிவு பெற்றமையால் பெற்ருேர் மாணவரிடையே பல எண்ணப்பாடுகளைத் தோற்றுவித்ததைக் காணமுடிகின்றது. பல்வேறு நிலைகளில் உயிராபத்துக்குப் பயந்து வெளிநாடு செல்வது ஆரம்ப காலங்களில் காணப்பட்ட போதிலும் அதனுல் பெறப்பட்ட வருமானம் இப்பிரதேச குடும்பங்களிடையே அதிகரித்ததன் விளைவாக வருமானத்தையே குறிக்கோளாகக் கொண்டு இடைத்தரக் கல்வியைக் கற்றுவந்த ஆண்கள் மட்டுமல்லாது பெண்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வரும் நிகழ்ச்சியினுல் கல்வி நிலை பாதிக்கப்படுவதற்கு பெற்ருேரே முழுப்பங்காளிகள் ஆகின்றனர். வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் கல்வி நோக்கோடு செல்வார்களானுல்வரவேற்கக் கூடியது. அண்மைக்காலமாக பதினுறு வயதுக்குட்பட்டவர்களை எவ்வளவு பணஞ் செலவானுலும் அனுப்பிவருவது கல்விநிலை பாதிக்கப்படுவதன் உச்சக்கட்டமாகக் கொள்ளலாம். மேலும் பெற்ருேர்கள் பிள்ளைகளின் கல்வியில் அதிகநாட்டம் கொள்வது படிப்படியாகக் குறைவடைந்து செல்கின்றது. உள்ளூர் வளவாய்ப்பின்மையால் பெரும்பாலான குடும்பத்தலைவர்கள் வெளி மாவட்டங்களிலோ அல்லது வெளிநாடுகளிலோ வாழ்கின்றனர், குடும்பத்தலைவி கல்வி விடயத்தில் அதிக அக்கறை கொள்ளாதது இப்பிரதேசத்தில் காணப்படும் குணும்சமாகவுள்ளது. தீவுப்பகுதி மாணவர்களின் கல்விநிலை முன்னேற வேண்டுமாயின் பெற்ருேரின் மனநிலை மாற்றம் பெறல் வேண்டும்.

மூன்ருவதாக தீவுப்பகுதி மாணவர்களின் கல்விநிலை பின்னேக்கிச் செல்வதற்கு ஆசிரியர்களும் தார்மீகப்பங்கேற்க வேண்டும். 1950, 1960 களில் உள்ளூர் ஆசிரியர்கள் தமது பிள்ளைகளை நகரப் பாடசாலைகளுக்கு கல்வி கற்க அனுப்பினுலும் பிரதேசப் பற்றுடன் கல்விபோதித்ததைக் காணமுடிந்தது. இன்றைய நிலையில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆசிரியர்களிடையே இப்பண்பு குறைவடைந்து செல்வதைக் காணமுடிகிறது. தீவுப்பகுதிக்கு வெளியிலிருந்து வந்துள்ள ஆசிரியர்கள் இப்பிரதேச மாணவர்களின் கல்வியை வளப்படுத்துவதிலும் பார்க்க எப்போது மாற்றம் பெற்றுச் செல்லலாம் என்பதிலேயே அக்கறை கொண்டவர்களாகவிருக்கின்றனர் தற்போதுள்ள போக்குவரத்துக் கஷ்டம் அவர்களின் எண்ணத்தை மேலும் வலுவூட்ட வல்லன எனலாம்.

நான்காவதாககல்விநிலைபின்தங்கிக் காணப்படுவதற்குபிரதேச கல்வித்திணைக் களமும் பங்கேற்கவேண்டும். ஆசிரியர் நியமனம், இடமாற்றம், தேவைப்படுவதற்குரிய ஆசிரியர்களை நியமித்தல் ஆசிரிய விடயங்களில் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுகின்றனர் குறிப்பாக தீவுப்பகுதிகளிலிருந்து வெளியே இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் முழுமையாகச் சென்று விடுகின்றனர். ஆனுல் தீவுப்பகுதிக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் செல்லத் தயங்குவதுடன் அதில் வெற்றியும் பெற்றுவிடுகின்றனர் எனவே ஆசிரிய நியமன விடயத்தில் புதிதாக நியமனம் பெறுபவர்களைக் கொண்டாவது நிவர்த்தி செய்து இப்பிரதேசத்தின் கல்விவளர்ச்சிக்கு ஆவனசெய்யவேண்டும்.

மேற் கூறப்பட்ட பல்வேறு குறைபாடுகள் பெரும்பாதிப்பினைஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக தீவுப்பகுதியிலுள்ள மகாவித்தியாலயம் ஒன்றில் கடந்த எட்டு ஆண்டுகளில் க. பொ. த. சாதாரண பெறுபேற்றினை நோக்கின் புலனுகும். எட்டு ஆண்டுகளிலும் பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களில் 10-15 வீதத்தினரே 6 பாடங்களுக்கு மேல் சித்தியடைந்துள்ளனர். அதுமட்டுமல்லாது ஆண்டு 5, ஆண்டு 6 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே குறைவான மாணவர்களே சித்தியடைந்துள்ளனர். எனவே தீவுப்பகுதியின் இன்றைய கல்விநிலையில் உள்ள அவலநிலையைப் போக்குவதற்கு மாணவர்கள், பெற்ருேர், ஆசிரியர் சமூகத்தின் ஆதரவு பெருமளவிற்குக் கிடைக்க வேண்டியது அவசியமாகின்றது

## தண்டனை . . .

... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்நியன் ஒருவன் வருகையால் தன் வீட்டில் அடிக்கடி நடக்கும் மிக அநாகரிகமான சண்டைகளும் இந்தநித்திரையின்மையும் தனக்கு நிரந்தரமானதண்டனைகளாகி விட்டது குறித்துவேதனைப்படுவது தவிர வேறுவளியேதும் தெரியவில்லைஅவனுக்கு! ●

## இந்துபோர்ட் . . .

தீர்மானித்துள்ளதாகக் கூறினுர். டொன மூர்த்திட்டம் தேசாதிபதி அவர்களுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கியமையையும் காரியதரிசிகள் மூவர் அதிகாரங்களைப் பொத்திக் கொண்டமையும் சுதந்திர ஆட்சிக்கு முட்டுக் கட்டைகளாகும் என்ருர்.

அடுத்தநாள் இளைஞர்களும் ஒன்றியொதுக்கல் செய்த வேட்பாளர்களும் யாழ்ப்பாணக் கச்சேரியில் யாரேனும் மனுக்களைத் தாக்கல் செய்யாதவாறு காவல் இருந்தார்கள் உரிய நேரம் கழிந்ததும் அரசாங்க அதிபர் அலுவலகத்தைப் பூட்டிச் சென்ருர். அரசாங்க சபையின் ஒன்றியொடுக்கல் யாழ்ப்பாணத்தில் காங்கேயன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் தீவுப்பற்று ஆகிய நான்கு தொகுதிகளிலும் நிலவுவதாயிற்று.

(தொடரும்)

## கைலாசபதி...


...4 ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர் இங்கேயே தங்கி இருப்பாரானுல் அது அற்புதமானதாக இருந்திருக்கும். அவருடைய புலமை சார்ந்த சாதனைகளுக்கும் திறமைகளுக்கும் இந்த நாட்டில் அவருக்கு ஒரு தகுந்த பதவியை எங்களால் எளிதாகப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். ஆனுல் கைலாஸ் தமிழ் எங்கு பேசப்படுகின்றதோ அங்கேயே வாழ விரும்பினுர். கைலாஸுடன் எங்களுக்குக் குறுகிய காலமே பழக்கம் இருந்திருப்பினும் எனக்கும் பிறருக்கும் அவர் ஒரு வாழ்நாள் நண்பனுக மாறி விட்டார். அவருடைய இழப்பை நாங்கள்பெரிதும்உணர்வோம்.

எம். ஏ. நுஃமான்




## இந்த மாதக் கோலம்



நிறைகுடம் மங்கலப் பொருட்களில் முக்கியமான ஒன்ருக கருதப்படுகிறது. இதனை கோலமாகப் போடும்போது லக்ஷ்மி கடாட்சம் நிறைந்திருப்பது போன்று புதுஉணர்வு ஏற்படும்.

இக் கோலத்தினை பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கும் கிருகப்பிரவேசம், திருமணம் போன்ற சடங்குகளுக்கும் போடலாம். இதனை மா கரைத்து, மாதூவி, வர்ணம் சேர்த்தும் போட்டுக் கொள்ளலாம். மாதூவி போடும் பொழுது மஞ்சள்மா, அரிசிமா, குங்குமம் போன்றவற்றினை சேர்த்துப் போடலாம்.

வர்ணம் சேர்ப்பதானுல், குடத்திற்கு மஞ்சள் நிறத்திலும், அதனை அலங்காரப்படுத்தும் கோட்டிற்குள் உள்ள பகுதியினை செவ்விளநீர் நிறத்திலும், தேங்காயினை மெல்லிய மஞ்சள் நிறத்திலும் மாவிலை, வாழையிலை போன்றவற்றிற்கு அதற்குரிய வர்ணம் சேர்த்தும் போட்டுக் கொள்ளலாம். குத்து விளக்கிற்கு மஞ்சள், செவ்விளநீர் இரு நிறங்களையும் மாறிமாறிக் கொடுக்க அழகாக இருக்கும். சுடருக்கு நடுவே சிவப்பு வைத்து மேலே மஞ்சள் நிறமாகக் கொடுக்கலாம்.

திருமதி. நா. சோமசுந்தரக்குருக்கள்

## குற்றமும் . . .

...8ஆம் பக்கத்தொடர்ச்சி

அக்கினியின் வாயிலாக மிகத் திறம்பட நிறைவேற்றப் படுகின்றது! ஆனுல் இது இவ்வளவோடு முடிந்து விடவில்லை.

"அன்று தொட்டுப்(மதுரை மூதூர் எரியுண்ட நாள்முதல்) பாண்டியநாடு மழைவறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்கு (பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு) பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால்விழாவொடுசாந்திசெய்ய நாடுமலிய மழை பெய்து நோயுந் துன்பமும் நீங்கியது"

தெய்வமாகிவிட்ட கண்ணகியின் சீற்றம் இவ்வாறு வெற்றிவேற் செழியன் பொற் கொல்லர்ஆயிரவரைக் கொன்று களவேள்வியும் விழாவும் சாந்தியும் செய்த பின்னரே முற்ருக அடங்கிற்று

இலங்கையின் வரலாற்றிலே பழிவாங்கும் தண்டனை மூலம் தமது பெயர்களை நிலைநாட்டிக் கொண்ட ஆட்சியாளர் பலர் பவனிவருகின்றனர். பௌத்தசமயக் காவலனும் தமிழரை வென்று இலங்கை முழுவதையும் சிங்கள ஆதிக்கத்தினுள் கொணர்ந்தவனுமான மன்னன் துட்டகாமினி (கி மு. 161-137) தமிழரோடு போரிட அனுமதி வழங்காத தன் தந்தைகவந்தீசனைப் பழிவாங்க அவனுக்குப் பெண்கள் அணியும் ஆடை அணிகளை அனுப்பி வைத்துத் தன் கண்டனத்தை வெளியிட்டான். ஆதிக்க ஆசையாலும் காமவெறியாலும் தன் கணவன் உள்ளிட்ட மூவரை அடுத்து நஞ்சூட்டிக் கொன்ற அனுலா (கி மு. 47-42) வைக்குடக் கன்னதீசன் என்ற மன்னன் உயிருடன் எரியூட்டிக் கொன்ருன். இதே தண்டனையைத் தாதுசேன மன்னன் (கி. பி. 459-477) தன் மகளைக் கொடுமைசெய்தவள் என்ற காரணத்திற்காய்த்தன் உடன் பிறந்தாளுக்கு வழங்கினுன். தாதுசேனனின் மகனுகிய காசியப்பனே (கி. பி. 477-495) தந்தை திரவியப் புதயலைக் காட்டுவதாய் ஏமாற்றியமைக்காக உயிரோடு காலவீவாச் (ததுசேனன் கட்டிய குளம்கவரிலேசமாதிவைத்தார்

எங்கள் சமகாலத்திலே உகண்டாவின் சர்வாதிகாரியான இடியமீன் தன் பகைவர்களைப் பழிவாங்கக் கையாண்ட கொடுஞ்சித்திரவதைகள், கொலைகள் பற்றி வரலாறு நிலையான பதிவுகளைக் கொண்டிருப்பதையும் நாம் அறிவோம்.


திருச்சிற்றம் பலம்

# ஆசிரியமணி பண்டிதர் இ. மருதையனுர் அவர்கள்



தோற்றம்: 9-1-1902

நிறைவு: 26-12-1988

## பாடாணத் தாபனமும் சபிண்டியும் ஞாயிறு 15-01-1989

காலை 6 மணி : பாடாணத் தாபனம்
காலை 10 மணி : சபிண்டி – வீட்டுக்கிரியை 'மந்திரத்தில்'

ஆசிரியமணி குடும்பத்தினர் அனைவரும் நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ளும்படி உங்களை வேண்டுகின்றனர்.

வணக்கம்

'மந்திரம்
வேலணை.

பொ. கேதாரநாதன்

01360

VARAMURASOLI — REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 15 . 01 . 1989 ஞாயிற்றுக்கிழமை

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டு வீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

★ மீண்டும் பாடசாலை நிர்வாகத்திடம்

# ஹாட்லி கல்லூரி நேற்று கையளிப்பு

(பருத்தித்துறை)

இந்திய அமைதிகாக்கும் படையினர் வசமிருந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி தைப்பொங்கல் தினமான நேற்று சம்பிரதாய பூர்வமாக கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. பருத்தித்துறை கல்லூரி வீதியும் போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டது.

பலாலி இராணுவ முகாம் மேஜர் ஜெனரல் சர்தேஸ் பாண்டே ஹாட்லி கல்லூரி அதிபர் திரு. பொ. பாலசிங்கத்திடம் கல்லூரியைக் கையளித்தார்,இதுவரை காலமும் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்தபருத்தித்துறை கல்லூரி வீதியையும் மேஜர் ஜெனரல் சர்தேஸ் பாண்டே போக்குவரத்துப் பாவனைக்காகத் திறந்துவிட்டார்.

இக்கையளிப்பு வைபவத்தையொட்டி ஹாட்லி கல்லூரியில் விசேட பூசைகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன. ஹெலிகாப்டரில் வந்திறங்கிய மேஜர் ஜெனரல் சர்தேஸ் பாண்டே உட்பட இந்திய அமைதிகாக்கும் படை உயரதிகாரிகள் மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். கல்லூரி வாசலில் வைத்து மேஜர் ஜெனரல் சர்தேஸ் பாண்டேயும் உயரதிகாரிகளும் வடமராட்சி கோட்டக் கல்வியதிகாரி, செல்வி ரீ. பெரியதம்பி, அதிபர் திரு. பாலசிங்கம் ஆகியோரால் வரவேற்கப்பட்டனர்.

ஹாட்லி கல்லூரியைச் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்த பின்னர் மேஜர் ஜெனரல் சர்தேஸ் பாண்டே இங்கு உரையாற்றினர்.

கல்லூரி அதிபர் திரு. பாலசிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ஹாட்லிக் கல்லூரி தற்பொழுது151-வது ஆண்டிலே காலடி எடுத்து வைத்துள்ளது. இக்கல்லூரியின் அபிவிருத்தியும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியுமே எமது குறிக்கோளாகும். இதற்கு எம்மாலான சகல நடவடிக்கைகளையும் நாம்மேற்கொள்ளத் தவறக்கூடாது என்றார்.

இவ்விழாவிலே யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா, யாழ். நகர கமாண்டர் பிரிகேடியர் ஆர். ஐ. எஸ். காலோன், பிரிகேடியர், கே. எஸ். சந்து, யாக்கரை பிரிகேடியர் சாமிரும், லெப்டினன்ட் கேர்ணல் எஸ். எஸ். கொஸ், கேர்ணல் அஞ்சுலா, புலோலி முகாம் சிவில் நிர்வாக பொறுப்பாளர் மேஜர் சுகுமார், கல்வியதிகாரி எஸ். சண்முகநாதன், கல்வித் திணைக்கள பொறியியலாளர் திரு. அன்ரனி பிரான்சீஸ், ஆசிய அபிவிருத்தி வங்கி பொறியியலாளர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி, பருத்தித்துறை ஸ்ரீலங்கா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். நெவில் மோசஸ், இன்ஸ்பெக்டர் எஸ். கமலேஸ்வரன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம், ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மேலும் 18 ஆசிரியர்களுக்கு நாளையிலிருந்து இடமாற்றம்

மேலும் பதினெட்டு ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்துக்குள்ளேயான இடமாற்றத்தைப் பெற்றுள்ளனர். பதினாறும் திகதி திங்கட்கிழமை முதல் இந்த இடமாற்றங்கள் அமுல் செய்யப்படவுள்ளன.

இந்தபட்டியலையும்சேர்த்து இதுவரை சுமார் முந்நூறுக்கும் அதிகமானோருக்கு இம்முறை உள்ளூர் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாகப் பலவருடங்கள் சேவை புரிந்தவர்களே இம்முறை இடமாற்றம் பெற்றவர்களில் அநேகமானோராவர்.

நேற்று வெளியான பதினெட்டு ஆசிரியர்களினதும் இடமாற்றப்பட்டியலுடன் இவ்வருடத்திற்கான உள்ளூர் இடமாற்றங்களில் அநேகமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

### அமெரிக்க..

செய்வதற்காக கடந்த செவ்வாய்க்கிழமை நால்வர் அடங்கிய அமெரிக்கக் குழுவினர் நூலக கட்டடத்தைப் பார்வையிட்டனர். இந்நால்வரில் ஒருவர் அமெரிக்காவைச் சேர்ந்த கட்டடப் பொறியியலாளர் எனவும் தெரியவருகிறது.

நூலகத்தைப் பழைய இடத்தில் கட்டுவதா அல்லது வேறு இடத்தில் புதிதாக நிர்மாணிப்பதா போன்ற விடயங்கள் கொழும்பில் நடைபெறவுள்ள உயர் அரசாங்க அதிகாரிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

### பற்குணத்துக்கு...

உணவு ஆணையாளராகப் பணிபுரியும் திரு பற்குணம் அதற்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட உதவி உணவு ஆணையாளராகப் பதவி வகித்தவர்.

ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் சுமார் பத்து வருடங்கள் இவர் பணியாற்றியுள்ளார்.

### பூநகரி..

இடம்பெற்றதால் மன்னார் சங்குப்பிட்டி பஸ் சேவைகள் சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தன. மாலையில் போக்குவரத்துகள் வழமைக்குத் திரும்பின.

ஆனந், ராதா ஆகிய இருவருமே இதில் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

### நானூறு...

ஆகியவைகளின் அதிபர்கள் இம்மாதம் 20ஆம் திகதிமுதல் பயிற்சி நடத்த பாடசாலைகளைத் தர சம்மதித்ததால் ஒரே தடவையில் அனைவருக்கும் பயிற்சி நடத்தக் கூடியதாக விருப்பதாக கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தெரிவித்தார்.

### யாழ். வங்கிக்...

ஊழியர்கள் அல்லாதவர்களே இவ்வாறு முகவர்களாக தெரிவு செய்யப்படுவர்.

முகவர்கள் மூலமாக வங்கிகள் கடனை வழங்கக் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு வங்கிக் கிளைக்கும் மூன்று முகவர்கள் தெரிவுசெய்யப்படுவர்

## கோட்டை முனீஸ்வர ஆலயத்தில் பூசை

பலவருடங்களாக மூடப்பட்டிருந்த கோட்டை முனீஸ்வர ஆலயத்தில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை பதினொரு மணிக்கு பூசை வழிபாடு நடத்தப்பட்டது.

தொடர்ந்து இதே பூசையை இங்கு நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இம்மாத இறுதிக்குள் பொதுமக்கள் இங்கு சென்று பூசை வழிபாடுகளில் பங்கு பற்றக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

### வல்வெட்டித்துறை...

பொதுமக்களும், சைக்கிள்களும் செல்வதற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல் பொது மக்கள் இந்த வீதியைப்பாவிக்கத்தொடங்கியுள்ளனர். கடந்த நான்கு வருடங்களாக இந்தவீதி இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்தது.

## காலமானார்கள்

### சரவணையூர் திருமதி கந்தையா மீனாட்சி

சரவணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவிலடியைவசிப்பிடமாகக்கொண்டவருமான திருமதி கந்தையா மீனாட்சி காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், யோகாம்பிகை, அம்பாலிகை (போதனாசிரியர், நெசவு பயிற்சிப் பாடசாலை, நல்லூர்), சரஸ்வதி, சர்வானந்தன் (புகையிரத நிலைய அதிபர், பளை), ஈஸ்வரி, யோகநாதன் (Globe Rice Mill வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அண்ணாமலை, தங்கராசா (Denmark), காலஞ்சென்ற சுகிர்தரட்ணம், அருளானந்தம் (புகையிரத கட்டிடப்பகுதி, மன்னார்), ரஞ்சனாதேவி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-01-89ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

01385

முடமாவடி,
திருநெல்வேலி.

தகவல்:
க. சர்வானந்தன்
(மகன்)

### கனகசபை விஜயநாதன் (விஜயன்)

(உரிமையாளர் கலா றேடர்ஸ், கிளிநொச்சி,
V. G. Sons கொழும்பு)

இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கனகசபை திருமதி கனகசபை அவர்களினது அருமைப் புதல்வனும், தனகேஸ்வரியின் அன்புக் கணவனும், சிந்துஜாவின் அருமைத் தந்தையும், நவரத்தினம், காலஞ்சென்ற திருமதி நவரத்தினம் ஆகியோரின் மருமகனும், சுந்தரேசன் (பெரும்பாக உத்தியோகத்தர், கமநல சேவை திணைக்களம், யாழ்ப்பாணம்), காலஞ் சென்ற மகேந்திரன், கிருபநாதன் (West Germany), கலாமோகன் (London) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தெய்வேந்திரன் (W. G.), திருமதி நந்தகுமார் யோகேஸ்வரி (W. G.), ரஜனி யோகேந்திரன் (Switzerland) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் அவரது கரம்பொன் இல்லத்தில் நடைபெற்று குடும்ப மயானத்தில் இன்று ஞாயிறு மாலை 3 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
க. சுந்தரேசன்.

"கலாபவனம்"
கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

01389

### தவராசசிங்கம் - கோகுலன்

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திரு. தவராசசிங்கம் (தவம்) அம்பிகாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் கோகுலன் (மகாஜனக் கல்லூரி மாணவன்) 13-01-1989 காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை திருமதி சங்கரப்பிள்ளையின் பேரனும், வரப்பிரகாசம் (அப்பு) அவர்களின் பெருமகனும், மகாஜனக்கல்லூரியைச் சேர்ந்த சுசிகரன், சுதர்சன் ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-01-1989 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கீரிமலை, செம்பியன் வாய்க்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: தவராசசிங்கம்.

01392

### இராஜதுரை மரியாம்பிள்ளை (பிறதர்)

இளைப்பாறிய ஆசிரியர் இராஜதுரை மரியாம்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் திருமதி செல்வம் இராஜதுரையின் அன்புக்கணவரும், ஜூஜன், செல்வஜாணி, தாசன், ஜூஜி புளோ ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதன், தனபாலன், மரியதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரெறன்ஸ்சஞ்சீவ், எறிக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் கரம்பொன் புனித செபஸ்ரியார் சேமக்காலையில் திங்கட்கிழமை (16-01-1989) காலை 9.00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கரம்பொன்,
ஊர்காவற்றுறை.
01384

தகவல்:
F. A. ஜெகநாதன்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஏ, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 15 01-1989 அச்சிட்டு வெளியிடப்பெற்றது